Tamil children's stories

Percy Macqueen.
Ootacamund.
1941.

Vol. III கதைகள்: P.M. 381

Subject. Serial No. of Pages

Subject	No. of Pages
அஞ்சு படிச்ச முட்டாளுக கதை.	1
நாலு திருடனுக ஆனைபாத்த கதை.	7
கிடியான வென் கதை	9
அரிச்சந்தரென் ,,	10
சூதாடி ,,	11
பழைய கருப்பென் கருப்பென் ,,	13
ரெண்டு கலியாணம் ,,	15
~~[illegible]~~ நொசசெத்து முழுளைப்பத்தி சம்பாசனை (incident)	17
வெறனுக்குத் தக்கனெ வீக்கம் கதை	18
தென்னூரு ராமென் மகென் மீன் புடிச்ச ,,	20
,, ,, ,, பூவு திருடுனெ ,,	22
,, ,, ராசாவெயும் மந்திரி-யெயும் ஏமாத்துன ,,	29
,, ,, மகென் கெட்டிக்காரென் வெருத்தனெ ஏமாத்துன ,,	32
,, ,, ரெண்டு சேவுகனுகளை கொள்ளத்துலெ சாகவச்ச ,,	34
,, ,, அம்பட்டன் பாப்பானுகிர ,,	39
,, ,, பிராமணனுகளை சூடு வச்சு ,,	45
,, ,, ராசாவெயும் மந்திரியெயும் சாக்குலெ கட்டுன ,,	51
,, ,, குதிரை வளத்த ,,	57
பூசிக்கா திருடுனவென் ,,	58
நாலு பேரு பணப்பையி கண்டெடுத்த ,,	59
ஆயிரம் கேக்குக்காரி ,,	62
ராசா மகனும் தேவேந்திரென் மகளும் ,,	64
ரொம்ப படிச்சி கம்பரு ,,	72
அடமெ ராசா கதை ,,	75
தெய்வ லோகத்து ரம்பை ,,	82
இங்கெதான் வாருதோண்ர ,,	89
ஒரு பிராமணென் பிச்சயெடுத்து ஏளெட்டுப்பேரை காப்பாத்துனது ,,	90
வெள்ளைக்காரு கிறிஸ்தியானுக்கு வந்த ,,	92
வக்கேலு ஒரு பையெங்கிட்ட ஏமாந்த ,,	99
புத்தியில்லாதவ கிறப்புள்ளையெ கொண்ண கதை ,,	101

UNIVERSITY LIBRARY, 1 APR 1946, MADRAS.

From the Bible

Subject.	No. of Pages.
யூதாசு ஏசுவானவரெ காட்டிக்கொடுத்தது.	102
தீமிர் வாதக்காரென் சொகமானது	103
பேய் புடிச்சவென் ,, .	105
கெட்ட குமாரென் கதை.	106
நல்ல சமாரியென் ,,	108
லூக்கா சுவிசேசத்லெ கொஞ்சம் வசனங்க.	111
எஸ்தரு பொஸ்தகத்லெ ,, ,,	119
யாத்ராகமத்லெ இஸ்ரவேல் சனங்க- -ளைப்பத்தி கொஞ்சம் வசனங்க. }	121
சாலமோன் படிச்ச பாட்டு.	
நாகமான் சொகமானது.	127 – 133.
சவுலு பவுலானது	134
Terminal Mark } Illustrating the Perfect	135
Jesus }	136

Denotes, entered in notebook.

ஒண்ணாங் கதை. Story No. 1. 1.

1. ஒரு ஊர்லெ அஞ்சு படிச்சவங்க இருந்தாங்க. 2. இவங்க அஞ்சு பேரும் ஒருணு ஒரு ஊர்லெருக்ர ஒரு மடத்லெ ஒண்ணுகூடினாங்க. 3. இவங்கெல்லாம் ஒருத்தருக்கொருத்தர் பேசிப்பேசி கடைசியிலெ எல்லாரும் நல்ல படிச்சவங்கண்ணு கண்டுக்கிட்டாங்க. 4. இவங்கள்லெ ஒருத்தன் மத்தவங்களைப்பாத்து "ஐயாமாருங்களே! நம்ம எல்லாம் ஒலகத்லெ என்னென்ன படிப்பு இருக்கோ அதெல்லாம் படிச்சிட்டோம். 5. நம்மளுக்கு மிஞ்சுனவன் ஒலகத்லெ ஒருத்தனும் இல்லெ. 6. ஆனாலும் நம்ம எல்லாம் பட்டினியாக் கெடந்து சாகிறோம். 6. நம்மளுக்கு கஞ்சி ஊத்த ஒரு நாதியுமில்லெ. 7. இப்பிடி நம்ம இங்கெயே இருந்தமின்னா வெட்டிலெ செத்துப் போயிருவோம். 8. அதுனாலெ நம்ம எல்லாஞ் சேந்து ஒண்ணாப் போயி எங்கெயாவது வேற(ா) ஒரு தேசத்துக்குப் போயி அங்கெருக்ர ஒரு பெரிய ராஜாகிட்ட நம்ம படிப்புச் சமத்தெல்லாம்(1) காமிச்சி அவர்கிட்ட நல்ல சம்பாரிக்கலாம். 9. நீங்கெல்லாம் என்ன சொல்றிங்க" ண்ணு கேட்டான்.

10. அதுக்கு மத்தவங்கெல்லாம் சரிசரிண்ணு சொன்னாங்க. 11. கடைசியா எல்லாரும் பொறப்பட்டு வேறெ ஒரு புது தேசத்துக்குப் போனாங்க.

2. ஒண்ணு 8. ஒண்ணா. 3. கடைசியாக 11. கடைசியா.

Margin notes:
assembled = ஒண்ணு
Adv. without ஆ
Dat
? discussed
whatever
Perfect
who excels
6. nevertheless like to die of
have no one to look after our food
6 we shall certainly die
quite unnecessarily
Dict. (1) சமர்த்து, சமத்து strength, skill, ability, expertness. சாமர்த்தியம்
8. Let us go & acquire
Very well!
Adj. quite new

1. Loc. among. of
2. Adj. noted
3. Omission - copula
4. Pronoun - another one
5. Neg: Verb: Adj: - Such as
6. Adj - remarkable
7. பார் - looked into?
8. மதி -
9. Adj. clever
10. தவறாமல் - Certainly
11. that happen. Go on
12. இதைக் கேட்டு. We should not say in English 'hearing this'. We might say 'on which...'
13. அதற்கு அவன் : என்றான் = he replied
14. ஜாலம் - Art ? show an abstract thing
15. கொண்டார் : Reflexive
16. அப்படியே - and so.
17. he ordered .. to be given
18. கொண்டு - Separate acts of a distinct kind performed successively.

23. உங்களுக்கு வேணுமானு - If you like.

25. இவன் 20. இவைகள். 12. இது அறிந்தபோது

35. அது தெரிந்தவன்

2

12. இந்த அஞ்சு பேர்லெ ஒருத்தன் பேர்போன பாட்டுக்காரென். 13. இன்னொருத்தென் ஒரு கெட்டிக்கார வக்கீல். 14. இன்னொருத்தென் ஒரு பெரிய சோசியென். 15. நாலாவது மனுசென் ஒலகத்லெ இல்லாத ஒரு அருமையான வைத்தி-யென். 16. அஞ்சாவது மனுசென் ஒரு வேடிக்கையான இலக்கண வித்துவான். 17. இவுங்கெல்லாம் ராஜா வீட்டுக்குப் போயி அவரெப் பாத்தாங்க. 18. ராஜா வந்து இவுங்க சங்கதியெல்லாம் நல்லா கவனிச்சுப் பாத்தாரு. 19. ரொம்ப கெட்டிக்காரனுங்கன்னு மனஸ்லெ வச்சுக்கிட்டு மந்திரியெக் கூப்பிட்டு, மந்திரி! இந்தப் பெரிய படிப்பாளிகளுக்கு ரொம்ப எனாம் குடுத்து அனுப்புண்ணாரு. 20. மந்திரி இதெக் கேட்டு, மகாராஜாவே! இவுங்க அஞ்சு பேரும் படிப்புலெ பெரிய திறமைக்காரன். 21. ஆனா ஒலகத்லெ நடக்ற சங்கதி இவுங்களுக்கு ஒண்ணுந் தெரியாதுண்ணான். 22. ராஜா இதைக்கேட்டு "நீ என் இப்பிடி சொல்றெண்ணாரு. 23. அதுக்கு அவென் "அப்பிடித்தான் ராஜாவே! ஒங்களுக்கு வேண்ணா நான் அதைக் காமிச்சுத் தர்றேன்," ண்ணான் 24. ராஜா சம்மதிச்சுக்கிட்டாரு. 25. அப்பிடியே இவென் போயி அந்த ஆளுகளையெல்லாம் கூப்பிட்டு, வித்துவான்களே! ராஜா வந்து ஒங்க மேலெ ரொம்ப பிரியமாருக்ராரு. 25. ஒங்களுக்கு ரொம்பப் பணங் குடுக்கச் சொன்னாரு. 26. நீங்க வந்து ஆத்லெ போயி நல்லாக் குளிச்சிட்டு சாப்பிட்டுட்டு வாங்க. 27. அப்பறம் ஒங்களுக்கு வேண்டிய பணந் தர்றேன்" ண்ணான்.

Adj. Very great
Req. V. Adj. Pa. such as
inseparable ... in grammar
V.I.
Extraordinarily clever
Dat.

(1) [illegible] Ruffians

(1a) [illegible]!

(2) [illegible] – meaningless here – "addressed him thus"

(3) [illegible] – [illegible] + [illegible]?

(4) [illegible] – Some at least? a little

(5) (14) [illegible]. using?

(5b)

(6) [illegible] – at the Treasury box

(7) [illegible]
taking them along (with him)

(8) Prm – Catch me

(9) [illegible] – he had to do?

(10) [illegible] – whatever work

(11) [illegible]

(11a) [illegible]

(12) அவுங்கவுங்க வேலையை
their respective jobs

(13) [illegible]. cf (17)
[illegible].

(15) போட்டு – made (up) a breath
[illegible] போட்டு

(16) A kind of bubbling noise was heard
[illegible]. Absolute Participle?
[illegible]. A noise was heard of ... causing

(17) cf. (13)

(14A) [illegible]
he was keeping

14, 15. Dict: [illegible], [illegible], [illegible]
cf. [illegible], [illegible], [illegible], [illegible], [illegible], [illegible]
[illegible], (a) [illegible], (b) [illegible], (c) [illegible]
[illegible] [illegible] உவமைக்கிறது, [illegible]
[illegible]

மந்திரி சொன்னதையெல்லாம் கேட்டுக்கிட்டு
படிச்சவங்க அவனைப் பார்த்து, "ஐயா அவுங்களே!
நாங்கெல்லாம் ரொம்ப ஏழைங்க. எங்க
கையிலெ ஒரு காசு கூட இல்லெ.
நீங்க ஏதாவது தயவு செஞ்சா அதை வச்சு
நாங்க போயி சாப்பிட்டுட்டு வருவோம்.
இல்லாட்டி நாங்க என்னபண்றது" ன்னாங்க.
உடனே மந்திரி ஒரு சேவகனைக் கூப்பிட்டு
"அடே சேவகா! நீ போயி நம்ம ஜெனுவுலெ
இருவது ரூபா வாங்கி இந்தப் பெரிய மனுசர்க
-ளுக்குக் குடு" ன்னான். சேவகன் அப்படியே
இவுங்களைக் கூட்டிக்கிட்டுப் போயி இருவது
ரூபா வாங்கிக் குடுத்தான். இவுங்க ரூபாயை
வாங்கிக்கிட்டு சத்திரத்துக்குப் போயி மொத-
லாவது நல்லாக் குளிச்சாங்க. அப்பறம்
யாரு என்னென்ன வேலை செய்றதுன்னு
பிரிச்சிக்கிட்டாங்க. பாட்டுக்காரனுக்கு
சோறாக்ர வேலை. சோசியனுக்கு சோறு
-தின்ன ஏலை கொண்டுட்டுவர்ற வேலை.
எலக்கணம்படிச்சவனுக்கு தயிர் வாங்கிட்
-டு வர்ற வேலை. வக்கீலுக்கு நெய் வா-
ங்கிட்டு வர்ற வேலை. வைத்தியனுக்கு
காய்கறி வாங்கிட்டு வர்ற (வர்ற = வருகிற)
வேலை. இப்ப எல்லாரும் அவுங்கவுங்க
வேலையைச் செய்யத் தொடங்கியாச்சு.
பாட்டுக்காரென் அடுப்புப் போட்டு ஒலை
-யெ வச்சு அரிசியைப் பானையிலெ போட்டு
வேக வச்சுக்கிட்டிருந்தான். தண்ணி சூட்டு
கொதிக்கக் கொதிக்க ஒரு மாதிரி சத்தம்
-ங் கேட்டுச்சு. இவென் அந்தச் சத்தத்துக்குச்
சரியா தாளம்போட ஆரம்பிச்சான்.

(1) Adv. phrase
[illegible] on its own account

(2) [illegible]
did not at all fit in with
correspond with

(3) Imp. for Pent. (6) had an idea (10)

(4) [illegible] – little aim

(5) ஒரு [illegible] போனது
an instance: + போனது got broken.

(6) 4 (3)

(7) [illegible] – support

(8) kept thinking as he came along
came along

(9) it came that perhaps ~~that~~ the ghee may (?) support the pot

(10) உண்டானது
a suspicion arose that
he had a suspicion that

(11) [illegible] – to upset.

(12) Spell

(13) In the end

(14) empty handed

(15) ?

(16) knot?

முகத்தைச் சுளித்துக்கொண்டு – with a frowning face.

(1)

[on its own account.] தண்ணி வந்து கண்டையது சத்தம் போட்டுக்கிட்
-டிருந்துச்சு. அதும் ஒரு தாளம் போல இருந்துச்
சு. இவென் அந்தத் தாளத்துக்குச் சரியாத்-
தாளம் போட்டுக்கிட்டே இருந்தான். ஆனா
இவென் போட்ட தாளத்துக்கும் அது போட்ட
× தாளத்துக்கும் ஒண்ணும் சரிப்படலை. (2)
அதுனாலெ இவனுக்கு கோபம் வந்துருச்சு. (3)
[lifted his leg & gave the pot a kick.] (4) உடனே இவென் ஓங்கி ஒரே ஒதையா
பானையை ஒதைச்சான். பானை கீழே
விழுந்து ஒடைஞ்சு போச்சு. (5) இவென் வாயி
-லெ கையை வச்சு உக்காந்துக்கிட்டிருந்தான்.
[What the vakil did was to...] வக்கீல் இவென் என்ன செஞ்சாண்ணா, ஒரு
சின்னக் கோப்பையை எடுத்துக்கிட்டு கடைக்குப்
போனான். அங்கெ போயி மூணு ரூபாய்க்கு
நெய் வாங்கினான். வாங்கிக்கிட்டு சத்ரா
-த்துக்குத் திரும்பி வர்றபோது இவனுக்கு ஒரு
நெனைவு வந்துச்சு. (6) அதென்னண்ணா, கோப் (7)
-பெ நெய்யைத் தாங்கிக்கிட்டிருக்கா, இல்லாட்டி
[He held up support] நெய் வந்து கோப்பெயைத் தாங்கிக்கிட்டிருக்கா.
எது வந்து எதைத் தாங்கிக்கிட்டிருக்குண்ணு (8)
யோசித்துக்கிட்டே வந்தான். வீட்டுக்கிட்ட
வர்றபோது ஒருவேளை நெய்யிதான் கோப் (9)
-பெயைத் தாங்கிக்கிட்டிருக்கும் போல இருக்குண்
-ணு ஒரு சந்தேகம் உண்டாச்சு. (10) அதுனாலே (11)
[That led to upset] இவென் கோப்பெயைக் கவுத்துனான். உடனே
கோப்பெயிலெ இருந்த நெய் கீழே கொட்டி
[கொட்டிருச்சு?] -டுச்சு. (12) (13) கடையிலெ இவென் ஏமாந்துட்டா
-ன். மூஞ்சியைத் தூக்கிக்கிட்டு வெறுங்-
[empty-handed] கையா (14) வீட்டுக்கு வந்தான். இப்பிடி
? பாட்டுக்காரனும் வக்கீலும் அவுங்க வேலெ
-யெல்லாம் காமிச்சுட்டாங்க. (15) இன்னி (16)
மத்தவங்க என்ன செய்றாண்ணு பாக்கலாம்.

Reduplication. 20.

விற்றுச்சு - was sold out.

If everyone says [illegible] [illegible]

17. <u>சோசியென்.</u> இவென் வந்து எலெ புடுங்கப் போறான். 18. ரோட்டுமேலெ ஒரு ஆலமரம் இருந்துச்சு. 19. அந்த மரத்லெ இவென் ஏறுனான் ஏறி எலெமேலெ கையெ வச்சான். 20. அப்ப ஒரு பல்லி வந்து "ச்ள் ச்ள்"ண்ணு சத்தம் போட்டுச்சு. ஒடனே இவென் பயந்துட்டான். 21. இவென் என்னு நெனைச்சாண்ணு "அடடே, இதென்ன எலையெத் தொட்ற போது இந்தப் பல்லி என்னமோ சொல்லுது. 22. இனி அதைப் புடுங்கிட்டா நம்மளெ என்ன செய்யுமோண்ணு நெனைச்சு ஒடனெ 23. இவென் கீழெ எறங்கிட்டான். எறங்கி வீட்டுக்கி ஒரே ஓட்டம் புடிச்சுட்டான். 24. அங்கெ போயி எல்லாத்துகிட்டயும் சங்கதியெச் சொன்னான்.

Loc:

Now- After that

25. <u>வைத்தியென்.</u> இவென் வந்து காய்கறி வாங்க கடைக்குப் போறான். 26. இங்கெ வந்து எல்லாம் வித்துச்சு. 27. கத்தரிக்காயெப் பாத்து "இது சூடு" முருங்கக்காயெப் பாத்து "இது வயித்தை வலிக்கும்" பூசணிக்காயெப் பாத்து "இது வாதம்"ண்ணுட்டு 28. இந்த மாதிரி எல்லாத்துக்கும் இத்தென் சொல்லிக்கிட்டே இருந்தான். 29. கடேசியிலெ பயந்து போயி திரும்பி வீட்டுக்கி வந்துட்டான்.

Sold out?

what are these vegetables?

30. <u>எலக்கணம்படிச்சவென்</u> இவென் வந்து தயிறு வாங்கப் போறான். 31. வழியிலெ ஒரு தயிருக்காரி தயிரோ ஓ ஓ ஓ தயிரு ண்ணுட்டு கத்திக்கிட்டு வந்தா. 32. இவென் அவளெப் பாத்து "ஏம்மா, இதென்ன. எல்லாம் தயிரோ தயிருண்ணு நீ என்னமோ ஓ ஓ ஓண்ணு குதை மாதிரி கத்துறியே. 33. ஓ. ஓ. ஒங்கிட்டயா மனுசென் தயிறு வாங்குறது. 34. ஒனக்கு எலக்கணம் சுத்தெ-ரியலை ஒண்ணுந்தெரியலை"ண்ணு சொல்லிக்கிட்டு சும்மா வந்துட்டான். தயிறு வாங்கலெ.

P.T.O

1. கௌரவமிக்க மகாகனமும் மேன்மையும்
சங்கையும் பொருந்திய ஐயா அவர்களுக்கு
ரொம்பத்தாழ்மையா கோடா கோடி நமஸ்
—காரஞ் செஞ்சு எழுதுறது என்னன்னா,
2. நானும் எம் புள்ளை குட்டிகளும் நல்லா
சொகமாருக்கோம். 3. ஒங்க சொகத்தை
ஒங்க காயிதத்லெ அறிஞ்சுக்கிட்டேன்.
4. நீங்க அருமையா அனுப்புன ரூபா
வந்து சேந்துச்சு. 5. எனக்கு ரொம்பச்
—சந்தோஷம். 6. இதுக்காக ஒங்களுக்கு
ரொம்ப நன்றி செலுத்துறேன்.
6. இப்ப ஒரு கதை அனுப்பிருக்கிறேன்.
7. ஒங்களுக்கு எல்லாம் நல்லா வெ—
ளங்கிக்கிருச்சுன்னா எனக்கு
ரொம்பப் பெருமையாருக்கும்.
8. ஒரு வேளை வெளங்காமெருக்கிற
வார்த்தைகளுக்கு அர்த்தம் எழுதிருக்கிறேன்
9. College [illegible] அப்பறம் அனுப்புறேன்.
10. இந்தக் கதை ஒரு வேளை ரொம்பப் பெரிய
கதைன்னு நெனைச்சு நான் பயப்படுறேன்.
11. ஆனா ஒங்களுக்கு இந்த மாதிரி பிரிய
—மில்லென்னா தயவு செஞ்சு எழுதுங்க.
12. நான் வேண்ணா சின்னச் சின்னக்கதையா
எழுதி அனுப்புறேன். 13. இது பெருசா—
இருந்தாலும் ஒரு வேடிக்கையான கதை.

இப்படிக்கு

14. ஒங்க மேலே ரொம்ப பிரியமுள்ள

[illegible]

the others

35. இவென் மத்தவங்ககிட்ட வந்து இவென்-
செஞ்ச வேலையெச் சொன்னான்.

Chuckled? 36. இப்பிடி ஒவ்வொருத்தனும் அவென் அவென்
செஞ்ச வேலையெச் சொல்லி கெக்கெபோ-
Burst into laughter ட்டுச் சிரிச்சுகிட்டுக் கெடந்தாங்க.

37. இந்த வயித்தெரிச்சல் நேரத்லெ மந்திரி
யெப் பாத்து ராஜா "மந்திரி! நம்ம
விருந்தாளிகளெல்லாம் எப்பிடிருக்காங்க-
ன்னு பாத்திட்டு வா" ன்னான். 37. மந்திரி
அப்பிடியே போயி இவங்களெ விசாரிச்-
VT questioned சான். 38. எல்லாம் அறிஞ்சுக்கிட்டு ராஜாகி
-ட்ட வந்து சொன்னான். 39. ராஜா ஒடனே
அவங்களெயெல்லாம் கூப்பிட்டு நேர்லெ
விசாரிச்சான். 40 இவங்க ஒண்ணியும்
Vb: concealed ஒளிக்காமெ நடந்ததெல்லாத்தியும் சொ
-ல்லிப்புட்டாங்க. 41. மந்திரி ராஜாவெப்பாத்து
"ராஜாவே! நாஞ் சொன்னது சரிதானா"
ன்னு கேட்டான். அதுக்கு ராஜா "ஆமா
மந்திரி. 42. நீ ரொம்ப கெட்டிக்காரன். ஆனா
பரவால்லெ. இவங்களுக்கு கொஞ்சஞ்சாஸ்தி
பணங் குடுத்து அனுப்பு" ன்னான். 43. அப்பிடியே
மந்திரி இவங்களுக்குச் செஞ்சான்.

44. இவங்களெல்லாம் பணத்தெ வாங்கிக்கிட்டு
happily ரொம்பக் குஷாலாப் போய்ட்டாங்க.
ability 45. ராஜா இவங்க வகுசியெப் பாத்து சிரிச்-
incarnation? சான். 46. இந்தக் கதெயிலெ நம்ம என்னெ
? படிக்கிறோண்ணா, ஒலகத்லெ எம்புட்டு
படிச்சிட்டாலும் பரவால்லெ. 47 நம்மளுக்கு
ஒலகத்லெ எப்பிடியெப்படி புத்தியா நடக்
கணுமோ அப்பிடியெல்லாம் நடந்துக்கணு-
ன்னு நல்லாத் தெரியணும். இல்லாட்டி
P.T.O troubles இவனுக பட்ட பாடுதான் நம்மளும் படணும்.
அதுனாலெ பெரியமானவங்களெ நம்ம எல்லாம்
ரொம்ப புத்திசாலித்தனமா இருந்து பொழைக்கணும்

Page No. 1

மடத்லெ = மடத்திலே = Root மடம் = Choultry.

ஒலகத்லெ = உலகத்திலே = " உலகம் = World

மிஞ்சுணவென் = மிஞ்சினவன் = " மிஞ்சு = to excel (verb)

நாதி = Someone who cares for the other.

வெட்டி = unnecessary டி long 'ī' to emphasise

சமத்து = சாமர்த்தியம் = Skilfulness.

காமிச்சு = காண்பித்து = having shown

புதா = புது = new. தா to emphasise

Page No. 2. பெரீய = பெரிய = ~~Big~~ great. ரீ exclamation.

பேர்போன = famous

சோசியன் = ஜோதிட சாஸ்திரி = astrologer

இலக்கண வித்துவான் = grammarian.

மனஸ்லெ = மனதிலே = In mind. Root மனது.

கிராஜக = கிரான்கன் = Extraordinarily clever

ஆத்லெ = ஆற்றிலே = In the river. Root ஆறு.

Page No. 3

ஏளை = ஏழை = Poor

எலெ = இலை = Leaf

தாளம் = Keeping time

Page No. 4

தண்ணி வந்து. வந்து has no meaning

கண்டபடி = இஷ்டப்படி according to the wish

ஓங்கி = Root ஓங்கு = action of lifting hand or leg.

ஒதெ = உதை = Kick

தாங்கி = to support.

கவுத்து = கவிழ்த்து. Root கவிழ் to upset

இன்னி = இனி. henceforth. also means 'Now'

Page 5

அடடே = Surprise with fear. Also feeling for any loss.

அடடா = expressing sympathy

வித்துச்சு = விற்றது = was sold. although it is Transitive verb.

வயித்தெ = ~~வ~~ Root வயிறு Stomach

குத்தம் = குற்றம் = Fault

Page 6 கெக்கெ போட்டுச்சிரி. Burst into laughter.

நேர்லெ = நேரிலே = Direct. In person

சரித்தானா = சரிதானா = Is it correct.

ஜோர் = happiness / அருகதை = ability (in mockery) / பொளெ = பிழை = Live

Tiruttani கிராம முன்சீப்தாருக்கு

தயவுசெய்து கீழ்கண்டிருக்கும் சாமான்களை கொடுக்கவும்.

Item.		Quantity	Value Rs.	A.	P.
Bran	தவுடு				
Charcoal	கரி				
Cocoanut	தேங்காய்				
Curry stuff	மசாலைசாமான்				
Dholl	பருப்பு				
Duck	வாத்து				
Eggs	முட்டை				
Firewood	விறகு	—			
Fish	மீன்				
Fowl	கோழி				
Jaggery	வெல்லம்				
Kerosene oil	மண்ணெண்ணை	[illegible]	[illegible]		
Limes	எலுமிச்சம்பழம்				
Milk	பால்	4 ol.			
Mutton	ஆட்டுக்கறி				
Nuts	கொட்டை				
Onions	வெங்காயம்	—			
Pigeon	புறா				
Plantains	வாழைப்பழம்				
Poppadams	அப்பளாம்				
Potatoes	உருளைக்கிழங்கு				
Rice	அரிசி				
Soupmeat	எலும்பு				
Sugar	சர்க்கரை	1 Viss			
Vegetables	காய்கறி				

Sweethead. 4.

7-12-192 . [illegible] Collector.

[illegible] One day they [illegible] together [illegible]
[illegible]
... As they were talking, the people [illegible]
[illegible] said "The elephant is coming,
~~the elephant is coming!"~~ Then these men
stood forward and kept saying "What is it,
what is it?" The elephant gradually
came near. And the bell round its
neck kept ringing (?) dang, dang, dang.
When the mahout came close to them he
stopped the elephant. The blind men
went up to him & said "Sir, we want
to examine the elephant" & asked the
~~[illegible] let them do so~~. The mahout
[illegible] very well. One of the blind
men went & [illegible] hold of the [illegible]
elephant's leg and
examined it. [illegible] what he said
[illegible] the elephant is like a mortar.
The second blind man went & seized the
trunk & examined it. Then [illegible] what he
[illegible] "See, sir, the elephant is like a
~~[illegible]~~
Another blind man went and seized
the ear & examined it. This is what
he said: "See how you are [illegible]
the elephant is like a winnowing
fan." [illegible] & touched & examined
[illegible] the [illegible] blind [illegible]
This is what he [illegible] & examined its tail
what he [illegible] was [illegible]
[illegible] said [illegible] what you all say
[illegible]

1. Order
2. Style
3. Expletives
4. Comp. Writ.

S. Story No. 1



படம்

இருந்த அஞ்சு பேரும்.

NOTE ON THE NIL

1. It is as
groups agree th
Nilgiris Distri
the efforts of

2. Before t
consider itself
the agreement c
it. Chairmen
approval of the
Nilgiris War Wo

3. The mai
Nilgiris War W
administer all
groups. At le
Ootacamund and
Suggested that
should state pr
heads of groups
a formal staten

Repetition or Continuance, don't distinguish with ... two kinds of action
1. Repet- Kept asking
2. Continue Kept laughing?

COPIED

No. 1.

c/o. Miss. Erikson,
Y. W. C. A.,
Vepery P.O.,
Madras,
12th Sept. '36.

மகாஸ்ரீ மகாகனம் பொருந்திய ஐயா அவர்களுக்கு
ரொம்ப வணக்கமா நமஸ்காரஞ்செஞ்சு எளுதுறது.
என்னென்னா, நான் நல்லா சொகமாருக்கிறேன்.
அப்பிடியே நீங்களும் சொகமாருப்பீங்கண்ணு
நம்புறேன். ஒங்க காயிதம் வந்து சேந்துச்சு.
அதுலெருக்கிற சங்கதியெல்லாம் அறிஞ்சுக்கிட்டேன்.
நீங்க எளுதுனமாதிரி நான் இப்ப ஒரு கதை
எளுதுறேன். இந்தமாதிரிதான் நீங்க சொன்னீங்க
ளா, இல்லாகட்டி வேறெமாதிரி சொன்னீங்களா?
தயவு செஞ்சு எனக்கு பதில் எளுதுங்க.
இப்பிடித்தாண்ணு நான் நெனைக்கிறேன்.
அதுனாலெதான் நான் இப்ப எளுதுறேன். ஒங்களுக்கு
இது பிரியமாருக்கிண்ணு நம்புறேன்.

இப்படிக்கு
ஒங்களுக்கு ரொம்ப கீள்ப்படியிற
Barnabas Joseph.

Order of Adverbs
1. [illegible] Time
2. [illegible] Manner
3. [illegible] Place

நாலு திருடங்களும் ஒரு யானையும்

1. ஒரு ஊர்லெ நாலு திருடனுங்க இருந்தான்ங்க.
2. அவங்க நாலுபேரும் ஒருநா (one day, ஒரு நாள்) ஒண்ணுசேந்து ஊருக்கின்னெ போனாங்க.
3. போறபோது வழியிலெ போற ஆளுகளெல்லாம் யானெ வருது யானெ வருதுண்ணாங்க. (~~Past~~ Pres. for Past)
4. அப்ப இவங்க ஒரு ஓரத்லெ நிண்ணுகிட்டு அது என்ன அது என்னண்ணு கேட்டுக்கிட்டே இருந்தாங்க. 5 பையாப்பையா (slowly) யானையும் கிட்டத்லெ வந்திருச்சு. ('Has come' 'was coming'?)
6. யானெ கழுத்லெருக்கிற மணி வந்து (வந்து = not actually coming, but coll: expression) டைண், டைண், டைண்ணு அடிச்சுக்கிட்டு வந்துச்சு.

7. இவன்கக்கிட்ட வந்து யானைக்காரன் யானையை நிறுத்துனான். 8 திருடன்க அவன்கிட்டப் போயி "ஐயா, எங்களுக்கு யானையைப் பாக்க பிரியமாருக்கு. கொஞ்சம் பாக்க விட்றிங்களாண்ணு" கேட்டான்க. அதுக்கு யானைக்காரன் வந்து "சரிண்ணான்"

1. 9. ஒரு திருடென் போயி காலைப்புடிச்சுப் பாத்தான். அவென் என்ன சொன்னாண்ணு "டே, யானை வந்து... ஒரலு மாதிரி இருக்குது, பாருங்கடா—ண்ணான்.

2. 10 ஒண்ணொரு திருடென் போயி தும்பிக்கையைப் புடிச்சுப்-பாத்தான். 11. அவென் என்ன சொன்னாண்ணு, "டே, யானை வந்து... ஒலக்கை மாதிரி இருக்கு-துங்க, பாருங்கடாண்ணான்"

3. 12. ஒண்ணொரு திருடென் போயி காதைப்புடிச்சுப்-பாத்தான். 13. அவென் என்ன சொன்னாண்ணு, "டே, பாத்திங்களாடா, யானை வந்து... மொறம் மாதிரி இருக்குது, கிட்டத்தில வந்து தொட்டுப்பாருங்கடாண்ணான்.

4. 14. இன்னி நாலாவது திருடென் வர்றான். 15. இவென் என்ன செஞ்சாண்ணு, வாலை புடிச்சுப்பாத்தான். பாத்தஒடனே "டே, நீங்க சொல்றதெல்லாம் பொய்யிடா, வாலைப்புடிச்சுப்பாருங்கடா! 16. நெசம் நெசமா யானை வந்து தொடப்பம் மாதிரி இருக்குது. 17. வாங்கடா வாங்கடா—ண்ணான்.

18. இப்பிடி இவன்க நாலு பேரும் அடிச்சு கரையேறிக்கிட்டுக் கெடந்தான்க.

"அடித்துக் கரையேறு" is a phrase colloquially used for "continuous quarrel"

19. யானைக்காரென் இவன்க செய்றதைப் பாத்து சிரிச்சுக்கிட்டுருந்தான்.

20. வர்றவங்க போறவங்க எல்லாம் இதைப் பாத்து வயிறு வலிக்காப்பிலெ சிரிச்சுக்கிட்டு கெடந்தாங்க.

கதை முடிஞ்சு போச்சு.

=

(Margin notes: do so — i.e. d, sound — wants to proceed? — பாத்தான் - here, 'examine', 'try' — Took hold of the leg & examined it — Note பாத்தான் பாத்த ... when in Eng we should merely say examined and at me — Come away — But has கரையேறு = land, get ashore, be saved — burst in laughing / continued to laugh)

III

1. ஒரு ஊர்லெ ஒரு கிழவனவென் இருந்தான்.
2. அவென் ரொம்ப நல்லவனுவும், பிரியமா பேசறவனுவும், பசியாருக்கிறவங்களைப் பாத்து மனம் பொறுக்காதவனுவும் இருந்தான்.
3. ஆனா அவென் பொண்டாட்டி இதுக்கு நேர் விரோதம்.
4. பிரியமான வார்த்தையே அவளுக்குப் பேசத் தெரியாது.
5. பசியாருக்கிறவங்களைத் தொரத்துவா. 6. ஒருத்தருக்கும் ஒரு ஒதவி செய்யமாட்டா. 7. இப்பிடியிருக்கிறபோது, ஒரு நா அந்தக் கிழயானவென் தான் வீட்டை விட்டு வெளியே பொறப்பிட்றபோது, வாசப்படிகிட்ட ஒரு கௌ(ழ)வி படுத்துக்கிட்டிருந்தா. 8. அவ கண்ணெல்லாம் குளியாருந்துச்சி.
9. தலையெல்லாம் நரைச்சிருந்துச்சி. 10. ஒரு கந்தலைத்தான் கட்டிக்கிட்டிருந்தா. 11. இவளைப் பாத்ததும் கிழயானவனுக்கு ரொம்ப எரக்கம் வந்துச்சு. 12. கீளெ குனிஞ்சி அவளைப் பாத்து "அம்மா, நீங்க ஏன் இப்பிடி படுத்துக்கிட்டிருக்கிங்க. ஒங்களுக்கு என்ன வேணும்." ண்ணு கேட்டான்.
13. இவ யாரு தெரியுமா? 14. இவதான் ஔவையாரு.
15. நல்ல பாட்டெல்லாம் பாடத் தெரியும் இவளுக்கு.
16. இந்த மாதிரி பிரியமான சத்தத்தைக் கேட்டதும் ஔவையாரு கண்ணைத் தொறந்து பாத்து "அப்பா, ரொம்ப நாளா சாப்பிடலெ நான். 17. சட்டுண்ணு கொஞ்சம் கஞ்சி குடுத்தியின்னா ரொம்ப நல்லது" ண்ணா. 18. அதைக் கேட்டதும் வேகமா உள்ளெ போயி, உள் வாசப்படிகிட்ட போனதும் ஜெதுவா நடந்து, தன் பொண்டாட்டி என்ன செஞ்சிக்கிட்டிருக்கா ண்ணு பாத்தான். 19. அவ மாவரைச்சிக்கிட்டிருந்தா.
20. இவனும் சிரிச்சிக்கிட்டே போயி அவகூடச் சேந்து மாவரைச்சிக்கிட்டே "ஒனக்கு தீவாளிக்கு என்ன சீலை வேணும். 21. இப்ப நெல்லு நல்லா வெளைஞ்சிருக்கு" ண்ணு கேட்டான். 22 அவ அனுவசியா பதிலு சொல்லிட்டு வாயை மூடிட்டா. 23 அப்பறம் இதுதான் சமயம்ண்ணு பாத்து நடுங்கிக்கிட்டு காதுகிட்டப் போயி "எங்கண்ணே! 24. வாசல்லெ ஒரு கௌ(ழ)வி பசியாலெ சாகுறா. 25. கொஞ்சம் கஞ்சி குடேன்" ண்ணு சொன்னான். 26. ஒடனெ அவளுக்கு ரொம்ப கோவம் வந்திருச்சு. 27. "அடே மடையா, ஒனக்குத்தான் வெட்டிச் சோறு போட்றேன் 28. தெருவுலெ போற பிச்சைக்காரனுக்கெல்லாம் யார் போட்றது" ண்ணு கத்துனா. 29. அவென் அவ போட்ட பெரிய சத்தத்தைக் கேட்டு அப்ப நடுங்குனதும் அடுத்த நிமிசத்துலெ அவகிட்ட போயி மன்னிப்பும் கேக்கத் தொவங்குனான். 30. ஒடனெ அவ முன்னெவிட பத்துப் பங்கு ஆத்தரப்பட்டு கிட்டெ இருந்த மொறம் சல்லடை இதுகளை எடுத்து அவனெ அடிச்சிக்கிட்டு வீடெல்லாம் அவெங்கூட ஓடி தொரத்துனா. 31. இந்தச் சத்தத்தாலெ முளிச்ச ஔவையாரு நடந்த சங்கதிகளை ஒரு பாட்டா ~~கெ~~ பாடிச்சா.
32. இது கிழயான வெங்காதுலெ விளுந்தவொடனெ இவ யாருண்ணு தெரிஞ்சி பொண்டாட்டிகிட்டச் சொன்னான். 33. அவளும் பயந்து ஔவையாருக்கு சோறு குடுத்தா.

= Running ~~with~~ after him

17. Even though he suffered all this,
he had a fixed determination not to tell a lie.
Steadfast.

IV ‡ Denotes entered in note-books.

அரிச்சந்திரென் கதை. 10

1. நம்ம இந்தியா தேசத்லெ வடக்கெ அயோத்தின்னு ஒரு
நாடிருக்கு. ‡2 அதெ அரிச்சந்திரென்னு ஒரு ராசென் ஆண்டு
-வந்தான். 3. அவனுக்கு சந்திரமதின்னு ஒரு பொஞ்சாதி.
தேவதாசென்னு ஒரு மகென். 4. அவென் தேசத்லெ எல்லாரும்
சொகமாஇருந்தாங்க. 5.‡ அவெங்கிட்ட ஒரு நல்ல கொணம். 6. அது
என்னான்னா, பொய்யே சொல்லமாட்டான். 7.‡ அவென் பொய்யே
சொல்றதில்லென்னு ஒரு வெரதம் பண்ணிருக்கான்னு ஒலகமெல்
-லாம் எட்டுச்சு. 8.‡ தேவர்களும் முனிவருங்கூட இந்தச் சங்கதி
தெரிஞ்சு அரிச்சந்திரனைச் சோதிக்கணும்னு நெனைச்சாங்க.
9.‡ ஒடனெ விசுவாமித்திரென் முனி அரிச்சந்திரங்கிட்ட வந்து
தனக்கு ஒரு வரங் குடுக்கணும்னு கேட்டான். 10.‡ அதுக்கு அவென்
அப்பிடியே குடுக்றேன்னு வாக்குக் குடுத்தான். 11. பெறகு
வரங் கேட்டான். 12. வரம் என்னான்னா, தனக்கு ஒரு ஆனை
ஒயரத்துக்கு பொன்னு குடுக்கணும்னு கேட்டான்.

12.‡ அரிச்சந்திரென் தான் வார்த்தையெக் காப்பாத்தணுமில்லெயா?
13.‡ அதுக்காக நாடு நகரம் சொத்துக்கித்து இதெல்லாம் வித்துக் குடுத்
-தான். 14 ஆனா பூராப்பணத்தெயும் குடுக்க முடியலெ. 15‡ வேறெ தனக்கு
விக்கிறதுக்கு ஒண்ணுமில்லாமெ தாம் பொஞ்சாதி சந்திரமதியெ
-யும் தான் மகென் தேவதாசனெயும் வித்தான். 16.‡ அப்பறமும் பணம்
பத்தாமெ தன்னெயும் ஒரு சுடுகாடு காக்ர வீரவாகுன்ற
பறெயனுக்கு அடிமெயாக்கி ஒரு மாதிரி விசுவாமித்ரனுக்குக் ‡குடுக்க
வேண்டிய பொன்னெக் குடுத்துத் தீத்தான். 17 இப்பிடியெல்லாம்
கஷ்டப்பட்டுங்கூட, தான் பொய் சொல்றதில்லென்னு பாம்பு
ஒரே வைராக்யமா இருந்தான். 18‡ ஒரு நா அவென் மகென் பாம்பு
கடிச்சுச் செத்தான். 19. அவனெ தூக்கிக்கிட்டு சந்திரமதி சுடுகா
-ட்டுக்கு வந்தா. 20. அங்கெ சுடுகாட்டெக் காத்துக்கிட்டிருந்தான்
அரிச்சந்திரென். 21. பையனெ கட்டெயிலெ வச்சு எரிக்றதுக்கு
வரி குடுக்கணும்னு கேட்டான். 22 அவகிட்ட பணம் இல்லெ.
23.‡ யார்கிட்டயாவது போயி வாங்கிக்கிட்டு வான்னு அவளெ அனுப்புனான்.
24. அவ போற வழியிலெ ஒரு புள்ளெயெக் கொன்னுட்டான்னு அநி
-யமாச் சொல்லி காசி ராசென் புடிச்சுக்கிட்டான். 25. புடிச்சு
அவளெ வீரவாகுன்ற பறெயங்கிட்ட அனுப்புனான். 26. வீரவாகு
அரிச்சந்திரெங்கிட்டச் சொல்லி, கொல்ற எடத்லெ கொண்டுபோ
அவளெ வெட்டச் சொன்னான். 27. அரிச்சந்திரென் என்ன பண்ணுவா
பறெயன் சொன்னதெத்தானே செய்யணும். 28. வாளெடுத்து வெட்ட
-ப் போனான். 29. அப்ப விசுவாமித்ர முனி ஓடியாந்து "நிறுத்து, நிறுத்து"
-ன்னு சொல்லி, நீயே சத்யவான்னு அவனெ மெச்சிப் பேசி,
அவென் ராச்சியத்தை திரும்ப அவெங்கிட்ட ஒப்படெச்சான்.
30. இப்பிடியிருக்க இதுனாலெ நமக்கு என்னா தெரியுது.
31. சத்தியந்தான் ஜெயங் குடுக்கும். 32. நம்ம பொய்யே சொல்லக்
-கூடாது. 33. உண்மையே சொல்லணும்.

Indef: Past Tense: இரு.

1. இருந்தான. cf. 11.

It was his custom [illegible]

[illegible] denotes a custom or a repeated action as distinct from a single act. Present in form though past in time. Does the present form indicate a continuous action?

[illegible]

It came about that

Neg: Past:

4. கொடுக்காமெப்போயிருச்சு

‡ Done, Entered in notes.

A gambler's story – சூதாடி கதை.

1. ஒரு ஊர்லெ ஒரு சூதாடியிருந்தான்.
There was a gambler in a certain village.

2. ‡ சூதாட்டத்துலெ இவனைப் போல கெட்டிக்காரன் அந்த ஊர்லெ ஒருத்தனும் கெடையாது.
~~(There was no man)~~ [You could not find anyone] in that village who was ~~(so)~~ [as] clever as this man in gambling.

3. ‡ அந்த ஊர்லெ ஆளில்லென்னு இவன் வந்து, பக்கத்து ஊர்லெயெல்லாம் போயி சூதாடி அங்கெஇருக்கவங்களையும் தோக்கடிக்கிறது வழக்கம்.
[~~He used~~ It was his custom] to go to the neighbouring villages, and defeat those that were there, because there were no more gamblers in that (his) village.

4. ‡ இப்பிடி அவன் செஞ்சு செஞ்சு, கடேசியிலெ இவனுக்கு எங்கெயும் ஆளு கெடைக்காமெப் போயிடுச்சு.
As he kept on doing like this, there were no more people available anywhere. It came about that.

5. இவன் ஒரு பெரிய புள்ளெ குட்டிக்காரன்.
He was a man of a large family.

6. ஒரு நா இவன் என்னு நெனெச்சான்ன்னு,
~~If we want to say what he thought one day,~~ One day he thought as follows.

7. "இதென்னு? நமக்கு சூதுவெளாட, இந்த ஊர்லெயும் ஆளில்லெ, எந்த ஊர்லெயும் ஆளில்லெ. சாப்பாட்டுக்கும் ஒண்ணும் வழியில்லெ.

9 சாமி கோயில்லெ போயி புள்ளெயாருகிட்டத்தான் சூதாடணும்"ன்னு நெனெச்சான்.
"What is this? There is nobody to gamble with, either in this village or in any other village. There is no means for food either. I should go (to the) in the temple of God and gamble with the idol only" he thought.

10. இப்பிடி நெனெச்சு, புள்ளெயார் கோயிலுக்குப் போனான்.
Thinking like this, he went to the Pilliar Koil.

11. புள்ளெயார் கோயிலுக்குள்ளெ புள்ளெயாரும் அதுக்குப் பக்கத்துலெ அது பொண்டாட்டிப் புள்ளெயாரும் இருந்துச்சு. ~~போன~~
In the temple, there were the male god's image and its wife's image nearby.

12 இவன் அம்பளைப் புள்ளெயாரெப் பாத்து,
"சாமீ, ‡ எனக்கு எந்த ஊர்லெயும், சூதாட

14. வந்தேன் - In English "I have come".

20. I will not let you off lightly.
21. Order - Here the object comes after the verb.

{ 12 to 21. Oratio recta.
பிள்ளையாரைப் பார்த்து ..... சொல்லி
25. பிள்ளையாரைப் பார்த்து .... கேட்டான்

Lit. Seeing (the Pilleyar ... { he said
looking at) { he asked

ஆரு கெடைக்கலை. 13. வீட்லெ பாத்தா, அம்புட்டு
கஷ்டமாருக்கு. ‡14 அதுனாலெ ஒங்கிட்டயாவது
வெளாடலாம்ன்னு வந்தென். ‡15. ஒண்ணு,
நான் தோக்கணும். 16. இல்லாட்டி நீ தோக்கணும்.‡
17. நான் தோத்தா ஒனக்கு காசு குடுத்துர்றென்.
18. நீ தோத்தா, எனக்குக் காசு குடுக்கணும்.
19 இல்லெ! 20 நான் ஒன்னெ லேசுலெ விடமாட்டென்.
21. இந்தா! 22 உருட்றென் பார் பாச்சிகையெ" ன்னு
சொல்லி, உருட்டுனான்.

Addressing the male-god, he said, "O, god! There is none available anywhere for me to gamble with. If we look into the home affairs, it is so miserable. Therefore I came over to you with the intention of gambling with you at least. One (condition) is, that you must lose. Or, I must lose. If I lose I will pay you cash. If you lose you must pay me cash. In case you do not pay!

20. I shall not let you alone easily." 21. Here you are!
22. Look, I roll the dice. So saying, he rolled it.

23. பாச்சிகை வந்து (இவென் பக்கம்) இவெம்பக்கம்
விழுந்துச்சு.‡ 24. இவனுக்கு சந்தோசம் பொறுக்கமுடியலெ.

restrain

The dice rolled in his favour. (turned over)
He could not suppress his joy.

25. இவென் புள்ளெயாரெப் பாத்து, "சாமி! இப்ப
என்னு சொல்றெ? 26. காசு குடுக்றியா? இல்லியா?
ன்னு ரொம்ப கண்டிப்பாக் கேட்டான்.

He asked the pilliar (god) very seriously, "O, god! What do you say now? Are you giving me the money or not? What?"

27. புள்ளெயாரு கல்லு தானே? 28 அது என்னு சொல்லும்?
29. அது பாட்டுலெ பேசாமெ இருந்துச்சு.

Surely, the god is a stone. What can it say? It kept quiet, quite unconcerned.

30. இவனுக்கு ரொம்ப கோவம் வந்துருச்சு.

He became very angry. 31. அதுக்கு இவென்,

32. "இப்ப நீயி குடுக்கலென்னு பாரு! 33 ஒம் பொண்-
-டாட்டியெத் தூக்கிக்கிட்டுப் போயிருவேன்" ன்னான்

"Look, (what will happen) if you don't give. I will carry away your wife" he said. 34. இப்பிடிச் சொல்லிக்கிட்டே
பொம்பளெப் புள்ளெயாரெத் தூக்கிக்கிட்டு ஓடியே போய்-
-ட்டான். Keeping on saying like this, he ran away for good carrying with him the female-god.

7. வந்தார்களா. Have they come?

பளைய கருப்பென் கருப்பண்ணான கதை.

1. ஒரு ஊர்லெ ஒரு மாட்டுக்காரென் இருந்தானாம். 2. அவென் ஒரு பறையனாம். 3. அவென் வந்து ஒரு பிராமணென் வீட்லெ வேலை செஞ்சுக்கிட்டு இருந்தானாம். 4. ஒரு நா இவென்
Tense காட்லெ மாடு மேச்சுக்கிட்டு இருக்ர போது
found ஒரு பொதையலு கண்டெடுத்தானாம். 5. இதுனாலெ இவனுக்கு ரொம்ப சந்தோசமாம், தனக்கு
trouble தெரியாமலே பாட்டெல்லாம் வந்துச்சாம்.
finished grazing 6. மாடு மேச்சுட்டு பொளுதுசாய வீட்டுக்கு வந்தானாம். 7. பிராமணென் இவனெப் பாத்து "அடே கருப்பா! மாடெல்லாம் வீட்டுக்கு வந்துடுச்சாடா" ன்னு கேட்டானாம்.
8. அதுக்கு இவென், ரொம்பக் கோவமா, "சாமி! இன்னைக்கிருந்து என்னிலெ கருப்பண்ணபுள்ளென்னு கூப்புடணும்" ன்னானாம். 9. இப்பிடியே பிராமணனும் அவென் மொண்டாட்டியும் கூப்புட்டாங்களாம்.
10. மறுநா காலையிலெ இவென் மாட்டெ
-Tense ஓட்டிக்கிட்டு காட்டுக்குப் போனானாம்.
11. அங்கே போயி, தான் பாறைச் சந்துக்குள்ளெ
Perf ஒளிச்சு வச்சிருந்த பொதையலெ
Acc. round + round it வெளியெ எடுத்து, தரையிலெ வச்சு அதெச் சுத்திச் சுத்தி ஆடி, பாடிக்கிட்டிருந்தானாம். 12. அன்னைக்கி பொளுதுசாய, திரும்பி வீட்டுக்கு வந்தானாம். 13. அப்ப பிராமணென் வந்து "மாடெல்லாம் வந்துடுச்சா கருப்பண்ணபுள்ளே" ன்னானாம்.

19. Note the change to a future (habitual) tense after எப்பொழும்.

14. அதுக்கு இவென், "சாமி! இனிமேறு
கருப்பண புள்ளென்னு என்னியெ
கூப்புடக்கூடாது. கருப்பணசாமி
-ன்னு கூப்புடணும்ண்ணானும்.
15. புருசனும் பொண்டாட்டியும் அவனெ
அப்பிடியே கூப்புட்டாங்களாம்.
16. மிணும் நாளு காலம்பர வௌக்கும் போலெ
இவென் மாட்டை ஓட்டிக்கிட்டு
காட்டுக்குப் போனானும். 17. போயி, இரும்பும்
ஒளிச்சு வச்சிருந்த பொதையலெ வெளியெ
எடுத்து வச்சு பழையபடி ஆடிப்பாடிக்கி
ட்டிருந்தானும். 18. அன்னைக்கி பொழுசாய
வீட்டுக்கு வந்தானும். 19. எப்பவும் இவனுக்கு
பிராமணத்தி ஒரு சட்டியிலெ சோறு
ஊத்து வாளும். 20. அன்னைக்கும் அப்பிடி
-ச் செஞ்சபோது இவென் வந்து, "அம்மா!
இனிமேறு எனக்கு எலையிலெ சோறு
போடணும்" ண்ணானும். 21. இவனுக்கு
ரொம்ப சந்தேகமாயிருச்சாம். 22. அவளும்
அவ புருசனும் கூடிப் பேசினாங்களாம்.
23. இதென்னன்னு கண்டு புடிக்கிறதுக்கு, ஒரு நா
பிராமணென் காட்டுக்குப் போயி, இந்த
ரகசியத்தை கண்டுபுடிச்சு, ஒடேசியிலெ
பொதெயலியும் எடுத்துக்கிட்டு வந்துட்டா
னும். 24. மறுநா மாட்டுக்காரென் போயிப்
பாக்கயிலெ பொதெயலெக் காணோம். 25. அன்னை
க்கி அவென் பொழுசாய வந்து "சாமி!
இனிமேறு என்னியெ கருப்பண சாமின்னு
கூப்புட வாணும். 26. நான் பழைய கருப்பென்
கருப்பெந்தான் ண்ணானும்.

‡ Inversions, words in note-books

ரெண்டு கலியாணம்
Two marriages

15

ஒரு ஆளு வந்து, ஒரு நா, ‡அவெம்பாட்டுலெ போயிக்கிட்டுருந்தானாம். ‡போற போக்குலெ என்னமோ ஒரு சத்தங் கேட்டானாம். ‡அந்தச் சத்தம் எங்கிட்டுருந்து வருதுன்னு கவனிச்சுப் பாத்தானாம். அது வந்து, தெக்கும் பக்கத்துலெருந்து வந்துச்சாம். உன்னாங்கொண்டும் நல்லா நின்னு கேட்டானாம். ‡கடேசியிலெ பாத்தா அது நாகசொரச் சத்தமாம். ‡நம்மளுக்கென்னடான்னு நெனைச்சுக்கிட்டு அவெம்பாட்டுலெ ‡தெக்கெ பாத்த வாக்குலெ நடந்தானாம். ‡வழியிலெ ஒரு பெரிய கூட்டம் எதுக்கெ வந்துச்சாம். ‡அதுலெ, முன்னுக்கு ரெண்டு பொம்பளெக வந்தாளுகளாம். அவுக என்ன சொல்லிக்கிட்டு வந்தாளுகளாம்:– "ஏண்டி! பாத்தியாடி! ‡காலக் கொடுமையெ. ‡அந்த மாப்புளைக்கும் பொண்ணுக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா? பொண்ணுருக்கிற அந்துசு என்ன? மாப்புளெருக்கிற அந்துசு என்ன? மாப்புளெயெப் பாத்தா, கன்னங்கரேருன்னு கருநாவிட்டமாதிரி ‡அசிங்கம் புடிச்சாப்லெருக்கிறான். அதுலியும், ஆளெப்பாத்தா, சரிய்...யா, கெத்திரிக்காயிக்கி காலும் தலெயும் மொளெச்சாப்லெருக்கிறான். தாயில்லியாம், தகப்பனில்லியாம், அக்கா தங்கச்சி அண்ணெந்தம்பி ஒருத்தருமில்லியாம். இவனுக்கெப்பிட்(ட)ரீ பொண்ணுக் குடுத்துருப்பாங்க"ன்னு ஒருத்தி சொன்னாளாம். ‡அதுக்கு இன்னொருத்தி என்னு சொன்னாளாம்:– "அடிமாடி லெச்சுமி! நீ சொல்றதெல்லாம் செரிதாண்டி. பாவம்! ‡அந்த அள...கு பொண்ணுக்கு இந்த மாதிரி மாப்புளெயா அம்புடணும்? என்னமோ. அன்னு எழுதுனவென் அழிச்செழுதப் போறானு? ஆருக்கு என்னென்ன குடுத்து வச்சுருக்குதோ, அதுதாண்டி கெடைக்கும். வாடி போகலாம். எவனும் எப்பிடியும் போறான். நம்மளுக்கென்னடி. ராத்திரிக்கி அவுக ரெண்டு பேரும் ஒன்னாப் போயிருவாங்க. நம்ம தூரந்தான்" ~~ன்னுனாளாம்~~. கை நெறெஞ்ச பொன்னெவிட கண்ணு நெறெஞ்ச புருசென் யாசின்ற

4. வழியிலெ

Tense

வாசலிலெ direction

III/117

(With all that)

I/165?

மாதிரி அவனுக்கு என்னமோ அவென்
புடிச்சுக்கிருச்சு. வாடி போகலாம்" ன்னாளாம்.

அப்பறம் இந்த ஆளு வந்து, இவனுக போனப்பெறகு, ஒரு ரெண்டு சீறு எட்டு வச்சுச்சாம். அதுக்குள்ளெ, ரெண்டு கெளவனுக பேசிக்கிட்டு வந்தானுகளாம். அது என்னன்னு :- இவனுகள்லெ மூத்தவென் வந்து, மத்தவெங்கிட்ட, "ஏன்ப்பா, ஆரெக்கெசாமி! இந்தக் கலியாணத்துக்கு என்னப்பா? மாப்புளெ வந்து, பொண்ணுக்கு சரியான தோர்வெயானவெந்தான். அவனுக்கு என்ன கொரெவு? தகப்பென்லெ கொரெவா, தாயிலெ கொரெவா, அண்ணெந்தம்பியிலெ கொரெவா, அக்காதங்கச்சியிலெ கொரெவா, வீடு வாசெ - காடு கரெ - நெலம்பொலம் - உண்ணம் வேறெ சொத்துலெ என்னமும் கொரெவா, எதுலெ கொரெவாருக்கு? ஆனலியும் சரியான அளகென். எடுத்து வச்சாலும் இடுத்துவைக்கணும் ன்னு, அந்தப் பொண்ணுக்கு கெடைக்கக்கூடிய மாப்புளெயா இவென். அவ நல்லா, இடுத்து வச்சவ. என்னமோ பொளெச்சுப் போகட்டும். ஆணுக்கொரு பொண்ணு. பொண்ணுக்கொரு ஆணு" ன்னானுகளாம். வளியிலெ போன ஆளுக்கு, இந்தக் கெளவனுக பேசுனதெக் கேக்கவும், ஒரு மாதிரி விடுமுத்தியமச்சுப் போச்சாம். இந்த ஆளு என்ன நெனெச்சச்சாம்: "இதென்னடா வேடிக்கெயாருக்கு! அந்தப் பொம்பளெக பேசுனது ஒண்ணு. இவனுக பேசுனது ஒண்ணு. ஆனா கலியாணம் என்னமோ, ஒரே கலியாணந்தான். ஏதுக்கும் நம்ம இதெ கடெசிவரெக்கும் பாத்துறணும். ஏன்னு, கண்ணுலெ கண்டதும் பொய். காதாலெ கேட்டதும் பொய். தீர்க்க விசாரிப்பது மெய் - ன்னு பெரியவங்க சொல்ர மாதிரி, ஒரு வேளெ அவங்க சொன்னது நெசமாருந்தாலும் இருக்கலாம்" - ன்னு நெனெச்சு கீசு மூசுன்னு எளெச்சுக்கிட்டு அந்த மேடு ஏறிப்பாத்தா ரெண்டு கலியாணம் போகுதாம். பொம்பளெக மொதல்லெ பேசுனதும் அப்பறம் ஆம்பளெக பேசுனதும் சரீ...ய்யாருந்துச்சாம்.

2. Order of words. (i) Time phrase
(ii) Adverb of place.
(iii) Pronoun subject.

Aux: Verb. போ.

24. மோசமா போச்சு. I am ruined.

25. கெடச்சு போயிருடும். Also 28.

26. Part: with இரு. ...சொல்லியிருக்கறேன்.
While you were here I told you.

1

Blindness no. 1, Kodikanal(?) No 7 A
3rd May 1936. 7/A.

1. மகாராஜ ராஜ மகா கனமும் சாம்மையும் மேன்மையும் பொருந்திய ஐயா அவர்களுக்கு ரொம்ப வணக்கமா கோடி கோடி நமஸ்காரஞ்செஞ்சு ரொம்ப தாழ்மையா எழுதுறது என்னன்னா,

2. சுமார் (முப்பதைந்து) முப்பத்தஞ்சு வருசங்களுக்கு முந்தி இந்தக் கொடைக்கானல்லே (Coll.) நான் பொறந்தேன். 3. என் தகப்பன் வந்து ஒரு பெரிய ஏழை. 4. உலகத்லே மத்தவங்களைப் போலே புள்ளைகளுக்கு சொத்து, பணம், நிலம் போக்கு (etc.) வருத்து வச்சு விட்டுப் போகலை (of departed), அவரு எனக்கு ஒண்ணும் வச்சிட்டுப் போகலை (did not leave me on his death). 5. எனக்கு வெவரந்தெரிஞ்சு நான் வேலை செஞ்சப் பொறகு என் பணத்லே ஒரு வீடு வாங்குனேன். 6. கொஞ்ச நாள்களிச்சு அந்த வீட்டைக்கூட வித்துட்டான். 7. அப்பறந்து (from then) அவராலியும் வீடு கட்ட முடியலை. 8. என்னாலியும் ஒண்ணுஞ்செய்ய முடியலை. 9. என்னோ இத்தினை வருசமா நான் சம்பாரிச்சதெல்லாம் (all what I earned) வாரவுக்கும் செலவுக்கும் சரியாப் போச்சு. 10. எங்குடும்பம் ரொம்பப் பெருசு. 11. ஆனா காசுச் சம்பளம் ரொம்ப -மட்டிருசு. 12. நானும் முக்கி முக்கிப் பாக்கிறேன். 13. என்ன செஞ்சாலும் வெளங்கமாட்டேங்குது. 14. நான் எப்பிடியும் போயிட்டுப் போறேன். 15. ஆனா புள்ளைகளை நெனைச்சிண்ணாத்தான் ஏன் வயிறெல்லாம் எரியுது.

P.T.O

[Right margin notes: Case. Adj. Pron. Pron. Clause Noun Case Case Adv. Adv Noun Verb]

[Left margin notes: without any ... shifting ... explanation; Very ... of the people, who ... they acquire ... at the death; without ... ; ... pricking ... scraps; ... a pool?; ... nose; pick up a ... ; ... somehow; no!?; ... hard.]

+ நானும் but I haven't [illegible] ... concession?

no 7. ✓

16. எனக்கும் எம்பொஞ்சாதிக்கும் புள்ளைகளுக்கும்

கூடயிருக்கக்கூட வீடில்லை. 17. ஒருநா

Noun — out of doors

? மளெ பேஞ்சு நாங்கபட்ட பாடு வெளிய—

Order — we are ashamed to tell

சொன்னா வெக்கக்கேடு. 18. வீட்டுக்குள்ளெ

1½ தெண்ணெ அடிதண்ணி ஒருநா நிண்ணுகிட்டு—

and in the small hours

ந்துச்சு. 19. நாங்க ஒருபேரும் விடிய விடிய

around the hearth (oven)

அடுப்பெங்கூத்தி உக்காந்துகிட்டு இருந்தோம்.

On the top of that — and

20. இதுக்கெத்தாப்லெ கம்பிளியும் கிளிஞ்சு—

போச்சு. 21. இப்பிடிருக்கு எங்க பொளெப்பு.

நீங்க பாத்துக்கங்க. 22. நீங்க மாத்ரம்

If you had come

மதுரைக்கு கலெக்டரா வந்திருந்தீங்—

by this time — Graciously

கண்ணா, இன்னேரம் எனக்கு பெரியமனசு—

வச்சு எதாவது ஒரு நெலம் குடுத்திருப்பீங்க.

23 ஆனாலும் இப்பத்தான் என்னா. 24. மோசமா போச்சு?

25. நீங்க மாத்ரம் மனசு வச்சிட்டா ஒரு நிமி—

த்திலெ எனக்கு கெடச்சுப்போயிரும்.

Tense? — while you were

26. நீங்க இங்கெ இருக்கறபோது எஞ்சங்கதி—

without a single omission

யெல்லாம் ஒங்களுக்கு ஒண்ணுகூட

பாக்கியில்லாமெச் சொல்லியிருக்கறென்.

You remember

27. அதெல்லாம் இப்ப ஒங்களுக்கு நெனெவு

(ம்)
x இருக்குண்ணு நெனெக்கறென். x Irukoognnu

28. வயித்துப்பாட்டை பாக்றதுக்கே சரியாப்போச்சு.

காசுகுடுத்து எங்கினெ நெலம் வாங்கிறது.

இதுக்குத்தான் இப்ப ஒங்களுக்கு எழுதறது.

(Continued)

கொச்சைத் தமிழைப்பத்தி சம்பாஷணை.

A. 1. அட சாமேலு! என்னடா, பத்தாவது பரிச்சை எளுதிட்டியாயில்லெ. 2. தேறிடுவியா? 3. இல்லாட்டி போன வருசம் மாதிரி விளுந்துடுவியா?

B. 4. என்னமோடாப்பா. 5 எளுதிட்டு வந்துருக்கேன். 6. எல்லாப் பாடத்துலியும் தேறிடுவேன். 7. ஆனா, இந்த தமிளுலெதான் தேர்றேனோ என்னமோ, தெரியலெ. 8. அதுதான் ஒரு பெரிய கஸ்டம்புடிச்ச பாடம்.

A. 9. ஏண்டா, அதுமாத்தரம் கஸ்டம்?

B. 10. ஆமடா. அது எப்பிடின்னா:- லெக்கணம் வேரெ, பாட்டு வேரெ, பாடம் வேரெ. 11. இந்தக்களுதையெல்லாம் ஆர்றா படிக்கிரது? 12. இதொரு பெரிய சனியென்னடா. 13. எல்லாம் சரியா படிக்கலென்னு தமிளு வாத்தியாரு அடிக்கிறான். 14. இல்லாட்டி அவதாரம் போடுறான். 15. நம்மளுக்கு என்னான்னா, ஒண்ணு படிச்சா ஒண்ணொண்ணு மறந்துருது.

A. 16. லெக்கணமின்னா என்னடா சாமேலு? 17. நீய்யி சொல்ரபோது நான் என்னு நெனைச்சேன்னா, ஒரெக்கெணத்துலெ எலெகிலெ விளுந்துருந்துச்சு-ன்னு, அதெ வந்து எலெக்கெணம்ன்ர தாக்கும்-ன்னு நெனைச்சேன். 18. கெணத்துக்கும் ஒங்க பாடத்துக்கும் என்னடாருக்கு சாமேலு?

B. 19. போடா. போடா பட்டிக்காட்டுப்பலே. 20. இம்புட்டு தெரியாமெயாருக்கெ. 21 லெக்கணமின்னா:- எளுவா பயனிலெ செயப்படுபொருள் இதெல்லாம் வச்சு தப்பிதமில்லாமெ பேசுரதுதான் லெக்கணம்.

A. 22 அடடே! இப்பத்தாண்டா தெரிஞ்சுச்சு! 23. ஆமா, நீய்யி இப்ப எங்கிட்ட பேசுரது, லெக்கணமா? 24. என்னுடா? நீய்யி சொல்ரது எனக்கு வெளங்குது. 25. நான் சொல்ரது ஒனக்கு வெளங்குது. 26 அப்பன்னா நானும் லெக்கணம் படிச்சிருக்கேன் போலருக்கே! 27 ஆனா, ஆனா— அவன்னுத்தான் தெரியாது 28 என்னடா சொல்ர, சாமேலு.

5. Part: with இரு
எழுதிட்டு வந்துருக்கிறேன். I have been writing.

29. B. இல்லைடா சுந்தரம். அப்பிடியில்லை. 30. இப்ப நம்ம
பேசறது கொச்சைத்தமிழு. 31. அதாவது வீட்டுத்தமிழு.
32. இலக்கணத்தமிழை விட இதுதான் ரொம்ப நல்லது.
33. எப்பிடின்னா, சின்னப்புள்ளைகளுக்கும், படிக்காதவ
-ங்களுக்கும் இது நல்லா வெளங்கும். 34. இதுலெ
உண்ணொரு விசேஷம் இருக்கு. 35. நம்ம சத்தத்துக்கும்
கூட ஒரு அழுத்தம் இருக்கு. 36. எப்பிடின்னா,
நம்ம சத்தத்துலியும் சாடையிலியும் கோவமா
பேசறதையும் சந்தோசமா பேசறதையும் சாதாரணமா
பேசறதையும் லேசா கண்டுக்கிறலாம். 37. ஆனா,
இலக்கணத்தமிழுலெ - விசேஷமா பொஸ்தகத்லெருக்கிற
தமிழுலெ இம்புட்டு லேசா கண்டுக்கிற முடியாது.
38. அதுக்கில்லாமெ, இலக்கணத்தமிழு பேசினா, படிச்சவங்
-களும் படிக்காதவங்களும் நம்மளை கேலி பண்ண
ஆரம்பிப்பாங்க. 39. ஏண்டாப்பா அம்புட்டு வம்பு?
40. A. ஆமடா அண்ணே! இந்த... கோயிலுகள்லியும்,
பெரிய கூட்டத்துகள்லியும் எப்பிடியோ பேசறாங்
-களே! - வெளங்கா...மெ. அதென்ன தமிழ்றா?
41. B. அதுதாண்டா, இலக்கணத்தமிழுன்றது.
42. பள்ளிக்கொடத்லியும் வாத்திமாரு வந்து, புள்ளை
களுக்கு படிச்சுக்குடுக்கிறபோது மாத்திரம், இலக்கண
-த்லெ பேசுவாங்க. 43 விசேஷமா எங்க தமிழு வாத்தி
-யாரு வந்து, ரொம்ப... இலக்கணம் பேசுவான்.
43 வீட்டுக்குப் போயிட்டா, அவெம் பொண்டாட்டி
புள்ளைகிட்ட, நம்ம பேசற கொச்சைத்தமிழு
-தான் பேசுவான். 44 இந்த அக்ரமத்தைப் பாத்தியா?
45. பள்ளிக்கொடத்து பையனுக மண்டையை ஒடைக்
-கிறதுக்குத்தான் அவென் இலக்கணம் படிக்கச் -
-சொல்றான். 46. இதுதாண்டா எனக்கு பயமாருக்கு.
47. - தமிழுலெ மாத்ரம் தேருவனோ என்னமோன்னு.
48 A. ஊன் வறேன். அப்பறம்.... இந்த வெள்ளைக்காரங்க
என்ன தமிழு பேசறாங்க?
49. B. அவுங்களா! சொல்றேன் கேளு. அது ரொம்ப
வேடிக்கெ.

50. மோட்டாக்கு தொரெண்ணு ஒரு தொரெருக்காரு.
51. அவரு ஒருநா வேலைக்காரனை "பா...ய்! தண்ணீர்
கொண்டுவா" ண்ணாரு. 52. வேலைக்காரென் வந்து
பக்கு பக்கு ண்ணு முளிச்சுக்கிட்டுருந்தான்.
52. தொரெக்கி கோவம் வந்துருச்சு. 53. "வாட்டார்யு
ஸ்டாண்டிங் ஹியர் பார்" ண்ணு இங்கிலீசுலெ
கேட்டாரு. 54. அதுக்கு அவென் "தொரெகளே!
நீங்க மொதல்லெ சொன்னது என்னுண்ணு எனக்கு
வெளங்கலெ" ண்ணான். 55. அதுக்கு அவரு "ப்ரிங்
வாட்டர் ண்ரதுக்கு தமிளு என்னு"ண்ணாரு.
56. அதுக்கு வந்து "தண்ணி கொண்டா" ண்ரது
தொரெகளே ண்ணான். 57. அப்ப தொரெ சிரிச்சாரு.

58. பக்கென்வறாம் வால்வத ண்ணு உன்னொரு
தொரெருந்தாரு. 59. அவரு வந்து ஒரு கேசுலெ,
ஒரு பொம்பளெயெப்பாத்து "தையலே! உன்
துயிலை இழுத்தது யார்? 60. உன்னோடு வியசாரம்
செய்தது யார்?" ண்ணு கேட்டாரு. 61. அதுக்கு
அந்தப் பொம்பளெ வாயும் வராமெ கையும் வராமெ
(dumbfounded) நின்னுக்கிட்டுருந்தா. 62. தொரெ வந்து
திருப்பித்திருப்பி அதெவே கேட்டாரு. 63. இவ, பதுலு
ஒண்ணுஞ் சொல்லலெ. 64. வக்கீலு தொரெயெப்பாத்து
"தொரெகளே! ஒங்க தமிளு அவளுக்குத்தெரியலெ.
நாங் கேக்குறேன் பாருங்க" ண்ணு சொல்லி
பொம்பளெயெப்பாத்து, "ஏண்டி! ஒஞ்சீலையெ—
ப்புடிச்சு ஆருடீ இளுத்தான்? 65. ஒங்கூட—
எவென்ண்டீ படுத்தான்?" ண்ணு கேட்டான்.
66. அதுக்கு அவ, "சாமீ! அந்தா நிக்கிறானே, அவன்தான்.
67. இப்பிடிக் கேக்றதுக்கு, இந்த தொரெ என்னமோ,
மயிலே, குயிலே, வெக்காரங் கிவசாரம் ண்ணுக்கிட்டுருக்காரே"
ண்ணு. 68. வக்கீலு தொரெகிட்ட இதெச்சொல்லவும் அவரு
சிரிச்சாரு.

வெறுக்குத் தக்கனை வீக்கம்

1. ஒரு நா ஒரு பிச்சைக்காரென் ஒண்ணு செஞ்சா-
-னாம், ராசா வீட்டுக்கிட்டப் போயி மேமெத்-
-தையும் பாத்துக்கிட்டு மானத்தையும் பாத்துக்-
-கிட்டு, பெருமூச்சும் விட்டுக்கிட்டு,
2. "சாமீ! ஒனக்கு கண்ணு இல்லே? 3. இந்த
ராசாவெ மாத்தரம் இம்புட்டு சொகமா வச்சு-
-ருக்கரெ! 4. என்னியெ மாத்தரம் பிச்சையெடுக்க
வச்சுருக்கியே! 4 இதுதானு தருமம்" ண்ணு-
-ம். 5. இவென் பொலம்பிக்கிட்டுருக்கரதெ, ராசா
மேமெத்தையிலெ இருந்து எப்பிடியோ கேட்டு-
-க்கிட்டாணாம். 6. சரசரண்ணு கீளெ எரங்கி
வந்து, பிச்சைக்காரனெப் பாத்து, "என்னப்பா
பொலம்பிக்கிட்டுருக்கரெ" ண்ணு கேட்டாணாம்.
7. அதுக்கு இவென் ஒண்ணியும் ஒளிக்காமெ
தாஞ் சொண்ணதெயெல்லாம் சொண்ணாணாம்.
8. அந்த ராசா இவனெ அரமணெக்கி கூட்டிக்-
கிட்டுப் போயி அவனுக்கு சோறு கீறெல்லா-
-ம் வகுறு நெறெயாப் போட்டு, அவனெப்
-பாத்து, 9. "அப்பா! நீயி சொண்ணதெல்லாம்
ரெம்ப தப்பு. 10. ஒனக்கிருக்க சொகம்
எனக்கில்லெ. 11. என் ஆயுசுக்குள்ளெ எத்தி-
-னியோ தத்து எனக்கு வந்துருக்கு. 12. ஒரு
பத்து இருவது ராசாக்ககூட நானு சண்டெ-
-போட வேண்டியதாருந்துச்சு. 13. சாவுக்கும்
எனக்கும் ஒரு சாணு தூரங்கூட இல்லெ.
14. அதுலியெல்லாம் தப்பிச்சு இப்ப கடவுளு
புண்ணியமா கொஞ்சம் சொகமாருக்கரென்.
15. இதுக்கெல்லாம் விடாமொயர்ச்சியும் புத்தியுந்தா-
-ன் வேணும். 16. கடவுளெ குத்தஞ்சொல்லி பிரயோச-
-னமில்லெ. 17. எனக்கு ரெம்ப சொகமிருந்தாலும்
நூரா சமாதானமில்லெ. 18. எங்கெ ஒரு பெரிய ராசா
சண்டெக்கி வந்திருவானோ" ண்ர பயம் எனக்கு
எப்பவுமிருக்கு. பாத்தியா? 19. ஒரலுக்கு ஒரு பக்கம்
இடி' ண்ணு மத்தாளத்துக்கு ரெண்டு பக்கம் இடி" ண்ணு
சொல்லி, கொஞ்சம் பணங் குடுத்து அவனெ அனுப்பிட்டாணாம்.

3. Part: with திரு.
[illegible]
4. [illegible].
11. [illegible].

வச்சு அனுப்பிரலாம். 20. அதுக எங்கெயாவது
போயி பொளெச்சுக்கிரட்டும்" ண்ணு
சொல்லி அனுப்பிட்டாளாம்.
21. அந்த நேரத்துலெ அதுக எல்லாஞ்சேந்து
சத்தம் போட்டு அளுதுச்சாம்.
22. கோ.. மொரெ.. ண்ணு இதுக போட்ட சத்தம்
அயோத்திக்கி மணியடச்சாப்லெ கேட்டுச்சா
-ம். 23. அனுமாரு, வெளியெ வந்து பாத்தானாம்.
பாத்து, சங்கதி யென்னுண்ணு கண்டுக்கிட்டானாம்
ஓட்ட ஓட்டமா ஓடி ராமருகிட்டெயும்
லச்சுமணருகிட்டெயும் சங்கதியெச் சொன்
-னானாம். ராமரு வந்து அனுமாரெப் பாத்து,
" ஐயோ பாவம்! நம்ம என்னுப்பா செய்ய
-லாம் இப்ப" ண்ணாராம். அதுக்கு அனுமான்,
" சாமி! இதுக்கெத்தானு வந்துருச்சு?
கண்ணெ மூடி தொறக்கு முந்தி ஒங்களெ
நான் லங்கெ கொண்டு சேத்துர்றென்"
ண்ணானாம். இவங்க "சரி"ண்ணவும், ரெண்டு
பேத்தெயும் தோள்லெ தூக்கி வச்சுக்கிட்டு
ஒரே பாச்சலா லங்கெக்கி பாஞ்சுட்டானாம்.
ராமரும் லச்சுமணரும் இந்தப் புள்ளெகளெ
-ப் பாத்து " மக்களே! நீங்க பயப்புடாதீங்க.
ஒங்ககூடவே நாங்க இருக்கிறோம்.
ஒரு காலத்துலெ நீங்க, இந்த லங்கெயெயும்
இந்தியாவெயும், உலகத்துலெ
எத்தினெயோ ராச்சியங்களெயும் ஆளுவிங்
-க" ண்ணு சொல்லி அவங்க எல்லாத்தெயும்
ஆசிர்வதிச்சாங்களாம். அப்ப இந்த அனு-
கிர புள்ளெக வந்து என்னு கேட்டுச்சாம்:-
" சாமி! அப்பிடி நாங்க எம்புட்டுக்காலம்
ஆளுவோம்" ண்ணு கேட்டுச்சாம்.
அதுக்கு ராமரும் லச்சுமணரும் " மக்களே!
நீங்க எம்புட்டுக்காலம் சத்தியந்தவறாமெ
-நிக்கிறீங்களோ அம்புட்டுக்காலம். உண்மெ
நீங்க வெடுங்காலமெ எப்பவும் நடக்கண
-மிங்க" ண்ணு சொல்லிட்டு வளியனுப்பிட்டு

Last line — × அயோத்திக்கி போயிட்டாங்க.

Vol. III.

1. Part: with இரு

...நம்ம புள்ளெயே கொல்லிப்பட்டுருக்கோம்

Aux வா.

3. ... பாத்து வறாரு = [illegible] (?)

4. ... இருயிருக்க வேண்டியது வந்துச்சு.

3. இவனுக்குண்ணு ஒரு பெரிய வீடும் இருந்து.

[illegible]

இவனுக்குண்ணு = இவனுக்குண்ட்டு —

[illegible]

78/37 / 67	4.1.37	Roads) - Trees - Damage by falling.		D.P.E - to send his report.	4-5-37.
303/37 / 68	18.1.37	Motor vehicles - Tax - licence issue of.		D.S.P. - for report	8.5.37
				-do- -do-	27.5.37
				IV Rem do -do-	26.6.37

[illegible]
(= Introgg)

(1) [illegible] (2) [illegible]

[illegible]

23 papers pending

JB
9-10-37
~~107 / 9-10-37~~

2492/37 105	5.7.37	Chatram - Cost [?] the town - S. No. E. 475 - Choultry - repairs.	Govt orders for sanctioning repair amount for construction of wall are awaited — do — and ~~Ordered to lie over till~~	12-10-37 23-11-37 ~~31-1-38~~
2611/37 106	14.7.37	Municipal - Cost [?] Municipality S. No. 176 B & C. 193 B. Laying pipe line - permission.	Commissioner has been addressed to obtain the applt's consent and send the agreement — do — and ordered to lie over till	19-10-37 Reminded on 25-11-37 31-1-38

21 papers pending

JB
7-11-37
D.1

there was no way to go. His son being a very small boy he could not go into the river. So Tennalu Raman taking him on his shoulder walked into the river. The little boy held fast to his father's neck.

TENNALU RAMAN.

We have heard before that the villag and country in which Tennalu Raman was born and bred were very fertile. His village and that of his relations were different. The reason why he lived in a different village was that becuase he was a great joker and very the king of that place was very fond of him and appointed him as cone of the retinue of his palace. So it happened that he had to live his relations to live separately. But when there was any special business he used to go to theri house. Or elase they would go come to him. . And so, one day, he and his son had to go to his relations house on some business or other. It was at the time of themonsoon and owing to the heavy rain hthere was a lot of water running in the river. But there was not such a flood as to prevent a an from crossing He was able to vross that river. Otherwise

Tennalu Raman's Stories. தென்னாலுராமென் கதெ.

20

தென்னாலு ராமனும் அவென் மகனும்.

1. தென்னாலு ராமென் பொறந்து வளந்த ஊரும் தேசமும் ரொம்ப செளிப்பானதுன்னு நம்ம முன்னெயே கேள்விப்பட்டுருக்கோம். இல்லெயா?

2. இவென் இருந்த ஊரு ஒண்ணு. இவென் தாய்புள்ளெ இருந்த ஊரு ஒண்ணு. 3. இவென் மாத்தரம் ஏன் வேறெ ஊருலெ இருந்தான்ணு, இவென் ஒரு பெரிய வேடிக்கெக்காரனுருந்ததுனாலெயும், ஒரு வாய்ச்சாமாத்தியக்காரனுருந்ததுனாலெயும், அந்த ஊரு ராசா இவென் மேலெ ரொம்பப் பிரியப்பட்டு, அரமனெ வேலெக்காருலெ இவனெயும் ஒருத்தனு வச்சு இவனுக்குண்ணு ஒரு பெரிய வீடும் குடுத்து, அம்புட்டு நல்லா இவனெப்பாத்து வந்தாரு. 4. அதுனாலெ தான் இவென், தான் தாய்புள்ளெகளெ விட்டு (relatives) வேறெயா குடியிருக்க வேண்டியது வந்துச்சு. 5 ஆனு எப்பவாவது, என்னமாவது, ஒரு விசேசம் இருந்துச்சுன்னு, இவென் அவுங்க வீட்டுக்குப் போவான். 6. இல்லாட்டி அவுங்க வந்து (வந்து has no meaning here, as will be seen in several other occasions) இவென் வீட்டுக்கு வருவாங்க.

7. இப்பிடிருக்கர காலத்துலெ ஒருநா இவெனும் இவென் மகனும் தாய்புள்ளெ ஊருக்கு என்னமோ ஒரு விசேசமாப் போகவேண்டியதாருந்துச்சு. 8. அந்தக்காலம் அடெமழெ காலம். இவென் ஊருக்கும் அவுங்க ஊருக்கும் எடெயிலெ ஒரு பெரிய ஆறு இருந்துச்சு. 9. அடெமழெயானதுனாலெ ஆத்துலெ ரொம்ப தண்ணி போச்சு. 10. ஆனு ஆறு போகக்கூடாமெ அம்புட்டுப் பெரிய வெள்ளம் இல்லெ. 11. இவென் அந்த ஆத்தெ கண்டிப்பா கடக்கணும். இல்லாட்டி அங்கெ போக வேறெ வழியில்லெ. 12. மகென் ரொம்ப சின்னப் பையனுருந்ததுனாலெ ஆத்துக்குள்ளெ நடக்க முடியலெ. 13 அதுனாலெ தென்னாலுராமென் இவனெத் தான் தோள்லெ (தான் = reflexive, on his shoulder)

Conditional.

15. அப்படி இவன் புடிக்காட்டி ...

[illegible] போறவெங்கள.

17. [illegible]

19. காலு வேறெ வலிக்கிது. = [illegible]

22. ஏனாங்கண்ணு = [illegible]

தூக்கி வச்சுக்கிட்டு ஆத்துக்குள்ளை நடந்தான்.
14. சின்னப்பையென் தான் தகப்பென் கழுத்தை
இறுக்கிப்புடிச்சுக்கிட்டு வந்தான். (held fast - very tight)
15. அப்பிடி இவென் புடிக்காட்டி, அந்தோடை
(Participial noun போகிறவன்தான்) அதோகெதியாப் போறவென்தான் (அதோகதி = Complete destruction)
16. என்னா, தகப்பனாலை இவனுக்கு ஒண்ணுஞ்செய்ய
முடியாது. 17 அவென் தட்டுக்கெட்டுத் தடுமாறி (tumbling)
(escaped out) - lived) "தப்பிச் சேமம்பொளைச்சேன்"ண்ணு நடக்கப் பாப்பானா?
18. இவனைக் கவனிச்சுக்கிட்டு வருவானா?
19. தண்ணி காலை இழுக்குது. காது வேறை வலிக்குது.
20. இவென் என்னதான் செய்வான்? பாவம்! (pity)
21. பையென் இவெங்கழுத்தை கட்டிப்புடிச்சது
இவனுக்கு ரொம்ப லேசாப் போச்சு.
22. இப்பிடி கஷ்டப்பட்டு வார நேரத்துலை,
"எளங்கண்ணு பயமறியாது"ண்ற மாதிரி
மகென் தகப்பனைப் பாத்து "அப்பாப்பா, நான்
ஒரு மீனைப்புடிச்சிட்டென்"ண்ணான்.
23. இவென் இப்பிடிச் சொல்லவும், தகப்பனுக்கு ரொம்ப
ஆச்சரியமாருந்துச்சு. 24. என்னா, வேகமா ஓட்ற (a)
வெள்ளத்துலை மீனைப்புடிக்கிறது ரொம்பக் கஷ்டம்.
25. அதுமில்லாமெ இவென் ரொம்பச் சின்னப் பையென்.
(overjoyous) 26 அதுனாலை அவனுக்குச் சந்தோசம் பொறுக்கமுடியலை.
27. அவென் மகனைப்பாத்து "எங்கடா மகனே மீனு?
28. எப்பிட்றா (a) புடிச்சே?"ண்ணு ரொம்ப ஆவலா
கேட்டான். 29. இவென் இப்பிடிக் கேட்டு—
வாய் மூடுமுன்னை, பையென் தகப்பனைப் பாத்து
"அப்பாப்பா, அதைச்சுட்டுத் தின்னுட்டேன்"ண்ணான்.
30. இப்பிடிச் சொல்லவும், தென்னூராமனுக்கு,
(Predicate understood) சந்தோஷமும் ஒரு பக்கம், கோவமும் ஒரு பக்கம்,
வெக்கமும் ஒரு பக்கம், துக்கமும் ஒரு பக்கம்.
31. "மீன் குஞ்சுக்கு நீச்சா பளகிக்குடுக்கணும்"
ண்ற பளமொளியை தனக்குள்ளையே நெனைச்சுக்-
கிட்டு, ஆத்தைத் தாண்டி, கரையிலை மகனை
(Sound உஸ் while tired) எறக்கி விட்டுட்டு "உஸ்ஸப்பா"ண்ணு கொஞ்சநேரம்
ஒக்காந்து, அப்புறம் மகனைக் கூட்டிக்கிட்டு, தாய் புள்ளை வீட்டுக்கு
போனான்.

5. [illegible] - was maintaining.

Thennalu Raman's Son stealing flowers in the King's garden. தென்னாலுராமனென் மகன் ராசா வீட்டுத் தோட்டத்லெ பூவ திருடுனது.

addition of வீடு in Coll:

1. ராசாவுக்கு ஒரு பெரிய பூந்தோட்டம் இருந்துச்சு.
2. அந்தத் தோட்டத்துலெ ஒரு சாண் எடங்கூட
வெத்து எடம் இல்லெ. 3. எல்லா எடத்லியும் நெறையா
பூவிருந்துச்சு. ஒலகத்லெ என்னென்ன பூவிருக்குதோ
அதெல்லாம் அங்கெருந்துச்சு. ஒண்ணும் கொறெவில்லெ.
4. விசேசமா ராசா வீட்டுப் புள்ளெகளுக்கு என்னென்ன
பூ ரொம்ப பிரியமோ அந்த பூதான் அங்கெ ரொம்ப
ஜாஸ்தி இருந்துச்சு. 5 ராசாவுக்கு ஒரே ஒரு பொம்-
-பளெப்புள்ளெருந்துச்சு. 6. அந்தப்புள்ளெ ஒரு மணிக்கு
ஒரு பூவ மாத்தும். 7. ஒக்காருறதும் பூவுமேலெதான்.
நிக்கிறதும் பூவுமேலெதான். படுக்கிறதும் பூவுமேலெதான்.
8. இதுக்கொண்ணு வேலெ மெனக்கிட்டு (for the sole purpose)
and (putting off everything else) ராசா, ஒரு பூவாணிச்சிக்கி
சம்பளங் குடுத்து வச்சிருந்தாரு. 9. அவ வேலெ என்னென்னா,
பொழுது பொறப்பட்டதுலெருந்து பொழுது விழுகுற வரைக்கும்
பூவெ செடைஞ்சு செடைஞ்சு அரமனைக்கு ராசா மகளுக்கு
அனுப்புறதுதான். 10. அவளுக்கு கையும் ஓயாது. காலும்
ஓயாது (will never cease) எப்பப்பாத்தாலும் முணுமுணுன்னு
வேலெ செஞ்சுக்கிட்டேயிருப்பா. 11. ராசா மகளுக்கு
எந்தெந்த நேரம் என்னென்ன பூவ செடயணும்ன்னு
அவளுக்குத் தெரியும். 12. அந்தந்த நேரத்லெ போயி
வேண்டிய பூவெ புடுங்குவா. 13. இப்பிடி அவ
செஞ்சுக்கிட்டிருக்கும்போது, ஒரு பத்து பதினஞ்சு
நாளா, குறிச்ச பூவு காணாமெப் போச்சு. 14. இவளுக்கு
ஒண்ணும் வெளங்கலெ. 15. பொருத்துப் பொருத்துப்-
பாத்தா. 16. திருடனைக் கண்டுபுடிக்க வழியில்லெ.
17. ராசா மகளும் திட்றதுக்கு ஆரம்பிச்சிட்டா.
18. கடேசியா இவ போயி ராசாகிட்ட சங்கதியெல்
-லாம் சொல்லி மொறையிட்டா (complained).
19. ராசாவுக்கு இது ரொம்ப வேடிக்கெயாருந்துச்சு.
20. அவரு, மனசுக்குள்ளெயே என்னு நெனைச்சாருண்ணு,

இதென்னடா வேடிக்கையாருக்கு! 21. யாரும்
பணம், நகை, உண்ணும் வேறெ என்னமாவது
வெலை ஒசந்த சாமானத்தை திருடுவான்ன்னு பேரு.
(பேரு. addition of this word conveys no meaning except colloquialism)
22. இந்தத்திருடன் என்னடான்னா, பூவைத்திருடறானே!
இவன் எப்பிடியாப்பட்டவனாருக்கறானும். 23. இவன்
ஏன் பூவைத் திருடறானும். 24. சரியான காரணம் ஒண்ணும்
இல்லாமெ இவன் இப்பிடித் திருடமாட்டான்.
25. அவனுக்குத் திருட அவசியம் ஒண்ணும் இல்லெ.
26. இது ஒண்ணொண்ணுதும் சரி. 27. நம்ம இதை எப்பிடியும்
கண்டு பிடிக்கணும்ன்னு, நெனைச்சாரு.
28. இப்பிடி நெனைச்சு போலீஸ்காரனுகளையெல்லாம்
கூப்பிட்டு, சங்கதியைச் சொல்லி, திருடனை
சீக்கிரம் புடிச்சுக் கொடுக்கணும்ன்னு கட்டளை
கொடுத்தாரு. 29. பெரிய உத்தியோகஸ்தரு மேலமா
சொல்லாமெ, ராசா இவனுககிட்ட நேர்லெ
சொன்னதுனாலெ இவனுகளுக்கு ரொம்ப பெருமை
வந்துருச்சு. 30. அதுனாலெ இவனுக கள்ளனைப்புடிக்க
ராவும் பகலும் கண்ணுங்கருத்துமா (Very diligently)
இருந்தானுக. 31. அப்பிடியிருந்தும், பாவம், இவனுக
-னாலெ உண்மையான திருடனை புடிக்கமுடியலெ.
32. சும்மா, வந்தவனையும் போனவனையும், அப்பராணி
(Simpletons) அப்பராணி ஏழைப்பட்டவனையும், வாயில்லாதவ
னையும், அடிச்சு ஒதைச்சு மெரட்டி, காசு
புடுங்கிக்கிட்டு திரிஞ்சானுக.
33. "சந்தடி சாக்குலெ கெந்தவடி காப்பணம்"ன்ற
-மாதிரி (taking advantage of one's weakness) "இதுதான்டா
நல்ல சமயம்"ன்னு நெனைச்சு இவனுக நல்ல துட்டு
தட்டுனானுக. (Knocked off money — Coll: expression)
(addition of ஒரு = Coll: Expr. with நாளு etc.) 34. இப்பிடியிருக்கையிலெ, ஒரு நா, சமாரு, ஒரு நாலு
அஞ்சு மணிக்கி ராசா மகு பூந்தோட்டத்துக்குப்-
போனா. 35. இவ எந்தப் பூவு மேலெ பிரியமாருந்தாளோ,
எந்தப் பூவு இத்தனை நாளும் காணாமெப் போய்க்கிட்-
-டுருந்துச்சோ, அந்த ஜாதிப் பூவு இருக்கிற எடத்துலெ

38. விருமெந்துபு சசப்போடு.

தென்னாலுராமென் மகன் உக்காந்து
அண்ணைக்கி மலந்த பூவுகளைப் புடுங்கி மடியிலெ
வச்சுக்கிட்டிருந்தான். 36. இதை ராசா மக தற்செயலா
கண்டுக்கிட்டா. 37. இவனும் ராசா மகளை பாத்துக்கிட்டான்.
பாத்தவொடனெ கொஞ்சப்பூவை எடுத்து, ஒரு நொடி
– யிலெ ஒரு மாலெ செஞ்சு, ஓட்ட ஓட்டமா
ஓடியாந்து ராசா மக கழுத்துலெ போட்டுட்டான்.
38. ராசா மக இதைப்பாத்து விடுமித்தியடிச்சுப்போயி —
(taken aback) கூச்சல் போட ஆரம்பிச்சா.
39. இப்படி அவ கூச்சல் போடவும், அந்தப்பக்கம்
இருந்த போலீஸ் காரனெல்லாம் ஓடியாந்தான்.
40. போலீஸ் காரனுகளைப்பாத்து தென்னாலுராமென்
மகன் பயப்புடலெ. 41. அவென், ரொம்ப தைரியமா,
அவங்களைப்பாத்து, "ஏன்மப்பா, போலீஸ் புலிகளே!
என்னத்துக்கி இப்படி ஓடியாந்திங்க. 42. நானும்
ஒங்களைப்போல ஒரு மனுசென்தானே! 41. ஒங்க ராசா
மகளை நான கடிச்சாபுட்டென். 42. மனுசியா ஒருத்தி
ஒலகத்லெ பொறந்தா, எவென்னானும் சரி, ஒரு
மனுசென்தானே அவளுக்கி மாலெ போடணும்.
43. இது என்ன ஆச்சரியம். எனக்கி இவமேலெ இஷ்ட
– மாருந்துச்சு. நான் மாலெ போட்டென்.
44. இஷ்டமில்லாட்டி போடுவெனா? சரி 45. இப்ப
நீங்க என்னியெ என்ன செய்யப் போறிங்க.
46. என்ன செஞ்சாலும் சரி. எனக்கு ஒண்ணுமில்லெ.
47. நான ராசா மக கழுத்துலெ மாலெ போடுறது
போட்டுட்டென். 48. இனி செத்தாலும் பரவாயில்லெ
ஒங்க இஷ்டம் போலெ செய்யலாம் 49. ஆனா ஒண்ணு.
ராசா மகளைக் கேட்டு என்ன வேணாலும் செய்யிங்க.
50. அதுக்கிடையிலெ ஒண்ணும் செய்யக்கூடாது" ன்னு
கிண்டிப்பாவும் ரொம்ப தைரியமாவும் சொன்னான்.
51. போலீஸ்காரங்களும் ராசா மக தோழிப்பொண்ணுகளும்
இவென் பேச்சதையெல்லாம் கேட்டு, இவனை
என்ன செய்யிறதுன்னு தெரியாமெ, திகைச்சுப்போயி
நின்னாங்க.

52. கடேசியா ராசா மக போலீஸ்காரனுகளைப் பாத்து
" தோட்டத்துக்கு வெளியெ ஏன் ரதம் நிக்கிது.
53. இந்த மனுசனை அந்த ரதத்துமேலெ ஏத்தி ஒடனே
தாமிசமில்லாமெ ராசாகிட்ட கொண்டுவிட்டுப் போங்க.
54. ராசா இவனுக்கு ஏற்பட்ட தண்டனையைக் குடுப்பாரு.
நான் நடந்த சங்கதியை வெவரமா எளுதி ஒரு காயிதம்
குடுக்றென். 55. அதையும் அவருக்கு குடுத்துருங்க" ன்னு சொல்லி
ஒரு காயிதம் எளுதுனு. 56. அது எப்பிடின்னு, தென்னூராவுத்தன்
மகென் கொஞ்சநாளா பூவு திருடுனதாகவும் அதுக்கு அடை-
-யாளமா இப்ப அவென் மடியிலெ பூவு இருக்றதாகவும்,
தனக்கு கேவலம் வந்துரும்ன்னு நெனைச்சு, அவென்
போட்ட மாலெயெப்பத்தி ஒன்னும் எளுதாமெ, காயிதத்தை
அவுங்ககிட்ட குடுத்துவிட்டா. 57. ரதம் வளியிலெ
போறபோது, இதைப்பாத்தவங்க எல்லாம் தென்னூராவுத்தன்
கிட்ட சொன்னாங்க. 58. அவென் ரதத்துகிட்ட வந்து
மகென் காது கேக்கிற தூரத்லெ நின்னு, சொன்னவங்
-களைப்பாத்து " வாயுள்ள புள்ளைன்னு பொளைக்கிது.
59. இல்லைன்னா போகுது. எனக்கென்னு" ன்னு மாத்திரம்
சொல்லிட்டு அவெம்பாட்லெ எங்கெயோ போய்-
-ட்டான். 60. இந்தச் சொல்லு மகென்காதுலெ
விளுந்துருச்சு. 61. தகப்பென் ஏன் இப்பிடிச் சொன்னான்
-ன்னு நெனைச்சு நெனைச்சுப்பாத்தான். 62. கடேசியிலெ
ஒன்னு இவனுக்கு பொலப்பட்டுருச்சு. 63. தகப்பென்
ஒருவேளை பூவெல்லாம் தின்னச் சொன்னானோன்னு
நெனைச்சு அரமனைக்குப் போறதுக்குள்ளெ
அம்புட்டுப் பூவெயும் மென்னு தின்னுட்டான்.
64. அங்கெ போய்ச்சேரவும் போலீஸ்காரனுக இவனெ
ராசாகிட்ட ஒப்பிச்சு காயிதத்தெயும் குடுத்தானுக.
65. ராசா அதெ வாசிக்க வாசிக்க அவருக்கு ரொம்ப
கோவம் வந்துருச்சு. 66. ஒடனே அவரு கொலெ
-செய்றவனுகளைப்பாத்து " அடே இவனைக்கொன்னு
இவந்தலையெ எங்கிட்ட கொண்டாங்கடா"
ன்னாரு. 67. இவென் (மகென்) ராசாவெப்பாத்து,
ராசாவே, நான் சாகுறதுக்கேத்த குத்தம் என்னை

செஞ்சேன். 68. நீயவு செஞ்சு நானு சாகுமுன்னை
அதை எனக்கிச் சொல்லணும் மகாராசாவே" ன்னு
கெஞ்சிக் கேட்டான். 69 அதுக்கு ராசா அவனைப்பாத்து
"திருட்டுப்பயலுக்கு என்னடா நாயம். 70. ஒன்
மடியே ஒனக்கு சாக்கி சொல்லும். 71. உண்ணாம்
என்னடா வேணும்" ன்னாரு. 72. இவென் அவரைப்பாத்து
"ராசாவே, நீங்க சொல்றது சரிதான். 73. ஒங்க
பேச்சுக்கு மேலே ஒலகத்துலியே ஒரு பேச்சுமில்லெ.
74. குத்தவாளி எப்பிடின்னாலும் தண்டனைக்கு தப்ப-
-கூடியாது. 75. ஆனா குத்தம் இல்லாத ஒரு ஏளை
மனுசனைத்தண்டிக்கிறது ஒரு மகாராசாவுக்கு
அளகா? 76 அது நல்லால்லியே ராசாவே" ன்னான்.
77. இவென் இப்பிடிச் சொல்லவும், ராசாவுக்கு
உண்ணாங்கொஞ்சம் கோவம் வந்துருச்சு. 78 அவரு
அவனைப்பாத்து, "அடே வாயாடி, ஒன் வாய்க்கு
தக்க தண்டனை சாதாரண சாவு இல்லெ.
79. சுண்ணாம்புக்காளவாயிலெ போட்டு ஒன்னை
நீத்துறதுதான் சரியான தண்டனை. 80 தொறடா
ஒன் மடியை, களவாணிப்பயலே. 81. ஒன் மடியே
ஒனக்கு இப்ப சாக்கி சொல்லும்" ன்னாரு.
82. அவரு இப்பிடிச்சொல்லி வாயிமூடுமுன்னை
அவென் தான் மடியை எல்லா சனத்துக்கு முன்னுக்-
-கும் தொறந்தான். 83. அங்கெ பாத்தா ஒண்ணுமில்லெ.
ராசாவுக்கு ஒரு மாதிரி கலக்கமாயிருச்சு. 84 அவரு
கொஞ்ச நேரத்துக்குள்ளெ மனசைத் தேத்திக்கிட்டு
போலிசுக்காரனுகளைப் பாத்து, "திருட்டுக்கேதுவா
இவென்கிட்ட ஒண்ணும் காணுமே, பின்னெ ஏண்டா
நீங்க இவனைப்புடிச்சுக்கிட்டு வந்தீங்க" ன்னாரு.
அதுக்கு அவனுக "மகாராசாவே, அதென்னமோ,
எங்களுக்கு ஒண்ணும் தெரியாது. 85. ராணியம்மா
பெரிய சத்தம் போட்டாங்க. 86 நாங்க போகவும்
எங்ககிட்ட இதெ காயிதத்தையும் குடுத்து இந்த
ஆளையும் ஒங்ககிட்ட கூட்டிக்கிட்டுப் போகச்
சொன்னாங்க. 87. இம்புட்டுத்தான் சாமி எங்களுக்குத்
தெரியும்" ன்னாங்க.

98. பெரியதிருமொழி. ப. 102.

88. தென்னாடு ராமென் மகென் ராசாவைப்பாத்து, "மகாராசாவே! எனக்கி கொஞ்சம் பேச உத்தரவு குடுக்கணும்" ன்னான். 89. அதுக்கி ராசா, "சரி" ன்னாரு.
90. இவென் அவரைப்பாத்து, "ராசாவே, இல்லாட்டி ராசா குடும்பத்தைச் சேந்த ஆரோ, பொய்யி பேசுறது ராசாக்களுக்கு அடுக்குமா (Is it fitting?) அது ராச ஒக்யமா? (Royal honour) (ராஜ யோக்கியம் grammatical)
91. ராணியம்மா ஒங்களுக்கு எளுதுனதெல்லாம் சரி. 92. ஆனா உண்மையா நடந்ததை மறைச்சிட்டு, கண்டதும் கடியதும் (Something or other at random) எளுதுனதை நீங்க நம்பிக்கிட்டு, என்னியை இப்பிடி வாதிக்கிறது ஒங்களுக்கு தர்மமாருக்கா? 92. தயவு செஞ்சு, மகாராசா! இதை நல்லா நீங்க விசாரிச்சு ஏளையான எனக்கு நாயங் கெடைக்கச் செய்யணும்" ன்னு சொன்னான்.
93. இதைக் கேக்கவும், ராசாவுக்கி உள்ளாங்கொஞ்சம் மனசு கலங்க ஆரம்பிச்சிருச்சு. 94. ஒடனே மகளுக்கு ஆளைப்புனாரு. 95. ராசா மக பயத்தோடையும் நடுக்கத்தோடையும் வந்தா. 96. அவ வாக்குமேலத்லெ நடந்த சங்கதியெல்லாம் வெவரமா அறிஞ்சுக்கிட்டாரு. 97. அப்பறம், ராசா, தான் மகளைப்பாத்து, "அம்மா நிய்யி ஏன் மாலைச்சங்கதியை மறைச்சை? 98. அவெஞ்செஞ்சது பெரிய அக்கிரமம் ன்னாலும், நீ ~~அதை~~ அதை மறைச்சது அதைப் பாக்கிலும் பெரிய குத்தமாச்சே! 99. இதுக்கி நானு ஒனக்கி என்ன தண்டனை குடுக்கணும்?
100. ஏன் மனசுக்கி ஒரு பெரிய கலக்கம் வரவச்சிட்டியே! 101. இப்ப நான் என்ன செய்யிவேன்?
102. ஒலகத்லெ சாதாரணமா ஒரு கன்னிப் பொண்ணுக்கி மாலை போட்டா, அவனுக்கி கலியாணம் ஆச்சுன்னு அருத்தம். 103. இவென், தெரிஞ்சோ, தெரியாமெயோ, அடாதுடியாவோ (mischievously by force) இல்லாட்டி நல்ல மனசாவோ, சுய புத்தியோடெயோ இல்லாட்டி பைத்யகாரத்தனமாவோ, எப்பிடியோ ~~இவென்~~ மாலை என்ன மீமா ஒனக்குப் போட்டுட்டான்

107. தெரிந்த போதே.

110. புருசனுப்பட்டணை.

115. விதிப்படி வந்து சேர்ந்தது
You fate has come thus.

124. வழங்கிற்று From that day the proverb became current ..

104. அதை நிய்யி ஒண்ணும் ஒளிக்காமெ, உன்னை உள்ளபடி ஏங்கிட்ட மொதல்லெயே சொல்லிருந்தியின்னா ரொம்ப நல்லாருந்துருக்கும்.

105. நான் அவனை சுண்ணாம்புக்காளவாயிலெ (Kiln) நிறுத்திட்டு, ஒனக்கி வேற வெதமா ஒரு சாந்தி செஞ்சிருப்பென் (Rectification). 106. ஆனா இப்ப அதுக்கும் வளியில்லை. 107. எல்லா சனத்துக்கும் இந்த சங்கதி தெரிஞ்சுபோச்சு. 108. இப்ப நானு இவனை கொண்ணுட்டாலும் அது ஒனக்கி ஒண்ணும் பிரயோசனமில்லை. 109. ஒன்னையும் நானு எனக்கி வேண்டியதாருக்கும். 110. ஏண்ணா, எப்ப ஒருத்தென் ஒருத்திக்கி மாலெ போட்டானோ, அப்பவே அவன் அவளுக்கி புருசனாய்ட்டான். 111. இப்ப நடந்த காரியத்தைப்பாத்தா, இந்த துரோகிப்பய ஏக்கனவே ஒனக்குப் புருசனாய்ட்டான். 112. எனக்கிக் கோவம் பொறுக்கமுடியாமெ, இவனை இப்ப கொண்ணேன்ணா, நம்ம சாதிவளக்கப்படி நிய்யும் அனுவசியமா ஒடெங்கட்டை (Sati — wife dying together with husband) ஏறவேண்டியதாருக்கும். 113. அப்ப அதுலெ எனக்கித்தான் என்ன பிரயோசனம். 114. அதுனாலெ, ஏன் அருமை மகளே! நிய்யி ஒண்ணும் வருத்தப்படாமெ இவனையேதான் கட்டணும்.

(Margin note: Virgin கன்னிப் (பொண்ணுக்கு))

115. என்ன செய்யலாம்? ஒன் விதி இப்பிடி வந்து சேந்துச்சு. 116. நீ பெறந்த அன்னைக்கே ஒஞ்சாதகத்லெ இப்பிடித்தான் இருந்துச்சு.

117. ஆனா அதை நானு நம்பலெ. 118. ஒந்தாயும் நம்பலெ.

119. இப்ப அதெல்லாம் உண்மையா நெறைவேறிருச்சு.

120. நம்ம அதைப்பத்தி வெசனப்பட்றதுலெ ஒண்ணும் பிரயோசனமில்லை. 121. அதுனாலெ சந்தோசமா நீ இவனை கலியாணஞ்செய்யணும்" ண்ணாரு.

122. ராசா மக அதுக்கி ஒத்துக்கிட்டா. 123. கடைசியா எல்லாரு சம்மதத்துமேலெ கலியாணம் ரொம்ப நல்லா நடந்துச்சு. 124. அன்னைக்கிருந்து "வாயுள்ள புள்ளை பொளைக்கும்" ண்ற பளமொளி வளங்குச்சு.

Paid Rs 3-6 [illegible]
10/07/33

‡ Signifies 'entered in notes.'

தென்னாலு ராமென் கதை. 29

1. நம்ம முன்னெ பாத்தமாதிரி‡ தென்னாலுராமனுக்கும் ராசாவுக்கும் எப்பப் பாத்தாலும் ஏளாம் பொருத்-தம்‡. (continuous argumental troubles)

2. ராசாகூட மந்திரியும் சேந்துக்கிட்டாரு.‡

3. எப்பவாவது ஒரு நாளைக்கு‡ இவுங்க ரெண்டு-பேத்தையும் எப்பிடியாவது ஆளுகளுக்கு முன்னுக்கு அவமானப்படுத்தணும் ண்ணு தென்னாலுராமென் நெனைச்சான்.‡ 4. ஒரு நா இவென் ராசாகிட்ட வந்து, "ராசாவே, நம்ம ஊருலெ ~~ஒரு~~ ரொம்ப அளகான பொண்ணு ஒருத்தி இருக்கா.

5. அவளுக்கும் தேவேந்திரென் கிட்டருக்க பொண்ணுகளுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லெ.

6. சூரியென் எப்பிடி பெரகாசிக்கிதோ, அப்பிடி-ருக்கி அவ மூஞ்சியும் கையி காலு எல்லாம்‡.

7. அவளெப்பாத்தா நம்ம கண்ணெல்லாம் ஒளுகிப் போறாப்லெருக்கு.‡ 8. நேத்து நாம்பாத்திட்டு படுபாடு பட்டுப் போனேன். 9. இந்தமாதிரி வேறெ ஒரு பொண்ணு ஒலகம் பூரா தேடிப்புடிச்சாலும் ஆப்புட மாட்டாண்ணு நான் நெனைக்கிறென்.

10. ரொம்பச் சொல்லப் போனா (If we talk furthermore) அவ மனுச பெத்த புள்ளையில்லெண்ணு நான் தைரியமாச் சொல்லுவேன்.

11. அவளெப் பாத்தவொடனெ மகாராசாவுக்கு ஏத்த பொண்ணுண்ணு நான் நெனைச்சு ஓட்டமா. ஒங்ககிட்ட ஓடியாந்தென்.

12. நீங்க மாத்தரம் உத்தரவு குடுத்தா நாம்போயி ஒடனெ அவளெ சரிபண்ணிர்றென்.

13. என்ன சொல்றிங்க மகாராசாவே" ண்ணான்.

14. ராசா இதைக் கேட்டு ஏமாந்து போயி, "ரொம்ப நல்லது, தென்னாலுராமா, நிய்யி ஒடனே போயி அவளெ சரிபண்ணிடு.

15. நிய்யி எனக்குச் செய்யிற இந்தப் பெரிய ஒவகாரத்துக்கு, ஒனக்கு ரொம்ப பணம் தர்றென்

‡ Indicates entered in note books. 30

16. அதுக்கு இல்லாமெ எப்பவும் நானு ஒன்னெ மறக்கமாட்டேன்" ண்ணுரு.
17. தென்னாலு ராமென் வீட்டுக்குப் போற மாதிரி பாசாங்கு பண்ணி உன்னொரு வழியா போயி மந்திரி இருக்கிற எடத்துக்குப் போனான்.
18. மந்திரியெப் பாத்து, "சாமி, இப்பிடி இப்பிடி (so and so) சங்கதி" ன்னு ராசாகிட்ட என்னென்ன சொன்னுரோ, அதெல்லாம் இவெங்கிட்டயும் சொன்னான்.
19. மந்திரியும் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, ஏமாந்து போயி ராசா சொன்ன மாதிரி இவனும் சொன்னான். 20. தென்னாலு ராமனுக்கி இப்ப மனசு இளைந்து போச்சு. 21. அவென் தனக்குள்ளெ, "இருங்கடா பயலுகளா, ஒங்களைப் பேசிக்கிறேன். 22. என்னியெ எப்பவும் நீங்க ரெண்டு பேருஞ் சேந்து தொந்தரவு பண்ணிக்கிட்டிருக்கிறீங்கல்லியா?
23. அதுக்கு நானு சரியான பாடம் படிச்சுக் குடுக்கிறேன். 24. கொஞ்சம் பொறுங்க" ண்ணு நெனெச்சு, அந்தப் பொண்ணுக்கிட்ட போறாப்லெ போயி, கொஞ்ச நேரங்களிச்சு திரும்பி ராசாகிட்ட வந்து, "மகாராசாவே, நானாவது காரியத்தை முடிக்காமெ இருக்கிறதாவது, (meaning, nothing is impossible to me) எல்லாம் சரி பண்ணிட்டேன் ராசாவே.
25. ஆனா ஒண்ணு. அவ ரொம்பச் சின்னப் பொண்ணு ஒங்களைப் பாக்க ரொம்ப வெக்கப்படுவா. அதுனாலெ நீங்க ஒண்ணு செய்யணும்.
26. பொம்பளை மாதிரி அழகா உடுத்திக்கிட்டு ராத்திரி ஒரு பத்து பதினொரு மணிக்கி ஏன் வீட்டுக்கு வந்துடுங்க. 27. அப்பறம் எல்லாம் சரியாப் போயிடும்" ண்ணான்.
28. ராசா அதுக்கு "சரி" ண்ணுட்டாரு.
29. அப்பறம் இவென் மந்திரிகிட்டப் போனான்.

42. வெக்கைப்பட்டுப்போனவி.

30. இவெங்கிட்டயும் அதே மாதிரி சொல்லிப்
-புட்டு நேரத்தை மாத்திரம் மாத்திச் சொன்னான்
31. அதாவது:- அரை மணி நேரம் பிந்தி வரச்
-சொன்னான். இவனும் "சரி"ன்னுட்டான்.
எப்ப நேரம் ஆகும் ஆகும்னு தென்னா
-ராமென் காத்துக்கிட்டேருந்தான்.
32. கிரிச்ச நேரம் வந்துருச்சு. 33. ராசா
சொன்னபடி வந்துட்டாரு. 34. கிசுகிசுன்னு
காதுக்குள்ளெ என்னமோ சொல்லி
ஒரு அரைக்குள்ளெ போட்டு அவரெ
அடைச்சிட்டான். 35. கொஞ்ச நேரங்
-கழிச்சு மந்திரி வந்தான். 36. இவென் (தென்னாலி)
ராசாகிட்டப் போயி, ராசாவே, பொண்ணு
வருது, நீங்க இப்படியிருக்கலாம்.
37. ஆனா, ரொம்ப தொந்தரவு பண்ணிராதீங்க"
ன்னு சொல்லிட்டு, வெளியெ வந்து
மந்திரியெப் பாத்து ராசா இருக்கிற அறையெ
காமிச்சு "சாமி, பொண்ணு அங்கெ
இருக்கா. 38. நீங்க உள்ளுக்குப் போங்க"
ன்னு சொல்லிட்டு, அவென் உள்ளெ
போகவும் கதவெச் சாத்தி பூட்டுப் பூட்டிப்
-டான். 39. ராசாவும் மந்திரியும் ஒருத்தரை
ஒருத்தர் பொண்ணுன்னு நெனைச்சி
கொஞ்சிக் கொலாவுனாங்க. 40. கடேசியா
உள்ள சங்கதியெ அறிஞ்சுக்கிட்டாங்க.
41. தென்னாலி ராமென் வெளியெ நின்னு
கையெத்தட்டிக்கிட்டு கேலி பண்ணுனான்.
42. அப்ப இவங்க ரெண்டு பேரும் பயந்து,
ரொம்ப வெக்கப்பட்டுப் போயி "அடே
தென்னாலிராமா, தயவு செஞ்சு நாங்க செஞ்ச
குத்தத்தையெல்லாம் மன்னிச்சுக்கடா. 43. இனிமே
நாங்க ஒம் பேச்சுக்கு வரவே யில்லெ"ன்னு
சத்தியம் பண்ணுனப் பெறகு இவென்
கதவெத் தொறந்து அவுங்களெ வெளியெ
விட்டுட்டு சிரிச்சுக்கிட்டு ஓடிட்டான்.

Rs 1.2

13/10/34

3. ஒரு அஞ்சாத வயசாருந்துருக்கடம்.

தென்னாலு ராமென் கதை.

1. தென்னாலு ராமென் யாருன்னு நமக்கு முன்னையே தெரியும். We are already aware of the fact as to who Thennalukaman is. 2. இவனுக்கு ஒரு மகென் இருந்தான். He had a son. 3. இப்ப நம்ம சொல்லப் போற சங்கதி நடந்த காலத்துலெ இந்தச் சின்னப் பையனுக்கு ஒருவேளை ஒரு அஞ்சாறு வயசு இருந்திருக்கும். At the time when the thing what we are going to tell now, took place, this boy (might have been) was perhaps five or six years of age. 4. இவென் வந்து, இந்தக் காலத்துப் புள்ளைகளெப் போல இல்லெ. This boy was not like the children of these days.

5. இவென் ஒரு மாதிரி விசேஷமான பையென். He was a sort of a special boy. 6. இவனெயும் இந்தக் காலத்துப் புள்ளைகளெயும் நம்ம ஒப்பிட்டுப் பாத்தோம்னா, இந்தக் காலத்துப் புள்ளைக ஒன்னுமில்லென்னு நமக்கு நல்லா வெளங்கும். If we compare him to the children of these days, we can clearly understand that the children of these days are nothing. (நல்லா "well" can be also said "தெளிவா" "clearly")

7. அது "மீன்குஞ்சுக்கு நீச்சா பழக்கிக்குடுக்கணும்" ன்ற பழமொழி மாதிரி, இவென் தகப்பனுக்கு என்ன மாதிரி புத்தி இருந்துச்சோ, இவனுக்கும் தானாவே அதே புத்தி உற்பத்தியாயிருந்திருக்கும் ன்றதுக்கு யாதொரு சந்தேகமும் இல்லென்றது நம்மளுக்கு நல்லா தெரியுது. But we know pretty well the fact that there is no doubt whatever, to say that the same sense his father had, should have been born (or created) along with him like the proverb " Are we to teach swimming to the young fish?"

8. இவென், ஒரு ரெண்டு மூணு சந்தர்ப்பத்துலெ, தான் தகப்பனையே ஏமாத்திருக்கிறான். This boy, on two or three occasions, has deceived (tricked) his very father. 9. அப்பிடின்னு, இவென் எம்புட்டுப் பெரிய புத்திசாலின்னு, நம்மளே கொஞ்சம் யோசிச்சுப் பாக்கலாம். If that be so, let us just think a little, as to how great a sensible boy he was. 10. இதெப்பத்தி உண்மைக் கொஞ்சம் ஜாஸ்தி பேசப் போனா, இவனெப் போல யாரும்– பெரியவங்களோ, சின்னவங்களோ– முன்னெ

- முன்னெ இருந்ததுமில்லெ, இப்ப இருக்கிறதுமி-
- ல்லெ, இனிமே இருக்கப்போறதுமில்லென்றது
நம்மளுக்கு பட்டப்பகலைப்போல தெரியுது.
If we talk of this furthermore, we can understand like the broad daylight that there existed nobody before, none exists now and that none would exist henceforth ~~like~~ whether grown-up people or young ones, like him.

11. இப்பிடியாப்பட்ட பையனுக்கிட்ட ஒரு நாளு, இவென் தகப்பனைப்போல கெட்டிக்காரென் ஒருத்தென், வந்தான். To this kind of a boy, a certain clever man like his father, came.

12. வந்து, இவனைப்பாத்து, "அப்பா தம்பி! ஒங்கய்யா -ருக்காரா?" ன்னு கேட்டான். Having Come, he asked this boy, "O, younger brother! Is your father (at home)? "at home" is understood, but it means it.

13. அதுக்கு இவென், அடைடைடை, இப்பத்தா...னெ வெளியெ போறாரு... ன்னு வந்தகமில்லாத-
- வென் மாதிரி சொன்னான். For that (in reply to that) he exclaimed "Oho, ho, ho, he just goes out" (pretending to be innocent) like one who is innocent.

14. அதுக்கு அவென் "எங்கப்பா போறாரு" ன்னான். For that he said "Where is he going, young brother?"

15. இவென் ஒடனெ, "மானம் கிளிஞ்சிருக்குதாம், அதுனாலெ இவரு போயி, ஆத்துமணலை கயிறாத்திரிச்சு கிளிஞ்ச மானத்தெத்தச்சு பெய்யிற மளெயெ நிறுத்தப்போறாரு" ன்னான்.
Immediately he said, "The heaven is torn they say. Therefore, he is going to twist the river-sand into a rope, stitch the torn heaven and stop the rain which rains".

16. வந்தவென் இதைக்கேட்டு, மெரண்டு போயி, வந்த வளியே திரும்பிப் போயிட்டான்.
He who came, having heard this and being confused, returned back the same way he came.

17. உண்மெயிலெ இவென் வந்து, தென்னாலுராமனை ஏய்க்கலாம்ன்னு வந்தான். In fact, he came to trick Thennalu Raman (In wits) 18. ஆனா, அவென் மகென் போட்ட(a) போட்டெப்பாத்துட்டு, ஓடியே போயிட்டான். But he took to his heels, having experienced his son's wits. (போட்ட போடு - Coll: idiom)

Part: with இரு.

31. நீங்க வந்து, ஒரு தலைதானே கேட்டீங்க

32. ஏதோ நானு உங்களுக்கு ரெண்டு தலை கொண்டுடாந்திருக்கேன்.

தென்னாலு ராமென் கதை. 34
Story of Thennalu Raman.

1. ஒரு ஊர்லெ தென்னாலு ராமென்ன்னு ஒருத்தென் இருந்தான். 2. அவென் ஒரு பெரிய வேடிக்கெக்காரென். 3. ராசா இவென் மேலெ ரொம்ப பிரியமாருந்தாரு. 4. ஆனா ஒவ்வொரு சமயம் இவென் பண்ற அக்கிரமத்தாலெ, இவென் மேலெ அவருக்கு ரொம்ப கோவம் வரும். 5. அப்பப்ப அவரு இவனுக்கு என்னமாவது ஒரு தண்டனெ குடுப்பாரு.

6. இப்பிடிக் குடுத்த தண்டனெகள்லெ ஒரு தண்டனெ என்னன்னா:- ஒரு நாளு இவென் என்னமோ ஒரு குத்தஞ் செஞ்சதுக்கு, ராசா கொலெ செய்றவனுகளெப்பாத்து, இவனெக் கொண்டுபோயி நடுக்கொளத்லெ கழுத்துத் தண்ணியிலெ நிக்கவச்சு ஒரே வீச்சா இவென்தலெயெ வீசிடுங்கண்ணாரு. 7. அப்பிடியே அவனுக தென்னாலுராமென் காலுக்கும் கையிக்கும் வெலங்கு போட்டு தூரத்லெ ஒரு கொளத்துக்கு கொண்டு போனானுக. 8. ராசா சொன்னபடி இவனுக அவனெ நடுக்கொளத்துக்குக் கொண்டு போயி நிக்கவச்சு அவென்தலெயெ வீசப்போனானுக.

9. அப்ப, தென்னாலுராமென் இவனுகளெப்பாத்து கொரப்பாசாங்கு போட்டு என்ன சொன்னான்னா, "ஐயா, சாமிகளே, நீங்க எப்பிடியும் என்னெ இப்பக் கொன்னுபுடுவிங்க. 10. ஆனா நான் ஒங்களெ ஒரு காரியம் மாத்தரம் ரொம்ப வணக்கமா கேட்டுக்கிர்றென்"ன்னான். 11. அதுக்கு அவனுக இவனெப்பாத்து "சரி, பின்னெ கேள்றா சீக்ரம்"ன்னானுக. 12. அப்ப தென்னாலுராமென் "ஐயா, சாமிகளே, எனக்கு இப்ப நாப்பது அம்பது வயசாகப் போகுது. 13. நாம் பொறந்ததுலெருந்து இன்னெக்கு வரைக்கும் ஒரு நாளாவது கடவுளெக் கும்புடாமெருந்ததில்லெ. 14. ஏங்கடேசி நாளும் நெருங்கிடுச்சு. 15. அதுனாலெ கடேசிகடேசியா நான் சாமியெக் கும்புட எனக்கு உத்தரவு குடுக்கணும்.

16. என்னு, நான் வந்து, இத்தினை வருசமா
எம்புட்டோ பாவஞ் செஞ்சிருக்றேன்.
17. இப்பகூட எம்புட்(ம)ரதுலைதான் நாஞ் செஞ்ச
அம்புட்டுப் பாவமும் தீர்த்தியோகணும். 18. நான்
வந்து, கண்ணை மூடிக்கிட்டு மானத்தைப் பார்த்து
சாமியைக் கும்புடுவேன். 19. கும்புட்டு முடிஞ்சவொடனே
எந்தலையை மாத்தரம் ஒட்டிடு ஊன்னுவென்.
20. அப்பிடிச் சொன்னவொடனே எந்தலையை
ஒரே வீச்சா வீசிடுங்க. 21. இதுதான் நான்
ஒங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிர்ற கடேசிக்-
காரியம். 22. இதுக்கி மாத்தரம் நீங்க எடங்குடு-
த்திங்கண்ணு ஒங்களுக்கும் ஒரு காலத்துலெ
அந்த ஈஸ்வரென் நல்ல மோச்சத்தெ
குடுப்பாரு" ன்னு சொல்லி முடிச்சான்.
23. இந்தப் பரிதாவமான பேச்சைக் கேக்கக் கேக்க
அந்த ரெண்டு கொலைசெய்றவனுக மனசும்
எளகிப் போச்சு. 24. ரெண்டு பேரும் "சரி"ன்னு
ஒத்துக்கிட்டானுக. 25. இவனுக ரெண்டு பேரும்,
தென்னூராமென் தப்பிச்சு ஓடிறாமெ,
~~வல~~ சோத்துக்கையிப் பக்கம் ஒருத்தனும்
பீச்சைக்கையிப் பக்கம் ஒருத்தனும் நிண்ணுக்-
கிட்டானுக. 26. நின்னு, கையை ஓங்கி, பட்டா-
க்கத்தியைத் தயாரா வச்சு, தென்னூராமென்
ஊன்னு சொல்றதுக்கு காத்துக்கிட்டுருந்-
தானுக. 27. நாடு எண்றவரைக்கும் தென்னூராமென்
கண்ணை மூடி, சாமிகும்புடுறமாதிரி காமிச்சு,
குபீர்ன்னு ஊன்னு சொல்லி தண்ணிக்குள்ளெ
முங்கிக்கிட்டான். 28. இவென் ஊன்ற
சத்தம் கேட்டவொடனே கொலைசெய்றவென்
ரெண்டு பேரும் இவனை வெட்டுனானுக.
29. அவனுக பட்டாக்கத்திக ரொம்ப நீளமாருந்-
ததுனாலெயும் ஒருத்தனுக்கொருத்தென்
ரொம்ப நெருங்கி நிண்ணுக்கிட்டுருந்ததுனா-
லெயும்

வேகமான் வெட்டுனெ வெட்டை வாங்க
லெ யிலே ஒண்ணும் இல்லாததுனாலெயும்
அதுக்காக நின்னவென் தண்ணிக்குள்ளெ
மூங்கிக்கிட்டதுனாலெயும், அந்த ரெண்டு
பட்டாக்கத்திக, சோத்துக்கையிப்பக்கம்
இருந்தது பீச்சைக்கையிப்பக்கம் இருந்தவென்
தலையெயும் பீச்சைக்கையிப்பக்கம் இருந்தது
சோத்துக்கையிப்பக்கம் இருந்தவென் தலையெயும்
வீசிடுச்சு. 30. தண்ணிக்குள்ளெ விழுந்த
ரெண்டு தலையெயும் தென்னாலு ராமென்
தூக்கிக்கிட்டு ராசா வீட்டுக்கு வந்தான்.
31. ராசா பங்கெருக்காருண்ணு விசாரிச்சுக்-
கிட்டு ராசாகிட்ட நேராப்போயி, ராசா
காலுலெ விழுந்து, ராசாவெப்பாத்து,
"மகாராசாவே, நீங்க வந்து, ஒரு தலைதானெ
கேட்டீங்க. 32. நானு ஒங்களுக்கு ரெண்டு
தலை கொண்டாந்திருக்கேன். 33. ஒங்களுக்கு
அது ரொம்ப பிரியமாருக்கும்ணு நெனெச்-
-சிரேன்"ண்ணு சொல்லி பரியாசம் பண்ணுனான்.
34. ராசாவுக்கு இதைக் கேட்டவொடனே ரொம்ப
கோவம் வந்துச்சு. 35. "நீ எப்பிடிடா தப்பிச்சு
வந்தே"ண்ணு கேட்டாரு. 36. அதுக்கு அவென்
நடந்த சங்கதியெல்லாம் ஒண்ணுவிடாமெ
வெவரமாச் சொன்னான். 37. ராசா இதெக்கேட்டு
அவெம்புத்திக்காக அவனை ரொம்ப மெச்சி-
-ப்பேசி அவனுக்கு வேண்டிய எனாங்குடுத்தா-
-ரு. 38. தென்னாலு ராமென் இந்த எனாங்களும்
எல்லாத்தெயும் சட்டை பண்ணலெ.
39. ராசா வேலையும் இவென் வேலையும் என்ன-
-ண்ணு, ராசா வந்து, தென்னாலு ராமென்
எப்படா அப்புடுவான், அவனைக் கொல்லலாம்
-ண்ணுருக்கிறது, இவென் வந்து, ராசாவை
எப்படா ஏமாத்தி கேலிபண்ணலாம்ண்ணுருக்கிறது
எப்பப்பாத்தாலும் இதுதான் இவங்க ரெண்டுபேரு-
-க்கும் வேலை.

4
உன்னொரு கதை. Another Story.

1.தென்னாலு ராமென் இடயிருந்த தேசத்தெ
ஆளுர ராசாகிட்ட மந்தெமந்தெயா ஆடு
மாடு இருந்துச்சு. 2.அவரு தேசம் ரொம்ப
செளிப்பாருந்துச்சு. எங்கெ மளெ பெயாட்டியும்
அவரு தேசத்லெ மாத்ரம் மளெ மாசாமாசம்
தவறாமெப் பேஞ்சு வந்துச்சு. 3.ஆடு மாடு மேய்ரதுக்கு
பில்லு தாராளமாருந்துச்சு. 4.மேய்ரதுக்குப் பில்லு
அளவுக்கு மிஞ்சுமா இருந்தா ஆடு மாடு ஏன்
கொளுக்காது! 5.அப்பிடி கொளுக்கிர காலத்துலெ
பாலும் ரொம்ப ஜாஸ்தி குடுக்குமில்லியா?
6.இப்பிடியிருக்கையிலெ அரமனெயிலெ எங்கெ
பாத்தாலும் பாலு மயமாருந்துச்சு. 7.இந்தப் பாலெ
என்னு செய்யிரதுண்ணு ராசாவுக்குத் தெரியலெ.
8.யோசிச்சு யோசிச்சுப் பாத்தாரு. 9.புத்திக்கு
ஒண்ணும் புடிபடலெ. 10.கடெசியா ஒரு
முடிவுக்கு வந்தாரு. 11.அது என்னுண்ணு,
அரமனெ வேலெக்காரங்களெல்லாம் ஆளுக்கொரு
பூனெக்குட்டி குடுத்து, அதுக்கு வேண்டிய
பாலெயும் குடுக்கணும். 12.எவெம் பூனெக்குட்டி
நல்லா அளகா வருதோ அவனுக்கு மாட்டுலெ
பாதி குடுக்கணும்ண்ணு சொல்லி ஆளுக்கொரு
பூனெக்குட்டி குடுத்து தென்னாலு ராமனுக்கும்
ஒரு பூனெக்குட்டி குடுத்தாரு. 13.மாட்டுலெ
ஆசெ வச்சு எல்லாரும் பூனெக்குட்டியெ
வளத்தாங்க. 14.ஆனா தென்னாலு ராமென் மாத்ரம்
அப்பிடிச் செய்யலெ. 15.இவென் என்ன
செஞ்சான்ண்ணா:- பாலெ நல்லா கொதிக்க-
காய வச்சு பூனெக்குட்டி மொகத்தெ தெரிக்ர
பாலுக்குள்ளெ திணிச்சான். 16.பூனெக்குட்டி
மொகமெல்லாம் வெந்து போச்சு. 17.அதுனாலெ
அது ரொம்ப பயந்து போயி அன்னைக்கிருந்து
பாலெயே தொடலெ. 18.நல்ல பாலெக் கொண்டீ X
கிட்டத்லெ வச்சாலும் அது குடிக்ரதில்லெ.

X (கொண்டீ = கொண்டு போய்)

19. ஒரு நா ராசா எல்லாரையும் கூப்பிட்டு "ஒங்க பூனைக் குட்டிகளையெல்லாம் கொண்டாங்க. 20. நாம் பாக்கணும்" ண்ணாரு.

21. ராசா உத்தரவுப்படி எல்லாரும் அவென் அவென் பூனைக்குட்டியைக் கொண்டாந்தாங்க.

22. எல்லாரு பூனைக்குட்டியும் ரொம்ப அழகா பொதுக்கு பொதுக்குண்ணு இருந்துச்சு. (Fat & Flabby)

23. ராசா பூனைக்குட்டியெல்லாம் வரிசையா பாத்துக்கிட்டு வந்தாரு. 24. எல்லாம் ஒண்ணுக்கு மிச்சமா ஒண்ணு இருந்துச்சு. 25. எது ரொம்ப நல்லதுண்ணு அவருக்கு கண்டுபுடிக்க முடியல்லெ. 26. இப்பிடி அவரு சங்கடப்பட்டுக்கிட்டு -க்ர போது கடைசியா தென்னாலி ராமென் பூனைக்குட்டிகிட்ட வந்தாரு. 27. இதைப் பாத்தா ரொம்ப அநியாயமா இருந்துச்சு (worse in everything)

28. ராசாவுக்கு இதைப் பாக்கவும் ரொம்ப கோவம் வந்துருச்சு. 29. தென்னாலி ராமனைப் பாத்து, "அடே மடப்பயலே! நீயும் ஒரு மனுசன்தானா? ஒண்டா ஒம் பூனைக்குட்டி மாத்திரம் இப்பிடி இருக்கு" ண்ணு கேட்டாரு.

29. அதுக்கு அவென் "சாமி, நான் என்ன செய்யட்டும்? ஒங்க பூனை பாலே குடிக்க மாட்டேன் ண்ணுருச்சு. 30. இப்ப வேணுமும் "நீங்க பாருங்க" ண்ணு சொல்லி, ஒரு சட்டி நெறைய நல்ல பாலைக் கொண்டாந்து பூனைக்கு முன்னுக்கு வச்சான். 31. அது பாலை பாத்ததும் ஓடிருச்சு. 32. ராசாவுக்கு இதைப் -பாக்க ரொம்ப வேடிக்கையா இருந்துச்சு.

33. இதென்னண்ணு அவரு நல்ல மாதிரி விசாரிக்கையிலெ அவென் நடந்த சங்கதியைச் சொன்னான். 34. எல்லாரும் சிரிச்சாங்க.

35. அண்ணைக்கிருந்துதான் "சுடுதண்ணியிலெ விழுந்த பூனை பச்சைத்தண்ணியைக் கண்டாலும் பயப்படுமாம்" ண்ற பழமொழி வழங்குச்சு.

Page 38. Ans வா.

{ 22. பேருக்கு வந்துச்சு. = [illegible]
{ 23. பாத்துக்கிட்டு வந்தாரு. = [illegible]

1513

தென்னாது ராமைன் கதை.

அம்பட்டயென் பாப்பரான் ஆனது.

1. அரமனெ அம்பட்டயென் ஒருத்தென் இருந்தான்.
2. இவென் வேலையிலெ பெரிய கெட்டிக்காரென்.
3. சாதாரணமா இவென் வந்து, ஒவ்வொருநாளும் பொழுது பொறப்பட்டவொடனே அரமனெக்கிப் போயி ராசாவுக்கு நல்லா சவரம் பண்ணுவான்.
4. இதுனாலெ ராசாவுக்கு இவென் மேலெ ரொம்ப பிரியம். 5. ஒருநா ராசா வந்து, கொஞ்சம் அசதியா தூங்கிட்டாரு. 6. சாதாரணமா, வளக்கம்போலெ எந்திரிக்கிற நேரத்துலெ அவரு எந்திரிக்கலெ. 7. அம்பட்டயென் ராசாருந்த அரெக்குள்ளெ போனான்.
8. அவருக்குத் தெரியாமெ, அவரு மேலெ இருந்த கம்பிளி கிம்பிளி யெல்லாம் எடுத்துட்டு, மூஞ்சிலெ சுடுதண்ணி, சோப்பு கீப்பு எல்லாம் போட்டு, உண்ணாங் கொஞ்சம் தூக்கம் வராப்பலெ அவ்வளவு சொகம்...மா சவரம் பண்ணிட்டு, மொதல்லெ எப்பிடி அவரு, கம்பிளி பட்டுச்சால்வை, உண்ணாம் என்னென்ன போத்திருந்தாரோ, அப்பிடியே திரும்பவும் போத்திவிட்டுட்டு, தான் வீட்டுக்குப் போய்ட்டான். (தான் Colloquially means தன் reflexive)
9. கொஞ்ச நேரங்கழிச்சு, ராசா முழிச்சிட்டாரு.
10. மூஞ்சி கீஞ்சி யெல்லாங் கழுவி, கண்ணாடியிலெ மொகத்தெப் பாத்தபோது, மொகம் வந்து அம்பூட்டு நல்லாருந்துச்சு (So nice அம்பூ...ட்டு நல்லா) ராசாவுக்கு சந்தோசமாருந்துச்சு.
11. அன்னைக்கு அவரு சவரம் பண்ணலென்று அவருக்கு நல்லாத் தெரியும். 12. பின்னெ எப்பிடிடா இந்தமாதிரி மொகம் நல்லாருக்கின்னு, அவரு தனக்குள்ளேயே நெனைச்சு நெனைச்சு பாத்ததுலெ, அவருக்கு ஒண்ணும் புரிபடலெ. 13. கச்சேரியிலெ, ராசா, அம்பட்டயனை கூப்புடச் சொன்னாரு.

Part: with இரு.

20. நீங்க ரொசரொசமா சவுரங்ஞான்
பண்ணாருக்கிறீங்க.

14. ராசா கூப்புடவும் அம்பட்டயென்
ஓட்ட ஓட்டமா ஓடியாந்தான்.
15. ராசா காலுலெ வந்து விளுந்து, ராசாவெப்பாத்து,
"மகாராசாவே! மகாராசா உத்தரவுப்படி அடியேன்
வந்திருக்கறேன். 16. என்னத்துக்கு என்னியெ
கூப்புட்டீங்க" ன்னு ரொம்ப தாள்மெயா
கேட்டான். 17. அதுக்கு ராசா, அவனெப்பாத்து,
அடே கருப்பனு! 18. ஏன் மொகம் இன்னைக்கி,
சவரம்பண்ணுன மொகம் மாதிரி இருக்கேடா!
18. அது என்னடா விசேசம்" ன்னு கேட்டாரு.
19. அதுக்கு அவென் "மகாராசாவே! நீங்க
நெனெச்சதுலெ ஒண்ணும் இத்தமில்லெ.
20. நீங்க நெசமா (in reality) சவரந்
-தான் பண்ணிருக்கீங்க" ன்னான்.
21. அதுக்கு ராசா, "அதெப்பிடிடா! இன்னை
க்கி நீயின்னு அரமனெக்கே வரலியே" ன்னாரு.
22. அதுக்கு அவென், "மகாராசாவே, நானு
எப்பவும் வர்றமாதிரிதான் இன்னைக்கி
வந்தேன். 23. ஆனா, மகாராசா வந்து, நல்லா கொரட்டெ
-விட்டு (snoring) தூங்குனீங்க. 24. மகாராசாவெ
தொந்தரவு செய்யக்கூடாதுன்னு, கம்பினி-
கிம்பினியெல்லாம் எடுத்துப் போட்டுட்டு, சவரமெல்-
லாம் முடிச்சிட்டு, திரும்பவும் எல்லாத்தியும்
மாத்திவிட்டுட்டு நான் வீட்டுக்குப் போய்ட்
டேன் ராசாவே" ன்னான். 25. இதைக் கேக்கவும்
ராசாவுக்கு ரொம்ப ஆச்சரியமாருந்துச்சு.
26. அவரு அவனைப்பாத்து, (பாத்து means addressing)
"அடே கருப்பனு! ஒன்னைப்போல அம்பட்ட
யனை நான் ஒலகத்லியே பாத்ததில்லைடா!
27. இப்ப ஒனக்கு என்ன வேணும்ன்னாலும்
கேள்ளு (In place of "டா" "dra" sound is substituted
wrongly) இப்பவே நாங்குடுக்குறேன்" ன்னாரு.
28. அதுக்கு அவென், "மகாராசாவே!

" ஒங்க புண்ணியத்துலெ எனக்கு ஒண்ணும்
கொறைவில்லெ. 29. அனா, ராசா கேட்டதுக்காக,
அடியேன் ரொம்ப பயந்து ஒரு காரியம்
கேக்குறேன். 30. ராசாவுக்கு அது பிரியமாருக்குமோ
இல்லியோ, அதுதான் எனக்கு பயமாருக்கு
ராசாவே" ண்ணான். 31. அதுக்கு ராசா,
" அடே கருப்பனு! நிய்யி ஒண்ணுக்கும்
பயப்படாதெடா. 32. என்னுண்ணாலும் நான்
-ருக்கென். 33. அம்மா சொல்லு" ண்ணுரு.
34. அதுக்கு அவென், " மகராசாவே! எனக்கு
பிராமணனாகுரதுக்கு பிரியமாருக்கு. 35. அதுனாலெ
அம்பட்டயென்ன்ர பேரை மாத்தி ஐயரு
-ண்ர பேரு குடுக்கணும், மகராசாவே" ண்ணான்.
36. அதுக்கு ராசா, " இதுக்குத்தானடா வந்துருச்சு!
37. நாளை இன்னேரமெல்லாம் நிய்யி ஐயராயி
-ருவெடா" ண்ணு சொல்லி, ஒடனே மந்திரி
-யெக்கூப்புட்டு, " மந்திரி! பிராமணனுக
-ளையெல்லாம் நிய்யி கூப்புட்டு, இந்த
அம்பட்டயென் பிராமணனாகுரதுக்கு
என்னுன்ன சடங்கு (ceremony) செய்யணு
-மோ அதெல்லாஞ்செஞ்சு, இவனை நாளை
இன்னேரத்துக்கெல்லாம் (tomorrow by this time)
பிராமணனாக்கிரணும் ண்ணு சொல்லு" ண்ணு
உத்தரவு குடுத்துட்டு, அம்பட்டயனைப்பாத்து,
38. " அடே கருப்பனு! நிய்யி வீட்டுக்குப்போடா,
நாளைக்கு நிய்யி ஐயங்காராயிருவெடா"
ண்ணு சொல்லி அனுப்பிட்டாரு.
39. ராசா உத்தரவுப்படி மந்திரி போயி, பிராம
-ணனுகளையெல்லாம் கூப்புட்டு சங்கதியைச்-
சொன்னான். 40. அவனுக எல்லாம் ராசாவுக்கு
பயந்துகிட்டு, ராசா சொன்னபடி அம்பட்டயனை
பிராமணனாக்கிருனுக. 41. மறுநாளு ராசா வந்து
அம்பட்டயனைப்பாத்து, கருப்பனசாமி ஐயர்
— வாள்

கொள்.

45. நீங்க வந்து, வேறெ அம்பட்டயெந்தான் பாத்துக்கறணும்.
ஆக. (7, 49)

46. நானு வந்து, இப்ப பிராமணனாய்ட்டேன்.
போ. (7 47)

49. அவங்களுக்கெல்லாம் மதிப்புக்கொறெவாப் போயிருடம், (... ×

ப

Part: with இரு.

52. கஷ்டப்பட வேண்டியதாருக்கே.

என்னு ஜயருவான், சொகந்தானு"ன்னு
-ரு. 42. அதுக்கு அம்பட்டயென், மகாராசாவே!
ஒங்க புண்ணியத்துலெ நானு இப்ப பிராமணனாய்ப்
-டென். 43 அதே போதும். ஆனா, ராசாவே!
உண்ணாம் ஒரு காரியமிருக்கு. அதென்னான்னா,
44. இன்னைக்கிருந்து நானு ஒங்களுக்கு சவரம்
-பண்ண வரமுடியாது. 45. நீங்க வந்து, வேறெ
அம்பட்டயென்தான் பாத்துக்கறணும். 46. ஏன்னா
நானு வந்து, இப்ப பிராமணனாய்ட்டென்.
47. மத்த பிராமணனுகளுக்கெல்லாம் தாய்புள்ளெ
-யாய்ட்டென். 48. நானு, திரும்பவும் சவரவேலெ
செஞ்சா, அவங்களுக்கெல்லாம் மதிப்புக்கொ
-றெவாப் போயிரும். 49. அதுனாலெ, ராசாவே,
என்னியெ தயவு செஞ்சு மன்னிச்சுக்கிறணும்
-ன்னான். 50. ராசா வந்து, இப்பத்தான் தொந்தர
-வுலெ ஆப்புட்டுக்கிட்டாரு. 51. அவரு தனக்குள்ளெ
" இதென்னடா, வம்புலெ மாட்டிக்கிட்டொம்.
52. வழியிலெயிருக்ர கோடாலியெ காலுலெ
தூக்கிப் போட்ட மாதிரி, சும்மாருக்ர
அம்பட்டயனெ பிராமணனாக்கிட்டு, இப்ப
நம்ம, அம்பட்டயென் இல்லாமெ, கஷ்டப்பட
-வேண்டியதாருக்கே! 53. இதுக்கு என்னடா
யோசனெ" ன்னு நெனைச்சுக்கிட்டுருந்
-தாரு. 54. இப்பிடியிருக்கையிலெ தென்னாலிராமென்
ராசாகிட்ட வந்து, "மகாராசாவே, மகாராசா
ஏதோ ரொம்ப மனவருத்தமா இருக்காப்லெருக்கே,
அப்பிடி மகாராசாவுக்கு வருத்தம் வர காரணம்
என்ன" ன்னு கேட்டான். 55. அதுக்கு ராசா
தென்னாலிராமென்கிட்ட நடந்த சங்கதி
யெல்லாம் சொன்னாரு. 56. இதைக் கேக்கவும்
தென்னாலிராமனுக்கு ரொம்ப சிரிப்பு வந்துருச்சு.
57. ராசா இதெப்பாத்து, "அடே தென்னாலிராமா!
ஒனக்கென்னடா கேலியாவாருக்கு?

58. நான் பட்(டு)ற பாட்டுலெ, ஒனக்கு சக்காந்தமா
-ருக்கோ" ன்னு சொன்னாரு. 59. அதுக்கு
தென்னாலிராமென், "மகாராசாவே, நாளைக்கு
இன்னேரமெல்லாம் ஒங்களுக்கு நானு அம்பட்-
-டயாங்கிருக்கிறேன்." 60. நீங்க இதுக்கு ஒன்னும்
வெசனப்படாதிங்கன்னான். 61. ராசா
"சரி" ன்னாரு. 62. ஒவ்வொரு நா சாயந்தரா-
த்லியும் ராசா வெளியெ போயி ஒலாத்தரது
வளக்கம். 63. அவரு போர வழிமேலெ ஒரு கொளம்
-ருக்கு. 64. ராசா போரதுக்கு முந்தியே, தென்னாலிராமென்,
ஒரு கருப்பு நாயெப் புடிச்சு கொளத்துக்கு இளுத்து
-க்கிட்டுப் போனான். 65. ராசாவும் இரிச்ச நேரத்லெ
வந்தாரு. 66. ராசா நல்லா பாக்குறப்பெ, இவென்
என்ன செஞ்சான்னா, நாயெ நல்லா தண்ணி
-யிலெ முக்கி, ஒரு பாறையிலெ வச்சு, அது
கத்தக்கத்த "சொரச்சொர" ன்னு தேச்சுக்கிட்டே
-ருந்தான். 67. ராசா, கிட்டத்லெ வந்து, "அடே,
தென்னாலிராமா! என்னடா, ஒரு பெரிய
பாவிப்பயலாருக்றெ நிய்யி. 68. ஏன்டா
இந்தமாதிரி, அந்த நாயி கத்தக்கத்த அதெப்பு
-டிச்சு தேச்சுக்கிட்டுருக்றெ" ன்னாரு.
69. அதுக்கு தென்னாலிராமென், "மகாராசாவே!
நானு வந்து, கருப்பு நாயெ வெள்ளெ நாயாக்க
-ப் போறேன். 70. அதுக்குத்தான் இப்பிடித் தேக்கிறேன்.
71. உண்ணாங் கொஞ்ச நேரத்துக்குள்ளெ இது
வெள்ளெ, நாயாயிரும். 72. நீங்க வேணா
பாத்துக்கிட்டேருங்க" ன்னான். 73. இவென்
இப்பிடிச் சொல்லவும் ராசாவுக்கு ரொம்ப
கோவம் வந்துருச்சு. 74. அவரு இவனெப் பாத்து,
"அடே, மடப்பயலே, ~~இ~~எரக்கம்ன்றது
(That what is Called "Mercy") ஒனக்கு கொஞ்ச
-ங்கூட இல்லியேடா! 75. நீ என்ன ஒரு
மனுசென்தானா?" ன்னு திட்டுனாரு.

76. அதுக்கு அவென், "மகாராசாவே,
நீங்க ஒண்ணியெ இட்றதுக்கு, காரணம்
ஒண்ணும் இல்லெ. 77. நாஞ்செய்ரது ஒண்ணுமே
நாயந்தான். 78. எப்பிடின்னா, எப்ப ஒரு
அம்பட்டப்பய பிராமணனானானோ, இந்த
கருப்பு நாயி வெள்ளெ நாயாகிறதுக்கென்னா
வந்துருச்சு. (வந்துருச்சு here means colloquially
"Is it impossible"? and does not refer to anything
about "coming") also mean "Is it a very
great thing that it can not be done". ன்னான்.
79. இவென் இப்பிடிச் சொல்லவும், ராசாவுக்கு
ரொம்ப வெக்கமாயிருச்சு. 80. ராசா வெக்கப்பட்
-டுப் போயிட்டாருன்னு இவென் நல்லா
கண்டுக்கிட்டு, "கெக்கெ போட்டு" ச்சிரிச்சான்.
(laughed a loud laughter) 81. ராசாவுக்கு
கோவம்ன்னு பொறுக்கமுடியலெ. 82. வெக்க
-மாவும்-ருந்துச்சு. 83. அவருக்கு, என்ன பதிலு
சொல்றதுன்னும் தெரியலெ. அப்ப வந்து,
இவென் ராசாவெப்பாத்து, "மகாராசாவே,
இது ஒரு பெரிய அதிசயமில்லெ. 84. கடவுளு
ஆராரெ எப்பிடி எப்பிடி உண்டாக்குறாரோ,
அவுங்க அப்பிடி அப்பிடித்தான் சாகவரைக்கும்
இருக்கணும். 85. மத்தபடி எடையிலெ புதுசா
ஒண்ணுஞ் செஞ்சுக்கமுடியாது. 86. அதுனாலெ
நீங்க வந்து, அந்த அம்பட்டப்பயலெ கூப்புட்டு
வெவரத்தெச் சொல்லி "நாளைக்கி செரைக்
-கிறதுக்கு (to shave) நியமி கண்டிப்பா
வந்துரணும்ண்டா" ன்னு உத்தரவு குடுத்து
-டுங்க. 87. அப்ப எல்லாம் சரியாப்போயிடும்"
ன்னான். 88. அப்பிடியே ராசா செஞ்சாரு.
89. அம்பட்டயென் வளக்கம் போலெ தான்-
வேலெயெச் செய்ய ஆரம்பிச்சிட்டான்.
90. தென்னுதுராவென் புத்திக்காக, ராசா அவனுக்கு
நல்ல எனாங் குடுத்தாரு. (present).

2. Part: with இரு
அப்பவும் சும்மாத்தான் இருந்துக்கிறான்.
5. சும்மாருந்தூருக்கு.
6. தொந்தரவு கொடுத்துருக்கிறாங்க.

6 [illegible]

தென்னாலி ராமன் கதை. 45

1. தென்னாலி ராமனுக்கும் ராசாவுக்கும் எப்பப்பார்த்தா
-லும் இழுவையும் பறியுமாருந்துச்சு (Tug of war)
2. ஆனா தென்னாலி ராமன் வந்து, எப்பவும் நாயமாத்
-தான் இருந்துருக்கிறான். 3. இவன் கதை பூரா
படிச்சு மட்டுலை, ராசாதான் இவங்கிட்ட எப்பவும்
வம்பு இழுத்துக்கிட்டுருந்தாருன்னு தெரியுது.
4. இவன் சமயா சமயத்லெ (at times) கோவமும்
பொறுக்கமுடியாமெ, ராசாவுக்கும் மந்திரிக்கும்
பாடம் படிச்சுக்குடுக்கிறதும் ன்னு, அவங்களாலெ
பொறுக்கமுடியாத காரியம் என்னமாவது செஞ்சிருக்
-ரானே தவிர வேற அனுவசியமா ஒன்னும்
இவஞ்செஞ்சதில்லை. 5. கடேசிலெ கணக்குப்பாக்கப்
-போனா இவஞ்செஞ்சது தான் நாயமாருந்துருக்கு.
6. ராசாவும் மந்திரியும், மத்தவங்க (அதாவது, இவன்
விரோதிக) சொல்ற கோள் குண்டுணிகளை
கேட்டுக்கிட்டு இவனுக்கு எப்பவும் தொந்தரவு
குடுத்துருக்கிறாங்க. 7. இவன் மேலெ கோள் சொன்
-னவங்கள்லெ முக்கியமானவுக அந்தக்காலத்து
பாப்பாருக. (Brahmins) 8. சாதாரணமா பாப்பான்
சங்கதிதான் நம்மளுக்குத் தெரியுமே! 9. இவன் வந்து,
கெஞ்சுனா மிஞ்சுவான். மிஞ்சுனா கெஞ்சுவான்.
10. "பாப்பானே ஏப்பானே" ன்ற பழமொழிபோலெ
இவன் எப்பவும் ஆளுகளை ஏச்சு எத்துலெயே
பொழைக்கிறவன். 11. சின்னச்சந்து கெடைச்சிட்
-டா போதும். 12. ஒரே அடியா ஆளைக்கொண்டு
அமுக்கியே புடுவான். 13. பாப்பானை நம்புறதுஞ்சரி,
நல்ல பாம்பை நம்புறதுஞ்சரி. 14. இவனுக சங்கதி
-யெல்லாம் தென்னாலி ராமனுக்குத் தெரியும்.
15. "எப்படா சமயம் வாய்க்கும். 16. இவனுகளைக்
-கொண்டு அமுக்கலாம்" ன்னு தென்னாலி ராமன்
வழி பாத்துக்கிட்டேயிருந்தான். 17. இவன்
நெனைச்சபடி ஒரு நா சரியான சமயம்
ஒன்னு கெடைச்சுச்சு. 18. அது என்னான்னா:—

ராசா தாய்க்கு ரொம்ப நாளா சொகமில்லாமெ
-இருந்துச்சு. 19.அந்த ஊர்லெருக்கிற வயித்தியர்ங்கெ,
ராசாத்தியெப்பாத்து மருந்து குடுக்காமெ, இல்லாட்டி
என்னமாவது ஒரு கோளாறு சொல்லாமெப் போனெ
-வங்க ஒருத்தருமில்லெ. 20.ராசா வந்து, எப்பேர-
-ப்பட்ட வயித்தியனைத்தான் கூப்புட்டு, தான்
(Reflexive தான்) தாய்க்கு மருந்து குடுத்தாலும் சொகமான
பாட்டைக் காணோம். 21.கடேசி கடேசியின்னு, ராசாத்தி
செத்தேபோய்ட்டா. 22.இவ சாகிறதுக்கு ஒரு நிமிஷ
-த்துக்கு முந்தி, ஒரு தங்கக் கொளுவை பாக்கணும்னு.
23. ராசா வேலைக்காரர்கிட்டச் சொல்லி, அவுங்க
அதை எடுத்துக்கிட்டு வர்றதுக்கு முந்தி, இவ
செத்துப்போய்ட்டா. 24.இதுனாலெ ராசாவுக்கு ரொம்ப
வெசனமாயிருச்சு. 25.பக்கத்லெ ஒரு பூசாரி
நின்னுக்கிட்டிருந்தான். 26.ராசா அவென்கிட்ட
வெவரத்தைச் சொல்லி "இதுக்கு என்ன செய்றது"
ன்னு கேட்டாரு. 27.அதுக்கு அவென் "ராசாவே,
இது ஒரு பெரிய காரியமில்லெ. 28.சாதாரணமா
இந்தமாதிரி சாகிறவங்க ஒலகத்லெ ரொம்பப்பேரு
இருக்றாங்க. 29.அவுங்க ஒரு கவலையுமில்லாமெ,
ஒலகத்துக்கடுத்த ஆசை ஒண்ணும் இல்லாமெ,
சாகறதுனாலெ, அவுங்க மனசுக்குச் சமாதானமா
-ப்போயி எங்கெ தங்கணுமோ அங்கெ தங்கிறதுக்
-ப் பதிலா ஒலகத்லெ பேயா அலைவாங்க.
30. அனா இந்தமாதிரி பேயா அலையிறதைத் தடுக்கிறது
-க்கு ஒரு நல்ல வழியும் இருக்கு. 32.அந்தமாதிரி
செய்றதாருந்தா அவுங்க நேரெ சொர்க்கலோகத்
-துக்குப் போயிருவாங்க" ன்னான்.
33. இதைக் கேக்கவும், ராசாவுக்கு கொஞ்சம்
ஆறுதலாருந்துச்சு. ராசா பூசாரியெப்பாத்து,
"அந்த வழி என்ன" ன்னு கேட்டாரு.
34. அதுக்கு அவென் "ராசாவே, ராசாத்தியம்மா
சாகும் முன்னெ ஒரு தங்கக் கொளுவதானெ கேட்டாங்க.

39. அநுகுதோ.

40. நயாரணபெரகு

35 இது தானு ஒரு பெரிய கிரியமைப் போச்சு.
36 இதைப்பத்தி நீங்க ஒண்ணும் பயப்பட றதிங்க, ராசாவே,
அதெல்லாம் நானு சரிபண்ணிர்றேன் (Curly "R"
for the vibrating sound like வர்றென்)
37. நீங்க மாத்தரம் இந்த ஊர்லெருக்ர பிராமணரையெல்-
லாம் கணக் கெடுத்துக்கங்க. 38. கணக்கெடுத்து ஆளுக்கு
ஒரு கொளுவ வீதம் திட்டமாங்கிட்ட செய்யச்சொல்லுங்க
39. அவுங்களுக்கு எத்தினை கொளுவ ஆகுதோ
அதே கணக்குலெ உண்ணுறு பங்குளும் செய்யச்சொ
ல்லுங்க. 40. எல்லாஞ்செஞ்சு தயாரானப்பெறகு,
ஒரு நாளைக்கு பிராமணென் எல்லாத்தெயும்
(instead of எல்லாரையும் we are using colloquially
எல்லாத்தையும் which is எல்லாவற்றையும் neuter plural)
கூப்புடுங்க. 41. கூப்புட்டு ஒரு பெரீ...ய விருந்து
வைக்கணும் (the timing பெரீ...ய in place of பெரிய
emphatically means "a very great". The same way,
by giving a long sound to any adjective according
to the accent, it gives the full meaning.
For example:- "இவென் ரொம்ம...ப சின்னப் பையனு
இந்தான்" He was a tiny little boy. (Very)
42. விருந்து வச்சப் பெறகு அவுங்களுக்குச் செய்ய
வேண்டிய மருவாதியெல்லாஞ் செஞ்சு ஆளுக்கு ஒரு
தங்கக் கொளுவை, வெத்தலெ, பாக்கு, தேங்கா, பளம்
இதுகளோடெ சேத்து ஒரு தட்டுலெ வச்சு,
கொட்டு மொளக் கோடெ குடுக்கணும். 43. அந்த
மத்த பாதி தங்கக் கொளுவகளெ நான் வந்து
நம்ம சாமிக்கு முன்னுக்கு வச்சு பெரீ...ய பூசை
ஒண்ணு செய்யிவென். 44. இப்பிடிச் செய்யிர
நேரத்லெ ராசாத்தியம்மா எங்கெருந்தாலும் சரி,
இங்கெ வந்து இதெல்லாம் பாத்துட்டு, நேரெ
சொக்கலோகத்துக்கு தடெ ஒண்ணும் இல்லாமெப்-
போயி பார்வதி, பரமசிவென் பக்கத்லெ போயி
உக்காந்துக்கிருவாங்க, ராசாவே" ன்னான்.

53. அண்ணாக்கு ஆசை

45. இதைக் கேக்கவும் ராசாவுக்கு உண்ணாங் கொஞ்சம் சந்தோசமாயிருச்சு. 46. ஒடனே அவரு மந்திரியெ கூப்புட்டு சங்கதியெல்லாம் வெவரமாச் சொல்லி 47. "மந்திரி, நாளைக்கே இதெல்லாஞ் செஞ்சுரணும். 48. தாமசம் ஒண்ணும் இருக்கக்கூடாது" ன்னு கண்டிப்பா உத்தரவு குடுத்தாரு. 49. ராசா உத்தரவுப்படி, மந்திரி, செய்ய வேண்டியதையெல்லாம் அன்னைக்கே செஞ்சு முடிச்சுட்டான்.

50. மறுநாளு காலையிலெ கோயிலுலெ ஒரு பெரிய திருவிழா மாதிரி இருந்துச்சு. 51. பூசாரி சொன்னபடி எல்லாச் சங்கதியும் நடந்துச்சு. 52. ராசாவுக்கும் ரொம்ப சந்தோசமாருந்துச்சு. 53. ராசா வந்து அன்னைக்கு ஆன செலவெப்பத்தி கொஞ்சமாவு கவலைப்படலெ. 54. தாந்தராயி சொக்கலோகம் பேரதைப்பத்தி மாத்தரம் நெனைச்சு நெனைச்சு அவரு ரொம்ப பூரிப்பாருந்தாரு. 55. இப்படியிருக்கையிலெ தென்னாலு ராமென் இதைப்பாத்துக்கிட்டேயிருந்தான்.

56. இவென் தனக்குள்ளெயே என்னு நெனைச்சான்--ன்னு " இருங்கடா பயலுகா! ஒங்களை ஒரு கையி பாக்குறென். 57. இப்பிடியா நீங்க அப்பராணி ராசாவை ஏச்சுப் பொளைக்கிறீங்க? 58. நாளைக்கு நானு ஒங்களுக்கு குடுக்ர குடுப்லெ

(Verb + Verbal noun — the giving that I give)

59. ஒங்க ஜென்ம ஆயுசுக்கும் (entire your life-time) நீங்க இனிமேலு இப்பிடி பாவப்பட்டவங்களை ஏமாத்திப் பொழைக்காமெருக்ரதுக்கு வழி செய்யிறென் 60. அப்புட்டதுங்களா காமாட்டி படுவாருகா" ன்னு நெனைச்சு, அப்பவே பிராமணன் எல்லாத்தையும் பாத்து " சாமிகளே, குருமார்-களே, தெய்வங்களைக்கூட காப்பாத்துற புண்ணியவானுகளே, ஒலகத்துலெருக்ர எல்லா சாதிக்கும் ஒசந்த சாதிக்காரரே, கடவுளு உண்டாக்குன மனுசர்லெ விசேசமான மனுசரே!

61. ராசாக்கூட எப்பவும் போத்திப் பொகளும்
(Rel: future — who are praised) ஜனவாளுகளே!
62. நாளைக்கி ஏன் வீட்லெ ஒரு விசேஷம்
இருக்கி. 63. தயவு செஞ்சு நாளைக்கி இன்னேர
— மெல்லாம் நீங்க ஏன் வீட்டுக்கு வந்து,
ஏந்தாயிக்காக ஒரு சின்னப் பூசை வச்சா
அந்த ஏனைத்தாயிகூட சொக்க லோகம்
போயிருவா. 64 அதுக்காக நானும் ஒங்களுக்குச் —
செய்ய வேண்டிய மருவாதியெ செய்யிறேன்.
65. ஏன் மேலெ ~~ஒரு~~ பெரிய மனசு வச்சு நீங்க
எல்லாம் வந்தா ஒரு பெரிய புண்ணியமாருக்கு
ம்ணு ரொம்ப தாழ்மையா, வஞ்சகம்
இல்லாதவென் போல பாசாங்கு பண்ணி
கெஞ்சிக் கேட்டுக்கிட்டான். 66 அதுக்கு
எல்லா பிராமணாளுகளும் அந்த பெரிய பூசாரியும்
சம்மதிச்சு, எல்லாரும் மருநாளுலெ தென்னாலு
ராமென் வீட்டுக்குப் போனாங்க.
67. தென்னாலு ராமென் வந்து, இவுங்க எல்லாத்
தையும், சந்தேகத்துக்கு ~~இ~~ எடம் இல்லாமெ
ரொம்ப வணக்கமாவும் மருவாதியாவும்
அழைச்சு, ஒரு பெரிய விருந்து வச்சு
வெத்தலெ பாக்கு, போக்கு வருத்து (etc.)
எல்லாங் குடுத்து பூசை வைக்கச் சொன்னான்.
68. எல்லாரும் அப்பிடியே செஞ்சாங்க.
69. வீட்டுக்குப் பொறப்புடுற நேரத்லெ, இவென்
அவுங்களைப் பாத்து, சாமிகளே, ஏந்தாயி
சாகுறபோது ஒரு சங்கதி நடந்துச்சு.
70. அதை இப்ப கொஞ்ச நேரத்துக்குள்ளெ
ஒங்களுக்குச் சொல்றேன்ணு சொல்லி
உண்ணுரு வீட்டுக்குள்ளெ போயி,
தான் ஏற்கனவே காய வச்சுக்கிட்டிருந்த
இரும்புக் கொளுவுகளை நல்லா பழுக்கக்
காச்சி, கையிலெடுத்துக்கிட்டு, மகளைப்

— பாத்து

"அடே மகனே, கதவு எல்லாத்தையும்
நல்லா சாத்திடு (ரு) ஒருத்தனையாவது
வெளியெ விட்ராதெ" ன்னு சொல்லிப்புட்டு
பிராமணனுககிட்ட வந்து "சாமிகளே!
எந்தாயி ரொம்ப சொகமில்லாமெருந்தா.
71. வயித்தியரு சொன்னாரு "ஆடு போட்டா
பொளெச்சுக்கிடுவா" ன்னு. 72. ஆனா
ஆடு போடுறதுக்கு முன்னே அவ செத்துப்போ
-யிட்டா. 73. இப்ப அவ பேயாத்தான் அலெ
-யிறா. 74. அவளுக்கு போடாமெ விட்ட ஆடெ
ஒங்களுக்குப் போட்டா அவ சொக்கலோகம்
போவாண்ணு நெனெச்சு ஒங்களெ
நானு கூப்புட்டென். 75. வேறெ ஒண்ணுமில்லெ
-ன்னு சொல்லி ஒவ்வொருத்தென்
ஆத்துலெயும் ஆடு போட்டான். (Branded
each on buttocks) 76. இவனுக வலி பொறு
க்க முடியாமெ வெளியெ ஓடப்பாத்தானுக.
77. ஆனா கதவெல்லாம் "இச்" ன்னு (very tight)
அடெச்சிருந்துச்சு. 78. அதுனாலெ அவனுகளா
-லெ வெளியெ ஓட முடியலெ. 79. தென்னூரா
-மென் கடேசி ஆனாவரைக்கும் ஒருத்தென்
தவறாமெ ஆடு போட்டுட்டு "இப்ப ஓடுங்கடா
படவாளுகளா. 80. இனிமேலு ஒருத்தரையும்
ஏய்க்காதிங்கடா" ன்னு சொல்லி கதவெ
தொறந்து எல்லாத்தையும் வெரட்டிட்டான்.
81. இவனுக எல்லாரும் அழுதுகிட்டே ஓடி
ராசாகிட்ட சொன்னானுக. ராசா ஒடனெ
ஆளனுப்பி தென்னூராமனைக் கூப்புட்டு
விசாரிச்சாரு. 82. தென்னூராமென் வந்து
பிராமணனுக தந்திரத்தையும் ராசா புத்தியீ
னத்தையும் எடுத்து வெளிக்கிக்காட்டினான்.
83. ராசா வெக்கப்பட்டுப் போய்ட்டாரு. 84. பிராமணென்
எல்லாம் "கெடெச்சது மிச்சம்" ன்னு நெனெச்சு
ஓடிப் போய்ட்டானுக.

Paid Rs 2-4

46. Part: with இரு

யயர்ச க்கயு வச்சிருக்கென.

தென்னாதுராமென் கதை. 51

1. நம்மளுக்கி (ங்ஙு) முன்னேயே தெரிஞ்சபடி, ராசா-வுக்கும் தென்னாதுராமனுக்கும் எப்பவும் புடிக்காது.
2. தென்னாதுராமென் என்னைக்காவது ஒரு அக்கிர-மம் செஞ்சுக்கிட்டேயிருப்பான். 3. ராசா அதுக்கி பதிலு, இவனுக்கி தண்டனை குடுத்துக்-கிட்டேயிருப்பாரு. 4. இப்பிடித்தான் இவுங்க ரெண்டுபேரு சங்கதியும். 5. எப்பிடித்தான் ராசா இவனுக்கி தண்டனை குடுக்கட்டும்!
6. இவனுக்கு அதெல்லாம் ஒண்ணும் பெருசில்லை.
7. இண்டமொளைஞ்சு (entering in with gradual trouble which also means "By hook or by crook") எப்பிடின்னு-ஆம் இவென் தப்பிச்சிருவான். 8. காரியம் இப்பிடியிருக்க, (temporal infinitive) தென்னாது-ராமென் வந்து (வந்து has no meaning) ராசாவையும் மந்திரியையும் எப்பிடியாவது மானத்தைக் கெடுக்க-ணும்ணு வழிபாத்துக்கிட்டேயிருந்தான்.
9. ஒரு நாளு ஒரு வழி ஆப்புட்டுச்சு. 10. அது என்னன்னு (or எப்பிடின்னு), அந்த ஊருலெ ரொம்ப திருட்டுப்போச்சு. (வுடு போச்சு = took place) 11. திருடனுகளை ஒருத்தராலியும் கையும் களவுமா (Red handed) புடிக்கமுடியலை. இது ராசாவுக்கும் மந்திரிக்கும் ரொம்ப வருத்தமாருந்துச்சு. 12. இப்பிடியிருக்கையிலெ தென்னாதுராமென் ராசாகிட்ட வந்தான்.
13. வந்து, ராசாவைப்பாத்து, "ராசாவே, நான் வந்து, திருடனுகளைப்புடிச்சுக்குடுக்கிறேன்.
14. அதுக்கு நீங்க எனக்கி என்ன குடுப்பீங்க"?—ன்னான். 15 அதுக்கு ராசா "அடே தென்னாதுராமா, நீ மாத்தரம் திருடனைப்புடிச்சுக்குடுத்திட்டி-யின்னா, நான் வந்து, ஒனக்கு இந்த ஊரிலெ பாதியைக்குடுக்கிறேன்ன்டா"ன்னாரு.
16. அதுக்கு இவென் "நல்லது ராசாவே. அப்பிடி-ன்னா, நீங்க வந்து, நானு சொல்றபடி செய்-யணும்.

17. இல்லெண்ணு, என்னாலெ முடியாது
ராசாவே" ன்னான். 18. அதுக்கு ராசா,
"நில்லுடா. நீயி என்ன சொல்றியோ
அதை நானு செய்யிறேன்னுடா" ன்னாரு.
19. அப்ப அவென் அவரெப்பாத்து, "ராசாவே,
சாலெயிலெ (in the avenue) ஒரு சின்ன
கடெ இருக்கு. 20. அந்தக் கடெயிலெ மாத்திரம்
சாமானெல்லாம் ஒரு வெள்ளிக் குறைக்கு — (Very little)
குறைக்குன்னு விக்கிட்டிருக்கும்.
21. அந்தக் கடெயிலெ பகல்லெ (extra ல் denotes the long sound of the first ல்) யாவாரம் ஒண்ணும்
நடக்கிறதில்லெ. 22. ரவ்வுலெதான் யாவாரம்.
23. அது எப்பிடின்னா, சாமம் வரைக்கும் திருடுறவுக
ஊரெல்லாம் திருடிட்டு, நடுச்சாமத்துலெ
(long sound is to particularise the dead of night)
ரொம்ப களைப்பா அங்கெ வருவாங்க. 24. வந்து,
கண்டதியும் கடியதியும் (something or else)
வாங்கி தின்னுபுட்டு, கொஞ்ச நேரம்
அங்கெ உக்காந்து பழமை பேசிக்கிட்டுப் —
பாங்க (converse) ~~அவென்~~ அப்புறம் அவென் அவென்
தான் வீட்டுக்கு (respective houses) விடியுமுன்னெ
போயிருவான். 25. நீங்க மாத்திரம் அங்கிட்டு
வந்து நான் சொல்றபடி செஞ்சா, இன்னைக்கே
அவுங்களெ புடிச்சிரலாம்" ன்னான்.
26. ராசாவுக்கு, இதைக் கேக்கவும், ரொம்ப சந்தோசம்
வந்துருச்சு. 27. மந்திரிகிட்ட இதைப்பத்தி
கலந்து பேசி (consult) கிட்டியா, ராசாவும்
மந்திரியும் தென்னாலு ராமென் சொன்ன
எடத்துக்குப் போனாங்க. 28. தென்னாலு ராமென் வந்து,
இவுங்க ரெண்டு பேரும் போறதுக்கு ரொம்ப நேரத்துக்கு
முன்னையே தாஞ்சொன்ன எடத்துலெ போயி
இருந்தான். 29. அங்கெ போயி எல்லாச் சங்கதியும்
ஏற்பாடு செஞ்சுக்கிட்டான்.

30. ராசாவும் மந்திரியும் வந்தாங்க. 31. தென்னாலு
ராமென் சொன்னபடி ஒரு புளியா மரத்துக்கடி
யிலெ ஒரு திண்ணைக் குடிசை இருந்துச்சி.
32. அதுக்குள்ளெ ஒரு வௌக்கு மினுக்குமினுக்குன்னு
எரிஞ்சுக்கிட்டிருந்துச்சு. 33. அவுலு, கடலை, வடை,
சுப்பி, முட்டாயி, கரும்பு, அச்சு வெல்லம்,
இட்லி, தோசை, வெத்தலை, பாக்கு, போயலை,
இதுகளெல்லாம் இருந்துச்சு. 24. அங்கெ ஒரு
கூனக்கெழவி இதுகளை விக்கிறதுக்கு உக்-
—காந்துக்கிட்டிருந்தா. 25. இதையெல்லாம் பாக்கவும்,
ராசாவும் மந்திரியும், தென்னாலு ராமென்
சொன்னது வாஸ்தவந்தான்ன்னு நெனைச்சு
நம்பிக்கிட்டாங்க. 26. தென்னாலு ராமென் இவங்க
ரெண்டு பேத்தையும் பாத்து, "சாமிகளே!
திருடனுக வர்றதுக்கு இப்ப நேரம் ஆயிடுச்சு.
27. ஒங்களைப்பாத்தா ஓட்டெடுவானுக (long sound ட
in place of டி means "take to heels").
28. அதுனாலெ நீங்க ரெண்டு பேரும் இந்தச்சாக்குக்
குள்ளெ நொளைஞ்சுக்கங்க. 29. திருடனுக வந்து
கொஞ்சநேரம் களிச்சு அவனுகளுக்கு தெரியாமெ
ஒங்களைத் தொறந்து விட்டுர்றேன். 30. அப்ப நீங்க
ஒரு ஊசுலு (whistle) அடிச்சா போலீசுக்கார-
ரெல்லாம் கூப்பிட்டு, எல்லாரும் ஒண்ணு
அவனுக மேலெ பாஞ்சு அவனுகளை லேசா
புடிச்சுக்கிறலாம்." ன்னான். 31. இதைக் கேட்டு,
ராசாவும் மந்திரியும் ஒருத்தரை ஒருத்த பாத்து
இது நல்ல ஓசனை தான்ன்னு சொல்லி,
தென்னாலு ராமனைப்பாத்து, "அடே தென்னாலு
ராமா! 32. நீ சொல்ற ஓசனை ரொம்ப நல்ல
ஓசனையாத் தெரியிது. 33. அதுனாலெ ஒண்
இல்லப்படி நாங்க ரெண்டுபேரும் சாக்கு-
-க்குள்ளெ பூந்துக்கிர்றோம்ன்டா. 34. நீமாத்தரம்
கொஞ்சம் சாக்ரதையா இருந்துக்க (ந்)ன்னு

சொல்லி சாக்குக்குள்ளே பூந்துக்கிட்டாங்க.
35. இதுக்குள்ளே (purpose for this) தென்னூ-ராமென் ஏற்கனவே ரெண்டு மொரட்டு சாக்கு கொண்டாந்திருந்தான்.
36. இவங்க ரெண்டு பேரும் சாக்குக்குள்ளே பூரவும், ரெண்டு சாக்கையும், வாய்ப்பக்கம் நல்லா இறுக்கிக்கட்டிப்புட்டான்.
37. கொஞ்ச நேரமா, இப்பத்தான் திருடனுக வர்ற மாதிரியும், என்னென்னமோ பேசுற-மாதிரியும், இவன் ரொம்ப சாக்ரதையாருக்கற-மாதிரியும் காமிச்சுக்கிட்டு, அப்பப்ப இவங்ககிட்ட வந்து காதுக்குள்ளே, குசுகுசுன்னு சொல்லிக்கிட்டேருந்தான்.
38. இவென் இப்பிடிச் செய்யவும், அவங்களுக்கு உண்மைம் ரொம்ப நம்பிக்கை வந்துருச்சு.
39. இவெஞ் சொன்ன நேரமும் வந்துருச்சு.
40. அந்த நேரத்லெ ஒரு அஞ்சாறு (5 or 6) போலீஸ்காரனுக ரோந்து சுத்திக்கிட்டு (patrol) வந்தானுக. 41. போலீஸ்காரென் அழைக்கிற மாதிரி இவென் ஒரு ஊளை அடிச்சான். 42. இதைக் கேக்கவும், அவனுக சத்தங் கேட்ட எடத்துக்கு ஓட்ட ஓட்டமா ஓடியாந்தானுக. 43. ஓடியாரவும் தென்னூ-ராமென் அவனுகளைப் பாத்து, "அப்பா செந்தலைப்புலிகளே (red-headed tigers) இத்தினை நாளும் நீங்க எல்லாம் திருடனை புடிக்க அலைஞ்சுக்கிட்டிருந்திங்க இல்லியா?
44. கேடிக்கு நாந்தான் ரெண்டு கள்ளப்பயலுகளை புடிச்சிட்டேன். 45. வந்து பாருங்க.
46. ரொம்ப சாமார்த்தியமா நானு, அவனுக ரெண்டு பேத்தையும் சாக்குக்குள்ளே புடிச்சுக்கட்டி வச்சிருக்கேன்.
47. இந்தா பாருங்க" ன்னு சாக்கைக் காமிச்சான்.

48. போலீஸ்காரனுகளுக்கு சொல்லியா குடுக்கணும்?
49. சாக்குகிட்ட வந்தானுக. 50. கையி வலிக்க வரைக்கும் போடு போடுண்ணு போட்டானுக. (another form of வெளுஞ்ச அடி அடிண்ணு அடிச்சானுக)
51. ராசாவும் மந்திரியும் அடி பொறுக்கமுடியாமெ கத்துறதுக்கு ஆரம்பிச்சிட்டாங்க. "52. அடே (டா) தென்னாலிராமா! எங்களை அவுத்துவிட்றா.
53. ஏண்டா இப்பிடி அடிக்கிறே? நாங்க, ராசா இல்லியா? மந்திரி இல்லியா?"ண்ணு சொல்லி சத்தம் போட்டுக்கிட்டிருந்தானுக.
54. சத்தம் போடப் போட போலீஸ்காரனுகளுக்கு ரொம்பவும் கோவமும் வந்துருச்சு. 51. உண்மெ செத்த நாயெ அடிச்சாப்லெ (or) எருமெ மாட்டெ வெளுத்தாப்லெ வெளுத்தானுக. 52. அடிச்ச அடியிலெ ராசாவுக்கும் மந்திரிக்கும், மயக்கங்கூட வந்துருச்சு.
53. இந்தக் கூட்டத்துலெ, தென்னாலிராமென் ஒருபக்கம் அவங்களைப் பாத்து, "ஏண்டா திருட்டுப்பயலுக! 54. ராசா – மந்திரி – ண்ணு சொன்னாப்லெ பயந்துக்கிட்டு தொறந்துருவாங்கண்ணு நெனைச்சிங்களா? 55. ராசாவும் மந்திரியும் இங்கெ ஏண்டா வர்றாங்க? 56. அவங்களுக்கு இங்கெ என்னடா சோலி"ண்ணு சொல்லி இவென் வேறெ "பொத்து பொத்து"ண்ணு போட்டான் (அடிச்சான்). 57. கடேசியா போலீஸ்காரனுக எல்லாம் கூடிப் பேசி, சாக்கெ அவிழ்க்காமெ (வு) இவனுகளை இப்பிடியே ராசாகிட்ட x கொண்டுக்கிட்டுப் போகணும். 58. அப்பத்தான் ராசா நம்ம மேலெ பிரியப்படுவாருண்ணு சொல்லி சாக்கு மூட்டையை அப்பிடியே (as it was) தூக்குனானுக. 59. தூக்கி, நேரெ அரமணைக்கி x கொண்டுட்டுப் போனானுக.
60. அங்கெ போயி தொறந்து பாத்தா, ராசாவும்

Colloquialism

x கொண்டுக்கிட்டு and கொண்டுட்டு just the same.

மந்திரியும் பக்கு பக்குன்னு முளிச்சாங்க.
61. போலீஸ்காரனுகளுக்கு மொதல்லெ இருந்த
சந்தோஷமெல்லாம் பறந்து போயி, இப்ப
அவனுக கைகாலெல்லாம் நெதர்றதுக்கு (Shake like a dying creature)
ஆரம்பிச்சிருச்சு. 62. வெலவெலத்துப் போனானுக.
63. ராசாவும் மந்திரியும் நெசநெசத்திருடென் மாதிரி
(real culprit) ~~மூடி~~ வெக்கத்துனாலெ நடுக்கம் —
எடுத்துப் போயி (being shocked) என்னு பேசறதுன்னு
தெரியாமெ ஊமை மாதிரி நின்னுக்கிட்டிருந்தாங்க.
64. அரமனையிலெருக்றவங்க எல்லாம் ரொம்ப
பயந்து போயி ஒருத்தரை ஒருத்த பாத்து
முளிச்சிக்கிட்டிருந்தாங்க. 65. இப்படியிருக்கையிலெ
தென்னூர் ராமென் ராசாவெயும் மந்திரியெயும்
பாத்து, "சாமிகளே, இப்ப எப்படிருக்கு?
66. இனிமேலாவது நம்ம பேச்சுக்கு வராமெ,
மரியாதியாருப்பீங்களா? 67. "ஒனக்கு ஒண்ணும்
செய்யமாட்டோம்"ன்னு நீங்க ரெண்டுபேரும்
சத்தியம் பண்ணிக்குடுத்தா மாத்தரம் ஒங்களை
நானு சும்மா விடுவென். 68. இல்லாட்டி,
இப்பவே போயி ஊரெல்லாம் தண்டோரம்
போடுவென். (Spread the news by talking a lot)
69. என்னு சொல்றீங்க?" ன்னுனான்.
70. அதுக்கு ராசாவும் மந்திரியும் அவனெப்பாத்து,
"அடே தென்னூரு ராமா! இன்னைக்கிருந்து
நாங்க ஒம் பேச்சுக்கே வரலெடா. 71. நீ மாத்தரம்
யாருகிட்டெயும் இந்தச் சங்கதியெ
சொல்லிராதெடா"ன்னு சொல்லி அவனுக்கு
ரொம்ப பணங்குடுத்து வீட்டுக்கு அனுப்பிட்—
டாங்க. 72. போலீஸ்காரனுகளுக்கும் அப்படியே
செஞ்சு அனுப்பிட்டாங்க. 73 அப்பறம்
கொஞ்ச நாளா தென்னூரு ராமென்
ஒரு தொந்தரவும் இல்லாமெ சீவனம் —
பண்ணிக்கிட்டிருந்தான்.

Paid Rs 1.80
19/10/35

தென்னாலிராமன் கதை. 57

குதிரை வளர்த்தது.

1. முந்தி இவென் பூனைக்குட்டி வளர்த்தமாதிரி இதொரு கதை. இது எப்பிடின்னா; ராசா வந்து, அரமனை வேலைக்காரங்கெல்லாம் ஆளுக்கொரு குதிரை குடுத்து, "எவென் குதிரை நல்லா அளகாருக்கோ, அவனுக்கு நல்லா எனாம் குடுப்பேன்" ன்னு சொல்லி ரெண்டு மாசத்துக்கு குதிரைகளுக்கு என்னா செலவாகுமோ அதெயும் அவங்களுக்கெல்லாம் குடுத்து அவங்கவங்க வீட்டுக்கு அனுப்பிட்டாரு.
2. மத்த எல்லாரும் குதிரைகளை நல்லா வளர்த்தாங்க. தென்னாலிராமென் மாத்தரம் குதிரைக்கு ஒருநாளைக்கு ஒரு கைப்புடி புல்லு மாத்தரம் ஒரு சன்னல் வளியா குடுத்துவந்தான். 3. ரெண்டு மாசத்துக்குள்ளை, குதிரை சாகப்போற மாதிரி ஆயிருச்சு.
4. ராசா குதிரைகளெப்பாக்குற நாளும் வந்துருச்சு.
5. எல்லாரு குதிரையும் நல்லாருந்துச்சு. 6. ராசா ரொம்ப சந்தோசப்பட்டாரு. 7. தென்னாலிராமென் குதிரை மாத்தரம் வரலெ. 8. ராசா "ஏன்" ன்னு கேட்டாரு. 9. அதுக்கு தென்னாலிராமென், "ராசாவே! எங்குதிரை, தின்ன அடெயாமெ தின்னுபுட்டு, நல்லா கொளுத்துப் போயி, இப்ப "அடங்கமாட்டேன்"ன்னுது ராசாவே" ன்னான்.
10. ராசா மந்திரியைப் பாத்து, "மந்திரி! இதென்னா, ரொம்ப வேடிக்கையாருக்கு! 11. நீயி போயி பாத்துட்டு வா" ன்னாரு. 12. மந்திரி அப்பிடியே போயி, சன்னல்வளி பாத்தபோது, குதிரை, புல்லுதான்ன்னு நெனைச்சு, அவென்தாடியெக்கவ்வி "விக்கி விக்கி" ன்னு இளுத்துச்சு.
13. இவென், வலி பொறுக்கமுடியாமெ, "ஐயையோ அப்பா" ன்னு கத்துறதுக்கு ஆரம்பிச்சிட்டான்.
14. அப்ப எல்லாரும் ஓடியாந்து "இதென்னடா" ன்னு பாக்கையிலெ சங்கதி இப்பிடிருந்துச்சு. 15. ராசாவுக்கு கோவம் வந்துச்சு. 16. ஆனா, மத்தவங்க எல்லாம் சிரிச்சாங்க.

24. Part: with இரு

கடலுமேல நீந்தி விட்டுக்குதிக்றான்.

பூசிணிக்காயைத் திருடினவென் கதை.

1. ஒரு ஊர்லெ ஒரு திருடென் இருந்தான்.
2. இவென் ஒரு களவாணிப்பயலாருந்தாலும் இவனுக்கு ரொம்ப புத்திருந்துச்சு. (Sense)
3. அது எப்பிடீன்னா :- இவனுக்கு வைவரந் தெரி-ஞ்சதுலெருந்து, திருடுரதுதான் வேலெ. (Major)
4. சின்னத்திருடென்னாலும் பெரிய திருடென்னா-லும் இவென் ஆப்புடவேமாட்டான்.
5. இவனுக்கு ரொம்ப புள்ளெகுட்டிகருந்துச்சு.
6. ஒரு பத்து பதினஞ்சு நாளா இவனுக்கு ஒண்ணும் கெடைக்கலெ. 7. வீட்லெ ரொம்ப கஷ்டமாருந்துச்சு.
8. ஒரு நா புள்ளெகுட்டியெல்லாம் ரொம்ப பசியா-ருந்துச்சு. 9. இவனுக்கு அதைப்பாக்கப்பாக்க ரொம்ப வருத்தமாருந்துச்சு. 10. அங்கிட்டும் இங்கிட்டும் ஓடிப்பாத்தான். 11. ஒண்ணும் கெடைக்கிறதுக்கு வழியெக்காணும். 12. கடங்கூட கேட்டுப்பாத்தான்
13. இவனுக்கு ஒருத்தரும் குடுக்கலெ. 14. எம்புட்டோ கரணம் போட்டுப்பாத்தான். 15. ஒண்ணும் நடக்கலெ.
16. ஒருத்தரும் இவனெ நம்புரதுக்கு வழியில்லெ.
17. ஏன்னா, இவென் ஒரு பெரிய திருட்டுப்பய-ல்லியா? 18. வெளிச்சக்கிட்டுக்ரபோதே முளியெ தோண்டுறவென் இவென். 19. அதுனாலெ இவ்வளவு தகராறு வந்து சேந்திருச்சு. 20. இப்பிடியிருக்கையி-லெ, இவென் யோசிச்சு யோசிச்சு பாத்தான். ஒண்ணும் பொலப்படலெ. 21. நேரமும் ஆச்சு! பொளுதும் விடியப்போகுது! 22. கடேசிலெ இவென் மனசுக்கு ஒண்ணு தட்டுப்பட்டுச்சு (Something struck his mind) 23. வழிமேலெ ஒரு வீடிருந்துச்சு. அந்த வீட்டு முத்தத்துலெ (Courtyard) ஒரு பூசிணிச்செடிருந்துச்சு. 24. பூசிணிக்கொடியெ வீட்டுக்காரென் வந்து, கூரெமேலெ ஏத்தி-விட்டுருந்துருக்கிறான். 25. அது நல்லா படந்திருந்துச்சு.
26. பூசிணிப்பளத்தெ பாத்தா சொல்லமுடியாது!
27. அம்புட்டிருந்துச்சு! (exclamatory)

P.T.O

28. இவென் மை...யா (மெதா...வா - Very Slowly)
ஏறுனென். 29. இவென் கூரைமேலை ஏர்றபோது,
ஒருத்தரும் இவனைப்பாக்கலை. 30. பாக்கவும் அவசியமில்லை(மு
முடியாது. 31. ஏன்னா, அந்த நேரத்துலை ஆரு,
அம்புட்டு தைரியமா ஏறுரவென்! 32. ஆளுக
அங்கிட்டும் இங்கிட்டும் போக்கு வரத்தாருக்கு!
33. பொழுது மசங்குன வேளையிலைதான் (Sunset)
காடுகரையிலையிருந்து ஆளுக வீடுகளுக்கு வரும்!
34. அன்னு இவென் கூரைமேலை ஏறுன நேரத்துலை
ஆளு ஒன்னும் அந்தப்பக்கம் வரலை.
35. வீட்டுக்குள்ளை ஆளுருந்துச்சு. 36. இவென்
சுத்தியும் முத்தியும் பாத்தான். (looked around)
37. "சட்"..ன்னு ஒரு பெரிய கோழியைப்புடுங்குனென். (quickly)
38. கூரைமேலை "சரசர"ன்னு ஒரு சத்தங் கேட்டுச்சு.
39. ஆரோ ஒருத்தென் கோழி திருடுறான்னு
நெனைச்சு, வீட்டுக்காரென் ஒரு பெரிய தடியை
தூக்கிக்கிட்டு வெளியெ வந்தான்.
40. இவென் மாத்தரம், வந்த கோவத்துக்கு, அவனை
கண்டிருந்தான்ன்னா, அவென் எலும்பெல்லாம்
சுக்கு சுக்கலாப் போயிருக்கும். (into pieces)
41. நல்ல வே...ளை! 42. "திபீரு"ன்னு திடு—னக்கு (Suddenly)
ஒரு யோசனை வந்துச்சு. 43. வீட்டுக்காரென் வந்து,
"ஆர்றாவென் கோழியைத்திருடுனது"ன்னு சொல்றதுக்கு
முந்தி, வீட்டுக்காரென் வெளியெ வந்து, கூரையை
பாத்த அதே நொடியிலை (in the very moment)
இவென் பூசினிப்பளத்தை "தொப்"ன்னு கீளை
அவென் முன்னுக்கு போட்டு, தானும் விளுந்தான்.
44. இவனுக்கு, நல்ல காலத்துக்கு, பூசினிப்பளம்
"டமார்"ன்னு ஒடைஞ்சிருச்சு. 45. பூசினிப்பளத்து—
—க்குள்ளையிருந்து அப்பத்தான் வெளியெ வந்தவென்
மாதிரி காமிச்சு, (pretending பாசாங்கு பண்ணி)
கோவமாருக்ர வீட்டுக்காரனைப்பாத்து "46. இதுதானு
பத்தா பூலோகம்"ன்னு கேட்டான். 47. சாமியோ,
ஏன்னமோன்னு நெனைச்சு வீட்டுக்காரென் பயந்தான்.
48. இதுதான் சமயம்ன்னு திருடென் பிச்சுக்கிட்டு ஓடிப்போயிட்டான்

நாலு பேரு ஒரு பணப்பையை கண்டெடுத்த கதை. 59

1. ஒரு நா நாலு பேரு கூட ஒரு ஊருக்கு போனாங்களாம். 2. போகையிலெ, வழியிலெ ஒரு பணப்பையை கெடந்துச்சாம். 3. அதை நாலுபேரும் சேந்து எடுத்து ரொம்ப சந்தோச-ப்பட்டாங்களாம். 4. பக்கத்துலெ ஒரு கொளம் இருந்துச்சாம். 5. இவனுகள்ளெ ஒருத்தன் என்னு சொன்னானாம் 6.:- "டே மச்சான்! நம்ம எல்லாம் இந்தக் கொளத்துலெ குளிச்சு, நல்லா வகுத்து நெறையா சாப்புட்டுட்டு, அப்பரம் இந்தப் பணத்தை வந்து ஆளுக்குக் கொஞ்சம் பிரிச்சுக்கலாம்டா" ன்னானாம். 7. அதுக்கு மத்தவனுக வந்து: "ஆமடா, அதுதான்டா சரி. 8. ஆனா, அதுவரைக்கும் இந்தப் பணப்பையை எங்கடா வைக்கலாம்"ன்னானுகளாம். 9. அதுக்கு அவன், "அந்தா இருக்கு பாருங்கடா ஒரு செட்டியாரு கடை. 10. அங்கெ கொண்டு குடுத்து வைக்கலாம்டா" ன்னானாம். 11. இதுக்கு அவனுக எல்லாம் சம்மதிச்சானுகளாம்.

12. செட்டியாருகிட்டப் போயி, "செட்டியாரே! நாங்க நாலுபேரும் இந்தக் கொளத்துலெ குளிச்சு சாப்புடப் போறோம். 13. நாங்க சாப்பிட்டு வர்றது வரைக்கும் நீங்க தயவுசெஞ்சு இந்தப் பணப்பையை பத்தரமா வச்சிருக்கணும். 14. நாங்க நாலுபேரும் சேந்து வந்து கேட்டா மாத்தரம் நீங்க அதை குடுக்கணும். இல்லாட்டி குடுக்கக்கூடாது" ன்னு சொல்லி, செட்டியாருகிட்ட பையைக்குடுத்துப்புட்டு கொளத்துக்கு போனானுகளாம். 15. அங்கெ போயி, சொகம்...மா தலை கிலையெல்லாம் முழுகி, பொட்டு வச்சு, திண்ணீர் இண்ணீரெல்லாம் பூசிக்கிட்டு, கரைக்கி வந்து, ஒரு ஆலமரத்தடியிலெ உக்காந்து வகுறு நெறையா சாப்பிட்டானுகளாம்.

16. செட்டியாரைப் பத்தி மொதல்லெ சொன்னவென் என்ன பண்ணுனானும் :- 17. மத்தவனுகளைப்பாத்து, "அடமாப்பா! நம்ம சும்மா ஒக்காந்துக்கிட்டு -க்ரதுக்கு, செட்டியாரு கையிலெ ஒரு மூணு காசுக்கு வெத்தலை வாங்கிப் போட்டா, நல்ல -இல்லியா" ன்னுனும். 18. அதுக்கு மத்தவனுக, "அடமாப்பா, நல்ல ஓசனை சொன்னெ.
19. நீதானு போயி வாங்கிட்டு வந்துரென்" ன்னுனுகளாம். 20. இதுதான்ன்டா நல்ல சமயம்ன்னு நெனைச்சுக்கிட்டு அவென் போயி, "செட்டியாரே! பணப்பையை குடு" ன்னு கேட்டானும். 21. என்னப்பா! ஒனக்கு பைத்தியங்கியத்தியம் புடிச்சிருக்கா?
22. நாலு பேரும் சேந்து வந்தாத்தான் நாங்குடுப்பென்,
23. இல்லாட்டி முடியாது" ன்னுனும் செட்டியாரு.
24. கடைக்கும் இவனுக சாப்ட்ட எடத்துக்கும் கொஞ்சம் தூரமாம். 25. அதுனாலெ இவென் சத்தம் போட்டு அவங்களைக் கூப்பிட்டு, "செட்டியாரு குடுக்கமாட்டேன்ன்றாரு.
26. நீங்க என்னப்பா சொல்றீங்க" ன்னுனும்.
27. அதுக்கு அவனுக "குடு, குடு, செட்டியாரே" ன்னுனுகளாம். 28. இதைக் கேக்கவும், செட்டியாரு குடுத்துட்டானும். 29. இந்தத் திருட்டுப்பய அதை வாங்கிக்கிட்டு ஓடியே போய்ட்டானும்.
30. கொஞ்ச நேரங்கழிச்சு, மத்த மூணு பேரும் செட்டியாருகிட்ட வந்து, "செட்டியாரே! வெத்தலை வாங்க வந்தவென் எங்கெ" ன்னு கேட்டானுகளாம். 31. அதுக்கு செட்டியாரு, "ஏன். என்ன சங்கதி? பணப்பையை வாங்கிக்கிட்டு அவென் எப்பவோ ஒங்ககிட்ட வந்துட்டான்" ன்னுனும். 32. இவனுகளுக்கு கோவம் பொறுக்க -முடியலெ. 33. இவனுக என்ன பண்ணுனானும்;- செட்டியாரை சர்ச்சிகிட்ட புடிச்சு இழுத்துக்கிட்டுப் போயி நடந்த சங்கதியெல்லாம் சொன்னுனுகளாம்.

P.T.O

34. சுருத்தி இதை நல்லா ஜோசிச்சுப் பாத்து, செட்டியாரு மேலை குத்தமில்லைன்னு கண்டு, அவனுங்களைப் பாத்து, 35. "அப்பா! நீங்க மொதமொத செட்டியாருகிட்ட கொண்ணமாதிரி நாலு பேரும் சேந்து வந்து பணப்பையை கேட்டா அவரு உடனே குடுப்பாரு. 36. இல்லாட்டி குடுக்கமாட்டாரு" ன்னு தீர்ப்புச் சொன்னாராம். 37. இவனுங்க இதைக்கேட்டு நாலாவது ஆளை எங்கை கண்டுபுடிக்கிறது—ன்னு வகித்தெரிச்சலோடை போய்ட்டானுங்களாம்.

ஆயிரம் மூக்குக்காரி கதை. 11-7-40.

62

1. மாரியம்மாண்டெ ஒரு பொம்பளைச்சாமி
இருந்தாளாம். 2. அவளுக்கு ஆயிரம் கண்ணும்,
ரெண்டாயிரம் காதாம். ஆயிரம் மூக்காம்.
3. இவளைப் பாத்தவங்க எல்லாம் கிடுகிடுன்னு
நடுங்களுமாம். 4. இவ ரொம்ப பயமிருந்த
சாமியாம். 5. இன்றியொருவலைக்கிர இந்தக்
எல்லாரும் இவளைக் கும்புடுவாங்களாம்.
6. இவளுக்குண்டு வேறயா ஒரு கோயிலு
இருக்காம். 7. அங்கெ வந்து ஆளுக எல்லாம்
ஒருநா ஆடு, மாடு, கோழி, இதுக எல்லாம்
அடிச்சி, பெரிய பொங்கலொண்ணு
வச்சி, இவளை கும்புட்டாங்களாம்.
8. அப்ப இவ, தான் சொந்த ரூபத்தை
காமிச்சாளாம். 9. எல்லாரும் இவளை
in face பாத்தவொடனே நெடுஞ்சாங்கரையா
விளுந்து கும்புட்டாங்களாம். 10. ஆனா
ஒரு சின்னப் பையன் மாத்திரம் இவளை
கும்புடலியாம். 11. இவென் என்னு செஞ்-
சானுண்ணு, அவளைக் கேலி பண்ணிக்கிட்-
-டிருந்தானாம். 12. இது வந்து அவளுக்கு தெரிஞ்சு
-க்கிருச்சாம். 13. அவ ஒரே பாச்சலாப் பாஞ்சி
இவனைக் கொல்ல வந்தாளாம். 14. அப்ப இவென்,
ஏஞ் சாமி கொல்ல வர்றெண்ணு கேட்டா
-ம். 15. அதுக்கு அவ, ஏண்டா சிரிச்சேண்ணு
கேட்டாளாம். 16. அப்ப அவென், "சாமீ!
எங்களுக்கெல்லாம் ரெண்டு கையும், ஒரு
மூக்கு மாத்தரம் இருக்கு. 17. தப்பித்தவறி சளி chali
-ப்புடிச்சிருச்சுன்னு, மூக்குச் சிந்த
நாங்க பட்ற பாடு சொல்லமுடியாது.

P.T.O.

Can't tell

18\.

ஆரு இய்யி வந்து, சனிக்கிளி புடிச்சிட்டா
ஆயிரம் மூக்கை, ரெண்டு கையாலெ
தீர்த்த என்னு கஷ்டப்படுவியோண்ணு
தான் இரிச்சேன்" ண்ணு னுழும்.
19\. இதைக் கேட்டு மாரியம்மனுக்கிம்
சிரிப்பு வந்துருச்சாம். 20. அவென்
புத்திக்கி, என்னமோ ஒரு நல்ல
வரங் குடுத்துட்டு மறைஞ்சிட்டாளாம்.
21\. காசுங்கிசும் செலவளிச்சவங்களுக்கு
ஒண்ணும் கெடைக்கலியாம். 22. இந்த
போக்கிரிப்பயலுக்கு மாத்திரம் நல்ல
வரம் கெடைச்சுச்சாம்.

— " —

Post-position - விட்ட. 64/1 பக்கம் 64/1
Reduplication 64/1 64/9
ஆ 64/3 ஆ - whatever 64/13
Emphasis 64/6 64/11 64/15
Someone ஆரோ 64/7

கதை

ராசா மகனும் தேவேந்திரென் மகளும்

1. ஒரு நா ஒரு ராசா மகென், தாய்தகப்பெங்கிட்ட
சண்டெ போட்டுக்கிட்டு, வனவாசம் போகலாம்
-ன்னு நெனெச்சுக்கிட்டு, அவெம்பாட்டுலெ
காட்டுப்பக்கம் போனானாம். 2. அங்கெ இவனுக்கு
சோறு கீறு ஒன்னும் கெடைக்கலியாம்.
3. பசியோ பொறுக்க முடியலியாம். 4. அதுனாலெ
இவென் என்ன செஞ்சானாம்:- 5. காட்டுலெ
ஆப்பட்ட பழம் கெளங்கு இதுக எல்லாம்
தின்னு வகுத்தெ வளத்துக்கிட்டிருந்தானாம்.
6. இப்பிடி இருக்கயிலெ ஒரு நா இவென்,
நடு...க் காட்டுலெ ஒரு பொகெ எளும்பிக்கிட்டு-
-ருந்ததெ பாத்தானாம். 7. பாத்தவொடனே,
ஆரோ குடியிருக்ராங்கன்னு நெனெச்சு,
நே...ரா அந்த எடத்துக்குப் போனானாம்.
8. அங்கே போயிப் பாத்தா (on going & examining)
ஒரு சின்ன குடிசை இருந்துச்சாம். 9. அதுக்குள்ளெ
ஒரு குடுகுடு கெளவி (Very old woman) குடி
-யிருந்தாளாம். 10. அவளெப் பாத்து இவென் என்ன
சொன்னானாம்:- 11. "பாட்டி பாட்டீ! எனக்கு
தாயுமில்லெ தகப்பனுமில்லெ. 12. நீதான் ஒலகத்லெ
எனக்கு தொணெ பாட்டீ. 13. நீயி என்ன
சொல்லியோ அதெல்லாம் கேக்றென் பாட்டீ.
14. மத்தவங்களெப் போல என்னியெ நெனெச்சு
-க்றாதெ பாட்டீ" ன்னானாம். 15. இவென்
சொல்ல....ச் சொல்ல கெளவிக்கு மனம்
எளகிருச்சாம். 16. அவ, இவனெப் பாத்து,

Post-position விட்டு 65/16 வரைக்கும் 65/21, 29
பக்கம் 65/25

Idiomatica 65/17-18

Pause 65/20 Emphasis 65/32

Elongation 65/23

Adverb - Time 65/25

whatever 65/29

"அடெ பேராண்டீ ! நிய்யி சொல்ரதெ
பாத்தா எனக்கு ரொம்ப பாவமாருக்கு.
16. அதுனாலெ நிய்யி எங்கிட்டத்தான் இரு.
17. நிய்யி வேறெ ஒண்ணும் செய்ய வாணாம்.
18. மாட்டெ மாத்தரம் மேச்சுட்டுவா. 19. நான்
ஒன்னியெ புள்ளெ மாதிரி பாக்குறென்"
ன்னாளாம். 20. இதைக் கேட்டது இவனுக்கு,
.... சந்தோசம் பொருக்க முடியலியாம்.
21. இவ சொன்ன மாதிரி இவென் செஞ்சுக்கிட்
-டிருந்தானாம். 22. ஒரு நா கௌவி இவனெப்பாத்து,
"அடெ பேராண்டீ ! நிய்யி வடக்கெ போ.
23. தெக்கெ போ. மேக்கெ போ. கெளக்கெ மா
....த்தரம் போகாதெ" ன்னாளாம். 24. இவென்
கொஞ்ச நாளு இப்பிடியே செஞ்சுக்கிட்டு
-ந்தானாம். 25. இருக்கெயிலெ (In the mean time)
இவென் ஒரு நாளு அந்தப்பக்கம் போனானாம்.
26. ஒரு எரும்பு ஒண்ணு செஞ்சுச்சாம் :- தவறி
தண்ணியிலெ விளுந்துருச்சாம். 27. இது வந்து
எரும்புக் கெல்லாம் ராசவாம். 28. இது இவனெ
பாத்து, ஐயா நிய்யி மாத்தரம் என்னியெ
தப்பிச்சு விட்டுட்டியின்னு நானும் ஒனக்கு
ஒரு ஒதவி செய்யிறென். 29. ஒனக்கு என்ன
மாதிரி ஆபத்து வந்தாலும் சரி. 30. என்னியெ
நெனைச்சுரு. 31. ஒடனே நான் வந்து
அதெ தீத்துர்றென்" ன்னுச்சாம். 32. இவென்
இதைக் கேட்டு "சரி" ன்னு, அதைத்தூக்கி
வெளியெ விட்டுட்டானாம்.

33. உன்னொரு நா, ஒரு செவந்திப் பூச்சி
என்ன செஞ்சுச்சாம் :- 34. பதுங் ... கெக்கிட்டுருந்து
ஒரு இய்யெ புடிச்சிருச்சாம். 35. இந்த இய்யி
வந்து இய்யிக் கெல்லாம் ராசாவாம். 36. இது
வந்து இவனெப்பாத்து " ஐயாயா! நிய்யி
மாத்தரம், செவந்திப் பூச்சிக்கிட்டெருந்து
என்னியெ காப்பாத்திட்டையின்னா, நிய்யி
என்னெக்கி என்னியெ நெனெக்கிரியோ
அன்னெக்கி நானு வந்து, அது என்ன
ஆபத்துன்னாலும் சரி, ஒன்னியெ காப்பாத்
-திர்றேனு " ன்னுச்சாம். 37. இப்பிடிச் சொன்
-னவொடனெ, இதியும் இவெனு காப்பாத்தி
-ட்டானாம். 38. உன்னொரு நா ஒரு பாம்பு
என்ன செஞ்சுச்சாம் :- 39. ஒரு தவளெயெ
முழுங்கப் போச்சாம். 40. முழுங்கிறதுக்கு முன்னெ
தவளெ இவனெப்பாத்து " ஐயாயா! தயவு செஞ்சு
என்னியெ தப்பிச்சு விட்டுரு. 41. ஒனக்கும்
ஒரு காலத்லெ நானு ஒதவுவெனு. 42. ஆனா
நிய்யி மாத்தரம் ஒன்னியெ நெனெக்கணும் "
ன்னுச்சாம். 43. இதெக் கேட்டு இவெனு, ஒடனெ
பாம்பெக் கொன்னுப்புட்டு தவளெயெ தப்பி
-ச்சு விட்டுட்டானாம். 44. உன்னொரு நா
ஒரு சிங்கம் என்ன செஞ்சுச்சாம் :-
காயப்பட்டுருச்சாம்
45. ஒரு வலெயிலெ விழுந்து
அதே காயத்லெ ஒரு முள்ளு வேறெ குத்தி
அதுலியே நின்னுக்கிருச்சாம். 46. அந்த எடம்
பெரிய புண்ணாயி சலம் வச்சிருச்சாம்
47. அதுனாலெ சிங்கத்துக்கு நடக்கவே முடியலியாம்

48. எரையும் அப்புடலியாம். 49. சாகப்போறாப்லெ
-ருந்துச்சாம். 50. இப்படியிருக்கையிலெ இவென்
அந்த வழியிலெ வந்தானாம். 51. சிங்கம்
இவனைப்பாத்து, " அண்ணாண்ணா ! பயப்புடா
-தெ. 52. நானு ஒன்னியெ ஒன்னும் செய்யமாட்
-டென். கிட்டத்லெ வா. 53. ஏங்காலுலெருந்து
முள்ளெமாத்தரம் எடுத்துரு. 54. அதுக்கு பதிலு,
எப்பவாவது ஒனக்கு ஒரு ஆபத்து வர்ற
காலத்துலெ ஒன்னியெ இப்பி நெனைச்-
-சியினா ஒரு நொடியிலெ நானு வந்து
அந்த ஆபத்தை தீத்துர்றென்" ன்னுச்சாம்.
55. இவென் இதெ நம்பி கிட்டத்லெ போயி,
அந்த முள்ளெ மெல.....ம்மா புடுங்குனானாம்.
56. முள்ளு வந்தவொடனெ, அதுலெருந்த
சலமெல்லாம் சர்.....ர்ன்னு அடிச்சுச்சாம்.
57. வந்த சலம், கிட்டத்தட்ட நாலஞ்சு படி
இருக்குமாம். 58. சிங்கத்துக்கு சொகமாயிருச்
-சாம். 59. இவென் மாட்டை ஓட்டிக்கிட்டு
வீட்டுக்கு வந்துட்டானாம். 60. மறுநா காலம்ப்ர
இவென் என்னா நெனைச்சானாம்:- 61. ஆமா,
இந்தப்பாட்டி வந்து, ஏன் கொளக்கெ போக-
-வணாம்ன்னு? 62. இதென்னான்னு பாக்கணும்
-ன்னு நெனைச்சு கொளக்கெ போனானாம்.
63. போனு, (on having gone) ஒரு அள....கு
கொளம் இருந்துச்சாம். 64. அந்த கொளத்துக்குள்ளெ
ஏழு தேவலோகத்துப் பொண்ணுங்க குளிச்சுக்
-கிட்டிருந்தாங்களாம். 65. இவங்க சேலையெல்லாம்
ஒரு மரத்லெ தொங்கிக்கிட்டிருந்துச்சாம்.
66. இவென் என்னா பண்ணுனானாம்:- அதுலெ
அள...கா இருந்த சேலையெ தூக்கிக்கிட்டு

ஒரே ஓட்டமா ஓடுறானாம். 67. இவனுக,
குளிச்சுட்டுக்கிளிச்சுட்டு வெளியெ வந்து
பாத்தா (on seeing) தேவேந்திரென் மக சீலையெ
காணுமாம். 68. மறுதடி காலுத்தடம் அங்கெருந்து
-ச்சு. 69. தேவேந்திரென் மக அந்த தடத்துவழியா
ஓடுறா. 70. இவனெக் கண்டுக்கிட்டா. "என்னியெ
-ப்பார். 71. என்னளசெப் பார்" ன்னு கத்திக்கி
-ட்டு இவென் பின்னுக்கு ஓடியாந்தா.
72. இந்தச் சத்தம் இவென்காதுலெ விழுகவும்
இவென் தி~~...~~ரும்பிப்பாக்குறான்! 73. பாத்ததுதான்
தாமசம். 74. இவனெ அவ கல்லா சமைச்சு-
-ட்டா. 75. ~~...~~. சீலையெக்கட்டிக்கிட்டு தேவ-
-லோகத்துக்கு பறந்து போயிட்டா. 76. கெளவி
-பாத்....தா. பையனெக்காணும். 77. பொண்ணுமில்லெ
மோசம் வந்துருச்சு ன்னு நெனைச்சுட்டா.
78. மறுநா காலம்பர ஒரு செம்பு நெறையா
தண்ணியும் ஒரு பெரம்பியும் எடுத்துக்கிட்டு
கொளக்குப்பக்கம் போனா. 79. போனா (on seeing)
பையென் கல்லாருக்கான். 80. அவென் மேலெ
தண்ணி~~...~~யெ தெளிச்சு பெரம்புலெ
அடிச்சா. 81. உடனே அவனுக்கு உசுரு வந்து
-ருச்சு. 82. கெளவி இவனெ திட்டுனா. 83. அதுக்கு
இவென், " பாட்டி பாட்டீ! உலகத்துலெ
நானு இருந்தா, என்னியெ வெரட்டிக்கிட்டு
வந்த பொண்ணெ நானு கட்டணும். 84. இல்லாட்டி
சாகணும்" ன்னு கண்டிப்பா சொன்னான்.
85. அதுக்கு கெளவி, "அதுக்கென்ன, பேராண்டி!
86. நாளைக்கி நெய்யி, இன்னைக்கி செஞ்சமாதிரி
செய்யி. 87. அவ என்ன சொல்லி ஏமாத்துனாலும்

திரும்பிப் பாத்ராதே. 88. நேரா ... வீட்டுக்கு
ஓடியாந்துரு. 89. மத்த சங்கதியெ நாம்பாத்துக்
-கிர்றென்" என்று அவனுக்கு ஆறுதல் சொல்லி
வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போனு.

90. மருநா, கௌவி சொன்னமாதிரி ராசாமகென்
செஞ்சானாம். 91. தேவேந்திரென் மக பின்னாக்கே
ஓடியாந்தாளாம். 92. கௌவி என்ன செஞ்சாளாம்:
ராசா மகென் தொடையெ கிளிச்சு தீலையெ
தொடைக்குள்ளெ வச்சு, ஒரு திமிசத்லெ
தச்சு, அவனெ ஒரு சின்னப் புள்ளையாக்கி
ஒரு தொட்டிக்குள்ளெ போட்டு "ரோ ரோ"
என்று ஆட்டிக்கிட்டு இருந்தாளாம். 93. இதுக்குள்ளெ
தேவேந்திரராசா மகி வீட்டுக்குள்ளெ வந்துட்டாளாம்.
94. வந்து, "பாட்டி பாட்டி! ஒன் வீட்டுக்குள்ளெ
ஓடியாந்த ஆளெங்கெ பாட்டி" என்னுளாம்.
95. அதுக்கு கௌவி "அம்மாமம்மா! நீ வேணு
பாரு. 96. இந்த சின்னப்புள்ளெயெத் தவர
ஆருமில்லெ" என்னுளாம். 97. அதுக்கு அவ
"பாட்டி! நான் என்ன பண்ணுவேன்?
98. தேவேந்திரென் என்னியெ அடிச்சிருவாரே!
தீலையக் காணுமே!" என்னுளாம். 99. அதுக்கு
கௌவி, "சரி.... நிய்யி மாத்திரம், நிய்யி
தேடி வந்த ஆளெ கட்டிக்கிர்றேன் என்று
சத்தியம் பண்ணிக் குடுத்தியின்னு, நானு
அந்த தீலையெ ஒனக்குத் தர்றேன்" என்னு
னாம். 100. அதுக்கு அவ சம்மதிச்சுக்கிட்டாளாம்.

101. ஒடனே கௌவி என்ன செஞ்சா:-
(மாயமா செஞ்சாண்ணு) தொட்டியிலெ இருந்த
புள்ளெயெ பெரிய ஆம்பளெயாக்கிட்டாளாம்.

102. அவென் தொடையை மறுபடியும் கிளிச்சு
அதுலெருந்து சீலையை வெளியெ எடுத்து
தேவேந்திரனின் மகளிட்ட குடுத்துட்டானாம்.
103. தேவேந்திரென் மக, ராசா மகனைப் பாத்தா.
104. அவனைப் பாத்தா (on seeing) தேவ லோகத்லெ
-கூட இந்தமாதிரி அழகானவென் இல்லி
-யாம்! 105. இவளுக்கு அவென் மேலெ ரொம்ப
ஆசையாயிருச்சாம். 106. அதுனாலெ அவ
வாக்குக் குடுத்தபடி உடனே அவனெ
கட்டிக்கிட்டாளாம். 107. கடேசியா, அவனெ
இவ என்னு செஞ்சாளாம் :- 108. ஒரு பூவாக்கி
அதெ தாங் கொண்டையிலெ வச்சுக்கிட்டு
தேவேந்திரெங்கிட்ட பறந்து போயிட்டா
-ளாம்! 109. அங்கெ போனு (on having arrived)
அங்கெருந்தவங்க எல்லாம், "ஐயையோ!
இதென்னு? 110. மனுச வாடை அடிக்குதே!"
ன்னுங்களாம். 111. அப்ப இவ நடந்த சங்கதி
-யெல்லாம் ஒண்ணும் ஒளிக்காமெ சொல்லி
-ட்டாளாம். 112. தேவேந்திரென் வந்து என்னு
செஞ்சாராம். "113. அம்மா! நானு வந்து
ஒம்புருசனுக்கு நாலு தடவெ பரிச்செ
போடுவேன். 114. அதுலெ அவென் கெலிச்சுட்
-டான்னு, நிய்யி தடையில்லாமெ, அவனெ
கட்டிக்கிலாம்" ன்னாராம். 115. அதுக்கு அவ
"சரி" ன்னுட்டாளாம். 116. தேவேந்திரென்
ராசா மகனைப்பாத்து, "அப்பா! நிய்யி ரொம்ப
கெட்டிக்காரனுருக்கெ. 117. நாலு தடவெ நானு
ஒன்னியெ சோதிப்பேன். 118. அதுலெ நிய்யி
தோக்காகட்டி நிய்யி என் மகளெ கட்டிக்
-கிடலாம்" ன்னு சொல்லி, ஒரு மலெ பொறத்லெ

மணலெயும் கேப்பெயையும் குமிச்சு "ஒரு
மணி நேரத்துக்குள்ளை, நிய்யி இதை வேறெ-
வேறெயா பிரிச்சுராணும்" ன்னு ராம். 119. இவனுக்கு
ரொம்ப பயமாப் போச்சாம். 120. ஆனாலும் இவென்
எப்பிடியோ எறும்பை நெனைச்சுட்டானாம்.
121. நெனைச்சவொடனே ஒலகத்லெ உள்ள எறும்
-பெல்லாம் இவென்கிட்ட வந்து "என்ன" ன்னு
கேட்டுச்சாம். 122. சங்கதியைக் கேட்டுக்கிட்டு
ஒரு நிமிசத்லெ கேப்பெயும் மணலெயும் வேறெ
-வேறெயா பிரிச்சிருச்சாம். 123. தேவேந்திரென்
பாத்து ஆச்சரியப் பட்டாராம். 124. அப்புறம்
கெணத்து நெறெயா பாம்பு உள்ள கெணத்லெ
மோதரத்தைப் போட்டுட்டு எடுக்கச் சொன்
-னாராம். 125. அப்ப இவனெயெ நெனைச்சானாம். தவளை ஒடனே வந்து எடுத்துக் குடுத்துச்சாம்.
126. அப்புறம் தேவேந்திரென் மகமாதிரி ஒரே
மொகச்சாடையிலெ ஏழு பொண்ணை வரிசையா
நிறுத்தி தேவேந்திரென் மகளை காமிக்கச்
-சொன்னாராம். 127. அப்ப இவென் ஈய்யெ
நெனைச்சானாம். 128. அது ஒடனே வந்து
தேவேந்திரென் மக தலையிலெ ஒக்காந்துச்
-சாம். 129. ஒடனே இவென் அவ கையைப் புடிச்சு
இழுத்துட்டானாம். 130. கடேசியா தேவேந்திரென்
எமனைக் கூப்புட்டு இவனைக் கொல்லச் சொன்னு
-ராம். 131. எமென் எருமெக்கெடா மேலெ ஏறி, ரொ
-ம்ப கோவமா வந்தானாம். 132. ராசா மகென் ரொம்ப
பயந்து, சிங்கத்தை நெனைச்சானாம். 133. சிங்கம்
ஒடனே ஓடியாந்துச்சாம். 134. சிங்கத்தைப் பாத்த
-ம் எருமெக்கெடா, எமனை கீளெ தூக்கிப் போட்
-டுப்புட்டு ஓடிப் போயிருச்சாம். 135. அப்ப எமனும்
பயந்துட்டானாம். 136. இதையெல்லாம் தேவேந்தி-
ரெனும் மத்த சாமிகளும் பாத்து ஆச்சரியப்
-பட்டு தேவேந்திரென் மகளெ இவனுக்கு
சந்தோசமா கட்டிக் குடுத்துட்டாங்களாம்.

4. Part: with இரு.

எத்தினையோ பொலவருக இருந்துருக்ராங்க.

cf. also 5.

5. சாதாரணமா ஒவ்வொரு ராசாகிட்டெயும்
ஒரு பொலவென் இருந்துருக்ரான்.

15 + 16. இவ and அவ.

(Part) Story of Kambar – a well learned man.

ரொம்பப்படிச்ச கம்பர் கதையிலெ ஒண்ணு. 72.

Paid

1. முந்திக்காலத்துலெ தென்னிந்தியாவுலெ மதுரைப்பக்கத்துலெ ஔவையாருண்ணு ஒரு கெழவி இருந்தா. 2. இவ ரொம்பப்படிச்சவ.
3. இவளெப்போல படிச்சவங்க அந்தக்காலத்துலெ ஒருத்தரும் கெடையாது. 4. எத்தினெயோ பொலவருக இருந்துருக்றாங்க. 5. சாதாரணமா ஒவ்வொரு ராசாகிட்டெயும் ஒரு பொலவன் இருந்துருக்றாண். 6. இவனுக எல்லாம் இவளுக்கு கீழெதாண். 7. என்னமாவது ஒரு பாட்டுக்கு (கவி is rarely used for poetry – colloquially) அருத்தம் இருத்தம் தெரியாமெ கஷ்டப்பட்டாலுகண்ணு, இவகிட்டத்தாண் ஓடியாருவாநுக. 8. இவ வந்து, எப்பிடியாப்பட்ட கஷ்டமான பாட்டுண்ணாலும் சரி, ரொம்ப லேசா அதுக்கு அருத்தஞ்சொல்லிருவா. 9. ஔவையாருக்கு ஒரு மதிப்புத்தாண். 10. மத்த பொலவருக்கெல்லாம் ஒரு மதிப்புத்தாண். (This expression is equal to ஔவையாருக்கு மதிப்பு வேறெ. மத்த பொலவருக்கெல்லாம் மதிப்பு வேறெ.) 11. இப்பிடியிருக்கெயிலெ, கம்பருண்ணு ஒருத்தரு வந்து சேந்தாரு. 12. இவ பேரு பெரஸ்தாவத்தெயும் இவ கீர்த்தியெயும் கேள்விப்பட்டாரு. 13. இவளெ எப்பிடியாவது அமுக்கணும்ணு நெனைச்சாரு. 14. அதுனாலெ இவ போக்குவருத்தை கவனிச்சுக்கிட்டே வந்தாரு (Whereabouts)
15. ஒரு நா இவ வந்து, ஒரு ஊர்லெருந்து உண்ணொரு ஊருக்குப்போனா. 16. அவ போன நேரம் வந்து, சரியான மத்தியானம். 17. வெயிலுண்ணு அப்பிடி அடிச்சுச்சு. 18. பொடியண்ணு அப்பிடி பொசுக்கிச்சு.
19. இவளுக்குப் பொறுக்கமுடியலெ. 20. ஏண்ணு, இவ வந்து ஒரு பழுத்த பழமில்லியா? (This refers to her ripe age and not fruit). 21. கம்பரு வந்து, இவளுக்கு முன்னெயே போயி ஒரு நவ்வா மரத்துலெ ஏறிக்கிட்டாரு. 22. அந்த வழியிலெ அந்த ஒரு மரந்தாண் இருந்துச்சு. 23. வெயிலு கொடுமெயினாலெ, அவ வந்து மரத்தடியிலெ கட்டாயம் ஒக்காருவாண்ணு இவருக்கு நல்லாத்தெரியும். 24. இந்த மரமும் அவ்வளவு நல்ல ஒரு அழகான மரம்.
பெரிய மரம். 25. கெளைகளையும் வாதுகளையும் பாத்தா அம்புட்டு அகலமா படந்துருந்துச்சு.
(Main branches and Sub branches were spread so wide)

38. பணம்ருந்தா கொஞ்சம் போட்டேன்.

II

26. இவரு நெனைச்சபடி ஔவெயாரு வந்து, தட்டுக்கெட்டுத் தடுமாறி, மரத்தடியிலெ வந்து, உஸ்ஸப்பான்னு ஒக்காந்தா. (உஸ்+அப்பா = Sound produced by anybody in the State of weariness caused by a very long walk especially in the Sun)

27. இவருக்கு சிரிப்பு வந்துருச்சு. 28. இவரு வந்து, மொதல்லியே என்னு செஞ்சிருந்தாருன்னு, மடி நெறெயா நவ்வாப்பளத்தைப் புடுங்கி வச்-
-சிருந்தாரு. 29. வெயிலு கொடுமெயினுலெ (or) அகோரத்துனாலெ நாக்கெல்லாம் வரண்டு போயிரும்-
-ன்னு அவருக்கு நல்லாத் தெரியும். 30. எப்பிடியாப்பட்ட வாலிவெண்ணு ஆனாலும் சரி, தண்ணித்தாகம் பொறுக்கமுடியாது. 31. நாக்கை நனைக்கக்கூடிய பளம் என்னுன்னு ஆனாலும் சரி, அவனுக்கு அது அம்புட்டு ஆனந்தமாருக்கும்ன்னும் அவருக்கு நல்லாத் தெரியும். ஒரு வாலிவனுக்கே இப்பிடின்னா ஒரு கெடுகுடு
-கெள்விக்கி (Very very old woman, colloquial expression) எப்பிடிருக்கும்ன்னு தனக்குள்ளெயே நெனைச்சு
-த்தான் அவரு இந்தக் கோளாறு பண்ணுனாரு.

32. இந்தக் காரியம் நடந்த சமயத்துலெ இவரு ரொம்ப சின்னப் பையனாருந்தாலுங்கூட, வாஸ்தவத்துலெ இவருக்கு, கெள்வி மேலெ என்னமோ அனுதாபந்தான் இருந்துச்சு. 33. அவ வயசுக்காக! ஆனா அதே சமயத்துலெ வெளெயாட்டுத்தனமும் கொஞ்சம் இருந்துச்சு. 34. உள்ளாம் என்னு இருந்துச்சுன்னு, தனக்கு மேலெ இவ அவ்வளவு பெரிய படிப்பாளியா?
-ன்ற கெர்வமும் கொஞ்சம் இருந்துச்சு.

35. இதுனாலெதான் இவரு, இவ புத்திசாலித்தனத்தை சோதிக்கிறதுக்கு, மரத்துமேலெ உக்காந்துக்கிட்டு, "பாட்டி பாட்டி! என்ன பாட்டீ, ரொம்ப தண்ணி
-த்தாகம் எடுக்குதா? 36. கொஞ்சம் நவ்வாப்பளம் போடட்டா?" ன்னு கேட்டாரு. 37. அதுக்கு அவ, "ஆமா பேராண்டீ! ரொம்பத் தண்ணித்தாகம் எடுக்குது. 38. பளம் இருந்தா கொஞ்சம் போடேண்"ன்னு. 39. அதுக்கு இவரு "பாட்டீ! சுட்ட பளம் வேணுமா? சுடாத பளம் வேணுமா! என்னு வேணும், பாட்டீ" ன்னாரு. 40. இவளுக்கு ஒண்ணும் வெளங்கலெ. 41. ஆனாலும் இவளுக்கு பளம் ரொம்ப அவசரமாருந்துச்சு. 42. அதுனாலெ என்னு சொல்றதுன்-
-னும் தெரியாமெ, "அடெ பேராண்டீ! பளத்துலெ சுட்ட பளம் வேறெ, சுடாத பளம் வேறெ, எங்கெடா
-இருக்கு" ன்னு.

43. ஏண்டா என்னைக் கேலி(ஃ)யா பண்றெ?
44. என்னத்தையாவது போட்று" ண்ணு.
45. கம்(ஃ)பரு, தான் மாடியிலெருந்து நவ்வாப்பழத்தை சுட்(ஃ)ட மணலுலெ போட்டாரு. 46. கௌவி வந்து அதை எடுத்து ஊதித்தின்னு. 47. மரத்துமேலெருந்த கம்பரு இதைப்பாத்து, கெக்கெபோட்டுச்சிரிச்சு (loud laughter) "என்ன பாட்டீ! பழம் ரொம்பச்சுடுதா? 48. ஏன் ஊதுறெ, பாட்டீ" ண்ணு கேலி பண்ணாரு. 49. இதைக் கேக்கவும், ஔவெக்கெ(ழ)ளவி ரொம்ப வெக்கப்பட்டு, 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்துலியும் இருப்பான்' ண்ற பழமொழியை நெனைச்சு, கம்பருக்கு நல்ல வாக்குக் குடுத்து போயிட்டா.

I/

Story of the "Tortoise King"

ஆமை ராசா கதை. 75 14/12/37

1. ஒரு தேசத்துலெ ஒரு ராசா இருந்தாரு. 2. அவருக்கு
ஒரே ஒரு மகென் இருந்தான். 3. ராசாவுக்கு ஒதவிக்கு
ஒரு மந்திரி இருந்தான். 4. இவனுக்கும் ஒரே ஒரு
மகெந்தான் இருந்தான். 5. ராசா மகனும் மந்திரி
மகனும் சின்னப்புள்ளெயிலெ இருந்தே ரொம்ப
சிநேகிதமாருந்தாங்க. 6. எங்கெபாத்தாலும் சரி,
எப்பப்பாத்தாலும் சரி, படிக்கப்போனாலும், படுக்கப்-
போனாலும், சாப்புடப் போனாலும், வெளாடப்போ
-னாலும், ரெண்டுபேரும் ஒன்னாவேதான் இருப்பாங்
-க. 7. இவங்க படிப்புக்கிடிப்பெல்லாம் முடிச்சிட்டு
கலியாணம்பண்ணுற வயசுக்கு வந்துட்டாங்க.
8. ராசாவும், ராசாத்தியும், மந்திரியும் மந்திரி பொஞ்சா
-தியும் சேந்து, ஒருநா இந்தப் பையங்க கலியாணத்
-தெப்பத்தி கூடிப் பேசுனாங்க. 9. கூடிப் பேசி,
கலியாணமெல்லாம் தீர்மானம்பண்ணி, கடேசியிலெ
ரெண்டு பேத்துக்கும் கலியாணம் பண்ணிவச்சிட்டாங்க.
10. அப்பவும் இவங்க சிநேகிதம் மாறலெ. 11. இவங்க
சிநேகிதம் மாறாமெ எப்பவும் உறுதியாருக்கணும்
-ன்னு ஒருநா ரெண்டுபேரும் ஒரு வாக்குத்தத்தம்
செஞ்சாங்க. 12. அது எப்பிடீன்னு, ராசாமகென்
மந்திரி மகனெப்பாத்து, "மந்திரீ! ஒனக்கு
ஒரு ஆம்பளெப்புள்ளெ பெறந்து, எனக்கு ஒரு
பொம்பளெப்புள்ளெ பெறந்து, இல்லாட்டி
ஒனக்கு ஒரு பொம்பளெப்புள்ளெ பெறந்து,
எனக்கு ஒரு ஆம்பளெப்புள்ளெ பெறந்தா
நம்புள்ளெயெ ஒம்புள்ளெக்கி, அதுக வயசு
-க்கு வார காலத்துலெ கட்டிக்குடுக்கணும்" —
-ன்னான். 13. அதுக்கு மந்திரி மகென் சம்மதிச்சு—
க்கிட்டான். 14. இப்பிடியிருக்கையிலெ, மந்திரி
மகனுக்கு வெறும் பொம்பளெப்புள்ளெயாப் பெ
-றந்துச்சு. 15. ராசா மகனுக்கு ஒரு ஆமெக்குட்டி
மாத்தரம் பெறந்துச்சு. 16. மந்திரி மகனுக்கும் அவென்
பொஞ்சாதிக்கும் ரொம்ப சந்தோசமாருந்துச்சு.
17. ஆனா ராசா மகனுக்கும் அவெம்பொஞ்சாதிக்கும் ரொம்ப —
வெசனமாருந்துச்சு.

18. ஒரு பத்து பதினைஞ்சு வருசத்துக்கின்னெ
மந்திரி மக்க எல்லாம் பெரிய மனுசியாயிட்டா
-ங்க. 19. அதாவது, கலியாணம்பண்ற பருவத்துக்கு
வந்துட்டாங்க. 20. ஆனா ஆமைக்குட்டிமாத்ரம்
இருந்தவாக்கிலெ இருந்துச்சு. 21. அதாவது,
தரையோடெ தரையா இருந்துச்சு. 22. மந்திரிக்கி
பெறந்த அந்த ஏனைட்டுப் பொம்பளைப்புள்ளை
களையும் கட்டறதுக்கு ரொம்ப ரொம்ப தேசத்து
-லெருந்து ராசா குடும்பத்தைச் சேர்ந்தவங்க
வந்துக்கிட்டிருந்தாங்க. 23. இந்தச் சங்கதியெ
ராசா மகனும், மருமகனும் கேட்டு, முந்திக்கால
-த்துலெ ராசா மகனுக்கும் மந்திரி மகனுக்கும்
நடந்த வாக்கெப் பத்திப் பேசி, தங்களுக்குள்ளெ
ஒருத்தருக்கொருத்தர் "நம்ம இப்ப என்ன செய்-
-யலாம். 24. நம்மளுக்குப் பெறந்ததோ ஆமைக்குட்டி,
மந்திரிகிட்ட நம்ம பேசி பிரயோசனம் என்ன"
-ன்னு ரொம்ப வருத்தத்துலெ பேசிக்கிட்டிருந்-
-தாங்க. 25. இதையெல்லாம் ஆமைக்குட்டி
கேட்டுக்கிட்டேயிருந்துச்சு. 26. தாய் தகப்பங்கிட்ட
வந்து, "அப்பா! அம்மா! நீங்க சொன்னதை
யெல்லாம் நான் கேட்டுக்கிட்டேயிருந்தேன். 27. நானு
வந்து, ஆமைக்குட்டியா இருந்தாத்தான் என்ன,
வேற என்னமா இருந்தாத்தான் என்ன?
28. அதுக்கும், நீங்களும் மந்திரியும் செஞ்ச வாக்-
-குத்தத்துக்கும் என்ன சம்மந்தம்? 29. நீங்க
ஒடனே போயி பொண்ணுக் கேளுங்க"ன்னுச்சு.
30. அது பெறந்ததுக்கு, அன்னைக்கித்தான் பேசுச்சு.
31. இது மொத மொத புதுபுதுசா பேசுனதைக் கேக்க,
தாய் தகப்பனுக்கு இருந்த சந்தோசத்துக்கு
அளவேயில்லெ. 32. ஒடனே ராசா மகென், மந்திரி
வீட்டுக்குப் போயி, நடந்த சங்கதியெல்லாம்
சொல்லி, பொண்ணுக் கேட்டான். 33. இதைக் கேக்கவும்
மந்திரி வீட்டார் எல்லாரும் கெக்கெ போட்டுச்-
-சிரிச்சாங்க.

34. மந்திரி மகென் ராசா மகனைப் பாத்து, "ராசாவே!
நம்ம வாக்கெத்தத்தும் எல்லாம் அத்தான். 35. அதை
நானு, இல்லென்று சொல்லலெ. 36. ஆனு, எந்த
ஒலகத்துலெ ஒரு ஆமெக்குட்டிக்கி மனுச புள்ளெ
யெப்புடிச்சு கட்டிக்கிருப்பாங்க? ராசாவே" ன்னான்.
37. ராசா மகென் இதைக் கேட்டு, ரொம்ப வெசனப்பட்டு,
வீட்டுக்கு திரும்பி வந்து, ஆமெக்குட்டிகிட்ட
சங்கதியெச் சொன்னான். 38. இதைக் கேக்கவும்
ஆமெக்குட்டிக்கி ரொம்ப கோவம் வந்துருச்சு.
39. இந்தக்காரியம் இப்படி நடந்துக்கிட்டுருக்கையிலெ
ராசாவும் மந்திரியும், வயசு ஜாஸ்தியானதுனாலெ
காலஞ்சென்று போய்ட்டாங்க.
40. ராசா மகென் ராசாவாய்ட்டான்.
41. மந்திரி மகென் மந்திரியாய்ட்டான்.
42. ஆமெக்குட்டி தகப்பனைப்பாத்து, "அப்பா!
நீங்க இப்ப ராசா. மந்திரி மகென் மந்திரி.
43. ஒரு மந்திரி வந்து, தான்சொன்ன சொல்லெ
அளிச்சான் ன்னு, அவென் என்ன மந்திரி?
44. தேசத்துக்கடுத்த காரியத்துலெ அவென் ஒங்களு
-க்கு என்ன யோசனை சொல்லிக்குடுக்கப் போறான்?
45. அவென் மந்திரியாருக்கறதுக்கு லாயக்கேயில்லியே.
46. நீங்க ஏதுக்கும் அவெங்கிட்டப் போயி, நான் சொன்
-னதெல்லாஞ் சொல்லி, அவனெ மெரட்டி, கடேசி
-கடேசியா பொண்ணைக் கேளுங்க. 47. அவென் என்ன
சொல்றான் பாக்கலாம்" ன்னான். 48. ராசா அப்பிடியே
போயி மந்திரிகிட்டப் பேசுனாரு. மந்திரி ரொம்ப
பயந்துபோயி, கடேசியா பொண்ணுக்குடுக்கறேன்னு
சம்மதிச்சுக்கிட்டான். 49. கலியாணமும் முடிஞ்சு-
-போச்சு. 50. இந்தக்கலியாணமும் முடிஞ்சப்பெறகு
மந்திரியொடைய மத்த பொம்பளைப்புள்ளைக எல்லாத்-
துக்கும் கலியாணம் முடிஞ்சுருச்சு. 51. எல்லாப்புள்ளைகளு-
க்கும் ரொம்ப சந்தோசமாருந்துச்சு. 52. ஆமெக்குட்டி
-யெக்கட்டுன புள்ளைக்கி மாத்தரம் ரொம்ப -
வெசனமாருந்துச்சு.

53. ஒருநா மந்திரியொடைய மருமக்கமாரெல்லாம் ரொம்ப தடபுடலா வேட்டைக்கிப் போறாங்க.

54. இதை ஆமெக்குட்டி கேள்விப்பட்டுச்சு.

55. தாம்பொஞ்சாதியெப்பாத்து, "அடி பொண்ணே! ஒங்க தங்கச்சிமாரு புருசனுக எல்லாம் வேட்டைக்கிப் போறானுகளாம். 56. நானும் போகணும்ன்னு நெனைக்கிறேன். 57. அதுனாலெ வேட்டைக்கி வேண்டிய சாமானம் எல்லாம் சீக்கிரம் தயார் பண்ணு டீ" ன்னுச்சு.

58. இவனுக்கு இதைக் கேக்கவும் கோவம் வேரெ, சிரிப்பு வேரெ. 59. எப்பிடின்னாலும், இவ என்னு செஞ்சாண்ணு, ஒரு நொண்டிக் குதிரையெக்-கொண்டாந்து, ஆமெக்குட்டியெ அதுமேலெ வச்சுக்கட்டி, ஒரு ஓட்டைத்துப்பாக்கியையும் ஒரு ஒடஞ்ச கத்தியையும் சேத்து வச்சுக்கட்டி குதிரையெ ஓட்டிவிட்டுட்டா. 60. குதிரை வந்து அதுபாட்லெ காட்டுப்பக்கம் போச்சு.

61. ஆமெக்குட்டி வரலாறு என்னன்னா;—

இது முந்திப் பெறப்புலெ சூரியனுக்கு மகென். 62. யாரோ ஒரு முனி என்னத்துக்கோ போட்ட சாபத்துனாலெ இது இந்தப் பெறப்புலெ ஆமெக்குட்டியா பெறந்துச்சு. 63. ஆனா இந்த சாபத்துக்கு ஒரு அளவு இருந்துச்சு. 64. அது என்னன்னா, "இந்த ராசா வயித்துலெ ஆமெக்குட்டியாப் பொறந்து, கலியாணம்பண்ணி, வேட்டைக்கிப் போற காலத்துலெ தான் சுயரூபத்தை பெத்து, கடைசியா அந்த சாபம் நிவிர்த்தியாகி, மறுகலியாணஞ்செஞ்சு, எல்லாருக்கும் முன்னுக்கு பட்டாபிசேகம்பண்ணி, தானும் தாம்பொஞ்சாதியும் நல்ல சொகத்தை அனுபவிச்சு, புள்ளெகுட்டி பெத்து, தேசத்தை புத்திசாலித்தனமா ஆண்டு, குடிபடைக்கி வேண்டிய ஒதவியெல்லாஞ்செஞ்சு மனுசருக்கும் கடவுளுக்கும் நல்ல புள்ளையா நடக்கிறதுதான்."

65. குதிரை வந்து ஒரு பெரிய ஆலாமரத்துக்கிட்டப்போயி
நின்னுச்சு. 66. ஆமைக்குட்டி கீளெ எறங்கி,
தான் ஓட்டைக்களத்தி ஆலாமரத்துப் பொந்துலெ
வச்சுவொட்டனே, அதுக்கு தாண் சுயரூவமும் வந்து
ருச்சு. 66. சூரியனுக்கு மகென்னு அது எப்பிடி
—ருக்கும்! 67. சரியான ஒரு மனுசனாயிருச்சு.
68. ஒடம்பெப்பாத்தா, சூரியனைப் போல பிரகாசிச்
சுச்சு. 69. அந்தக்காட்டுலெருந்த மிருகமெல்லாம்
அப்பிடி அப்பிடே, இந்த ஒளியெப்பாத்து பயந்துபோயி கிளெ
விழுந்துக்கிருச்சு. 70. வேட்டைக்குப் போன
மத்தவனுகளுக்கு ஒண்ணுங் கெடைக்கலெ.
71. எல்லாரும் இந்த வழியே வர்ற போது, இவெண்
வந்து ஒரு பெரிய குதிரைமேலெ ஒரு சாமிமாதிரி
உக்காந்துக்கிட்டுருந்தாண். 72. அவனுக எல்லாம்
இவனைப்பாத்து, என்னமோ ஒரு சாமின்னு
நெனைச்சு பயந்து நெடுஞ்சாங்கரையா
கீழுலெ விழுந்து வேட்டைக்காக வராங்கேட்
—டானுக. 73. இவெண் அவனுகளைப்பாத்து, "சரி,
மிருகங்க எல்லாம் அந்தாருக்கு. 74. வாலெ மாத்தரம்
தொடக்கூடாது. மத்ததெல்லாம் எடுத்துக்கிட்டுப்
—போங்க" ன்னு உத்தரவு குடுத்தாண்.
75. அவனுக எல்லாம் அப்பிடியே செஞ்சு சந்தோசமா
வீட்டுக்குப் போனானுக. 76. இவெண் வந்து, திரும்பவும்
ஆமை ஓட்டுக்குள்ளெ பழைய மாதிரி பூந்துக்கிட்டு
வீட்டுக்கு வந்தாண். 77. பொண்சாதி கட்டுக்கிட்டதெல்
—லாம் அவித்துவிட்டா. 78. ஒரு ரெண்டு மூணு
வாலெ மாத்தரம் அவ பாத்து, ஆமையெ ரொம்ப
கேலி பண்ணிச் சிரிச்சா. 79. ஆமை வந்து, பொண்சாதியெ
—ப்பாத்து "பொண்ணே, பொண்ணே, ஒரு பெரிய
அண்டாவுலெ எனக்கு குளிக்கத்தண்ணி வையி"
ன்னுச்சு. 80. இவளுக்கு வேடிக்கையாருந்தாலும்,
சொன்னபடி செஞ்சா. 81. இது வந்து, மனுசனாகி,
குளிச்சிட்டு, திரும்பவும் ஓட்டுக்குள்ளெ பூந்து—
—க்கிருச்சு.

85. வணக்கம் போல

91. அவசியமில்லையே!

96. குளிச்ச சத்தம் இவனுக்குக்கேட்டுச்சு.

VI

82. இதே மாதிரி உன்னமு ரெண்டு மூணுதடவை வேட்டைக்கிப் போயி மொத்தத்தடவை செஞ்ச-மாதிரியே செஞ்சாச்சு. 83. மந்திரியொட்டைய மத்த மருமக்கமாரெல்லாம் ஒவ்வொருதடவையும் அவென் அவென் பொஞ்சாதிகிட்டப்போயி, ரொம்பப் பெருமையா கெட்டிக்காரத்தனமாப்-பேசுனாக. 84. உன்ன சங்கதியை மாத்தரம் சொல்லலை. 85. கடேசி நாளுலை வழக்கம் போல இவுக ஆமெக்குட்டிய சாமிகிட்ட வந்தாக.

86. அன்னைக்கி அவுக அண்டுவெரவுக எல்லாத்தெயும் இவென் கோணிக்கைக்கி வெட்டிக்கிட்டான். 87. அவுக அதையும் ஒரு பெருசா எண்ணாமெ சந்தோசத்துலியே போய்ட்டாக.

87. அன்னைக்கும் இது, வழக்கப்படி பொஞ்சாதிக்-கிட்ட குளிக்கத்தண்ணி வைக்கச் சொல்லுச்சு.

88. பொஞ்சாதிக்கி சந்தேகம் ரொம்ப அதிகிச்சச்சு. அவ தனக்குள்ளெ, " இதென்ன வேதக்கெயா-ருக்கு. 89. ஆமெக்குட்டக்கி ஒரு பெரிய அண்டாத்தண்ணி என்னத்துக்கு. 90. இதுலெ என்னமோ ஒரு ரகசியம் இருக்கு. 91. இல்லாட்டி ஒரு அண்டாத்தண்ணி அவசியமில்லையே!

92. எதுக்கும், இன்னைக்கி இதென்னன்னு பாத்து-ரணும்" ன்னு நெனெச்சு, தண்ணி கின்னி-யெல்லாம் நல்லா வௌாவி வச்சுட்டு, கொஞ்ச நேரம் வெளியெ காத்திருந்தா.

93. ஆமெக்குட்டி அரைக்குள்ளெ போயி, ஓட்டெக்களத்துச்சு. 94. ஒடனெ மனுச ரூவம் வந்துருச்சு. 95. நல்லாக் குளிச்சுச்சு. 96. குளிச்ச சத்தம் இவளுக்குக் கேட்டுச்சு. 97. இவ, மெதுவா போயி, கதவுச்சந்துலெ எட்டிப்பாத்தா.

98. பாக்கவும், அவென் சொடராகப்பட்டது இவ கண்ணு ஒருங்கிப் போறமாதிரியிருந்துச்சு.

99. இவ, ஒடனே என்ன செஞ்சாண்ணு,

103. சந்தோசமென்று சொல்முடியல

மேலெயிலெருந்த ஆமை ஓட்டை கணவாணி-
-த்தனமா எடுத்து, ஓடிப்போயி, அதை
நெருப்புலெ போட்டு எரிச்சிட்டா. னச்சிட்டு
ரொம்ப ஆச்சரியத்தோடெயும், சந்தோசமாவும்
ஓட்ட ஓட்டமா ஓடி, ராசாகிட்டயும்
ராசாத்திகிட்டயும் நடந்த சங்கதியெல்லாம்
வெவரமாச் சொன்னு. 100. அவங்க ஓடியாந்து
பாத்தாங்க. 101. இந்தச்சங்கதி ஒரு நிமிசத்துலெ
ஊரெல்லாம் பரந்துருச்சு. 102. மந்திரி வீட்டுக்கும்
சங்கதி போயிருச்சு. 103. ராசாத்திக்கும் ராசாவுக்கும்
இருந்த சந்தோசம்ன்னு சொல்லமுடியலை.
104 ஆனா ராசா மகனுக்கு ரொம்ப வெசனமாருந்துச்சு.
105 அவென் பொஞ்சாதியைக் கூப்புட்டு "பொண்ணே,
நீ ஏன் இந்த மாதிரி புத்தியில்லாத வேலை
செஞ்செ. 106. எனக்கு உண்ணம் கொஞ்சக்காலம்
இருக்கே! பரவாயில்லை. 107. எப்பிடின்னாலும்
அது பகவான் செயல்" ன்னு சொல்லிக்கிட்டு
வெளியெ வந்தான். 108. அவனைப்பாத்தவங்க
எல்லாம் அவென் ஒளியைப்பாத்து, மயங்கி
கீளெ கீளெ விழுந்தாங்க. 109. அப்புறம் இவென்
தாய்தகப்பங்கிட்ட எல்லாச்சங்கதியும்
வெவரமாச் சொன்னான். 110. மந்திரி வீட்டாரு
எல்லாரும் வெக்கப்பட்டுப் போனாங்க.
111. அன்டு வெறலைப் பறிகுடுத்தவனுக மூஞ்சியிலெ
களையேயில்லை. 112. கடேசியா முன்னெ நம்ம
பாத்தபடி ராசா மகனுக்கும் மருமகனுக்கும்
உன்னொரு கலியாணம் நடந்து, வேறெ
வேறெ தேசத்துக்கு ராசாக்க எல்லாம் இதை
வந்து பாத்து ஆச்சரியப்பட்டு, இவங்களுக்கு
பட்டாபிசேகமும் நடத்தி, எல்லாரும் சந்தோ-
சமாருந்தாங்களாம். 113 இவங்க ரெண்டுபேரும்
நன்னெ குட்டி பெத்து, ரொம்ப சந்தானமா,
சந்தோசமா வாந்துக்கிட்டுருந்தாங்களாம்.

Story of the Heavenly girls. 82

தெய்வ லோகத்து ரம்பைக கதை.

1. ஒரு தேசத்துலெ ஒரு ராசாவும் ராசாத்தியும் இருந்தாங்க. 2. அவுங்களுக்கு ஏளு புள்ளெக.

3. ஒரு நா நல்ல நெலா அடிச்சிக்கிட்டிருந்த ராத்திரியிலெ ராசா வந்து ஏளு புள்ளெகளெயும் கூப்புட்டாரு.

4. கூப்புட்டு ஒவ்வொருத்தனெயும் பாத்து, "இந்த நெலா வெளிச்சத்துலெ ஒனக்கென்ன பிரியம், ஒனக்கென்ன பிரியம்ன்னு எல்லாத்தெயும் வரு... செயாக் கேட்டாரு. 5. மூத்தவென் என்ன சொன்னுன்ன்னு "ஐயா! இந்த நேரத்துலெ நம்ம பட்டாளத்தெயெல்லாம் தெரட்டி, எதிரி தேசத்துக்குப் போயி, எதிரிகளெயெல்லாம் சங்காரம் பண்ணி, அந்த தேசத்தெப் புடிச்சு, ஜெயத்தோடெ நம்ம தேசத்துக்குத் திரும்பி வர்றது எனக்குப் பிரியம்" ன்னுன். 6. ரெண்டாவது மயென் என்ன சொன்னுன்ன்னு, "ஐயா! இந்த நேரத்துலெ வயலுக்குப் போயி பூமி ஒளு தண்ணி பாச்சரது எனக்குப் பிரியம்" ன்னுன். 7. மூணாவது மயென் என்ன சொன்னுன்ன்னு, "ஐயா! ராத்திரியிலெ நம்ம ஊருலெ, திருடனுக, குடிபடைகளெயெல்லாம் ரொம்ப கொள்ளையடிக்கிறானுக.

8. அப்பிடியாப்பட்டவனுகளெ இந்த நேரத்துலெ போயி கைப்புடியாப் புடிச்சு, தண்டிச்சு, குடிபடைகளெக் காப்பாத்துரது எனக்கு ரொம்பப் பிரியம்" ன்னுன். 9. இப்பிடி ஆறு பேரும் ஆறுமாதிரியாச் சொன்னுனுக. 10. இதைக் கேக்கவும், ராசாவுக்கு ரொம்பப் பிரியமாருந்துச்சு.

11. இப்பிடி அவனுக சொன்னதுனுலெ அவனுகளுக்கு என்னென்ன வேணுமோ அதெல்லாம் குடுக்கச் சொல்லி மந்திரிக்கி உத்தரவு குடுத்தாரு.

வரு... செயா in order

சங்காரம் destruction

குடிபடைகள் Subjects.

P.T.O.

The six hrs? / the six hrs?] ?   2 || 83

கண்டதையும் கழுதையும் கடைசாரி, anything they like

12.
அண்ணென்னாரு ஒரு பேரும், கண்டதையுங் — 30 the last.
கழுதையும் சொல்லிக்கிட்டிருந்தது, அந்தக் —
கடைசாரித் தம்பிக்கி புடிக்கலெ. 13. அதுனுலெ இவென்
அரமணைக்குள்ளெ போயி என்னத்தெயோ
செஞ்சுக்கிட்டிருந்தான். 14. மத்தவனுக பேச்செல்லாம்
முடிஞ்சப்பெறகு இவென் மெதுவா வந்தான். 38
15. ராசா இவனைப்பாத்து, "மகனே! ஒனக்கென்ன
பிரியம்ன்னு கேட்டாரு." 16. அதுக்கு இவென், பட்படன்னு
"ஐயா! நெலா பட்டபட்டுன்னு அடிச்சுக்கிட்டிருக்கு. twinkling
17. இந்த அருமையான நேரத்துலெ நல்ல சொகத்தெ
அநுபவிக்கிறது எனக்கு ரொம்பப் பிரியம்" ன்னான். 40
18. ராசா இவனைப்பாத்து, "எப்பிடி மகனே?" ன்னாரு.
19. அதுக்கி இவென், "இந்த நெலா வெளிச்சத்துலெ,
நம்ம அரமணைத்தோட்டத்துலெ ஒரு நல்ல
பஞ்சணை மெத்தை போட்டு, அதுலெ நான்
படுக்கணும். 20. தெய்வ லோகத்துலெருந்து நாலு — 45 அமுக்க press or massage
ரம்பெக ஏங்கிட்ட வந்து, ஒருத்தி காலமுக்கணும்,
ஒருத்தி கையமுக்கணும், ஒருத்தி வெஞ்சாமரெ
வீசணும், ஒருத்தி மத்த பணிவிடைக செய்யணும். — பணிவிடை : a service (as slave)
21. இப்பிடி அவளுக எனக்கு ரொம்ப பயந்து, அடங்கி, — அடங்கி ஒடுங்கி submissively
ஒடுங்கி, பணிவிடை செய்யிற நேரத்துலெ, காலு, (று) 50
அதுக்கும் மத்தாருன்னு கிட்டப்பக்கம் இருக்கிறவளை
ஒதைக்கணும். 22. இதைப்பாத்து அவளுக எல்லாரும்
நடுநடுங்கி ஏங்காலுலெ விழுந்து என்னை
கும்பிட்டுக்கிட்டே இருக்கணும்." ன்னான்.
23. தகப்பனுக்கி இதைக் கேக்கவும், கோவம் பொறுக்க — 55
— முடியலெ. 24. இந்தப் பையனை வாய்க்கி வந்தபடி
பேசி, கொலையாளியைக் கூப்புட்டு, "அடே!
நீ இந்தப்பயலைக் கொண்டு போயி, நடுக்காட்டுலெ
அவென் தலையை வெட்டி, ரத்தத்தை ஏங்கிட்ட
கொண்டாந்து காமிக்கணும்" ன்னு உத்தரவு குடுத்தான். 60

25. ராசாத்தி வந்து, பக்கத்துலெ நின்னு இதைக்கேட்டு-க்கிட்டே இருந்தா. 26. ராசா வாயிலெ இருந்து இந்தமாதிரி குரூரமான காரியம் பொறந்ததோடனே, அவ அரமணைக்குள்ளெ ஓடி, ஒரு பையி நெறையா பணத்தை எடுத்துக்கிட்டு வந்து, ராசாவுக்குத் தெரி-யாமெ மகெங்கிட்டக் குடுத்து, அவனைப்பாத்து,

27. "மகனே! எங்கெயாவது தப்பி போயி, இந்தப்பணத்தெ வச்சுப் பொளைச்சுக்கின்னு" சொல்லிட்டு, கொலெயாளியெப்பாத்து, "அடே! கொலெயாளி!

28. ராசா கோவத்துலெ அப்பிடி சொல்லிட்டாரு.

29. ஆனா நீயி, தயவுசெஞ்சு இவனைக் கொன்றாதெ.

30. ரொம்ப தூரத்லெ கொண்டுவிட்டுட்டு, காட்டுலெ என்னத்தையாவது புடிச்சு அறுத்து அதோடைய ரத்தத்தை ராசாவுக்கு இவெந் ரத்தம்ன்னு காமிச்சிடு. 31. அப்பிடி நீயி செஞ்சப் பொறகு, நானு ஒனக்கு வே...ண்டிய பணம் தாரேன்" ன்னு சொல்லி மகனைக்கட்டிப்புடிச்சி அழுது, அவனுக்கு முத்தம் குடுத்து, அவனையும் கொலெ-யாளியெயும் காட்டுக்கு அனுப்பிட்டா.

32. இவனுக ரெண்டுபேரும் போனுங்க-போனுங்க-போனுங்-கடு...க்காட்டுக்குள்ளெ ரொம்ப தூரம் போய்ட்-டானுக. 33. அங்கெ போயி, கொலெயாளி இவனை அங்கெதானெ விட்டுப்புட்டு, ஒரு குருவியெப்-புடிச்சுக்கொன்னு அது ரத்தத்தை ஒரு துணியிலெ தொவெச்சி, அரமணைக்கு வந்து ராசாகிட்ட அதைக்காமிச்சானு. 34. அப்பறம் இவெந் ராசாத்திகிட்ட வந்து நடந்த சங்கதியெல்லாம் சொன்னானு.

35. ராசாத்திக்கி ரொம்ப சந்தோசம் வந்துருச்சு.

36. தான் வாக்குக்குடுத்தபடி, அந்த நல்ல கொலெயாளிக்கி ரெண்டு பையி நெறையா பணங் குடுத்தா.

P.T.O.

37. நடு...க்காட்டுக்குள்ளெ ஒரு சின்ன வெளிச்சமு
தெரிஞ்சுச்சு. 38. அந்த வெளிச்சத்துக்கு நேரெ, ராசா—
மகென் போனான். 39. அங்கெ ஒரு சின்னக்குடிசெ
இருந்துச்சு. 40. அதுக்குள்ளெ ஒரு குடுகுடு (1) கெள்வி— குடுகுடு very old
ருந்தா. 41. இவென் அந்தக் கெள்வி (1) காலுலெ விளுந்து,
"பாட்டீ! நீதான் எனக்கு இந்த ஒலகத்துலெ
தொணெ." 42. ஏந்தாய் தகப்பென் எல்லாரும் என்னெக்—
கைவிட்டுட்டாங்க." ன்னான். 43. அவென் அப்பிடி
ச் சொன்னதுனாலெ, கெளவி அவனெ தூக்கெறிந்தப்—
புள்ளெ மாதிரி பாத்தா. 44. கெளவிக்கி கொஞ்சமு மாயமு
இருந்துச்சு. 45. அவ இவனெப்பாத்து, "அப்பா, பேராண்டீ!
மாடு மேய்க்கிறதுக்கு நீயி தெக்கெ போ, கெளக்கெ போ,
மேற்கெ போ, ஆனா, வடக்கெ மாத்தரம் போயிராதெ"—
ன்னா. 46. இவென், "நல்லது பாட்டீ"ன்னு சொல்லிட்டு
ரொம்ப நாளு வடக்கெ போகாமெயே இருந்தான்.
47. ஒரு நா இவென் "பாட்டி ஏன் வடக்கெ போகவாணாம்"—
ன்னா, இன்னெக்கி நம்ம கிட்டாயம் போயிப்பாக்கணும்.
48. என்னதான் வந்துரும்" ன்னு தனக்குள்ளேயே
நெனெச்சு, அன்னெக்கி மாட்டுகளெ வடக்கெ
ஓட்டிக்கிட்டுப் போனான். 49. அங்கெ நடு...க்காட்—
டுக்குள்ளெ ஒரு தெப்பக்கொளமு இருந்துச்சி. 50. கொளத்து—
க்கரையிலெ ஒரு பெரிய மரமு இருந்துச்சு. 51. அந்த
மரத்துமேலெ நாலு ரத்தாம்பரப்பட்டுச் சீலெக — ரத்தாம்பர usually worn by rajahs or daughters of the gods.
தொங்கிக்கிட்டு இருந்துச்சு. 52. இவென் மரத்துலெ யேறி
கீளெ குனிஞ்சு பாத்தான். 53. தெய்வலோகத்துப் பொண்ணுக
நாலுபேரு கொளத்துக்குள்ளெ குளிச்சிக்கிட்—
டுருந்தாளுக. 54. இவென் ஒரு சீலெயெத் தூக்கிக்கிட்டு
வீட்டுக்கு ஓடுனான். 55. அதுக்குள்ளெ இவுளுக
குளிச்சு மேலெ வந்தாளுக. 56. வந்து பாத்தா, ஒரு
சீலெயெக் காணோம். 57. திரும்பிப்பாத்தாளுக. 58. இவென்
ஓட்ட ஓட்டமா ஓடிக்கிட்டிருந்தான். 59. இவளுக — ஓட்டஓட்டமா very fast.
பின்னாக்கெ ஓடியாந்தாளுக. 60. சீலெயெப் பறிக்கி—
த்தவ மாத்தரம்

"என்னைப் பார். என்னைக் கெப்பாரு"ன்னு கேத்துக்கிட்-டே வந்தா. 61. இவென் ஏமாந்துட்டான்.

கமெஞ்சு (turned into / created) 62. திரும்பிப் பாத்தான். 63. ஒடனெ கல்லாச் சமெஞ்சு-ட்டான். 64. இவ சிலெயெ எடுத்துக் கட்டிக்கிட்டா.

65. அப்பறம் ரெண்டு பேரும் தெய்வ லோகத்துக்குப் பறந்து-போய்ட்டாங்க. 66. பொணந்து விளுந்துருச்சு. 67. இருட்டு-ஆயிருச்சு. 68. மாட்டையுங் காணும். 69. பையனெ-யுங் காணும். 70. கௌவிக்கி ரொம்ப சந்தேகம் விளுந்துருச்சு. 71. எப்ப விடியும் விடியும்னு பாத்துக்கிட்டுருந்தா. 72. விடியக்காலத்துலெ எந்திரிச்சு, ஒரு செம்புலெ தண்ணியும் ஒரு பெரம்பையும் எடுத்துக்கிட்டு வடக்குப் பக்கம் போனா. 73. வளியிலெ பையென் கல்லா சமெஞ்சி-ருந்தான். 74. இவ தண்ணியெ அவென் மேலெ தெளிச்சு பெரம்புலெ அவனெ அடிச்சா.

75. ஒடனே அவனுக்கு உயிரு வந்துருச்சு.

76. உயிரு வந்தவொடனெ, நடந்ததெயெல்லாம் கௌவிக்கிச் சொன்னான். 77. கௌவி ஒரு மந்தரக்காரி. 78. இந்தச் சங்கதி இவனுக்குத் தெரியாது.

79. இவென் அன்னைக்கெல்லாம் அளுதுகிட்டேருந்தான்.

80. கௌவி இவெனெப் பாத்து "என்ன சங்கதி" ன்னு கேட்டா. 81. அதுக்கு இவென், "பாட்டிபாட்டி! நேத்து நான் பாத்தவளெ கட்டாகட்டி[1], செத்துப் போயிருவென்" ன்னான். 82. அதுக்கு கௌவி, "பேராண்டி! அப்பிடின்னா, நேத்துமாதிரியே இன்னைக்கி அங்கெ போயி, திரும்பிப் பாக்காமெ ஒரு சிலெயெ எடுத்துக்கிட்டு நேரெ வீட்டுக்கு ஓடியாந்துரு. 83. அவ என்ன சொல்லி ஏச்சாலும் திரும்பிப் பாத்துராதெ.

84. மத்த சங்கதியெ நான் பாத்துக்கிறென்"ன்னா.

85. இவென் அப்பிடியே போயி சிலெயெத் தூக்கிக்கிட்டு ஒரே ஓட்டமா நேரெ வீட்டுக்கு ஓடியாந்துட்டான்.

(1.) கட்டாகட்டி if she does not marry

P.T.O.

விட்டுக்குள்ளை நொளைஞ்சவொடனெ, கௌவி
இவென்தொடையெக் கிளிச்சு, அதுக்குள்ளை இந்த
சிலையெ வச்சுத்தச்சிட்டு, அவனெ மந்தரத்து-
னலெ ஒரு சின்னப்புள்ளெமாதிரி ஆக்கி,
ஒரு தொட்டியிலெ போட்டு "ரோ, ரோ, ரோ"
ண்ணு ஆட்டிக்கிட்டு இந்தா. 87. இந்த நேரத்துலெ
தெய்வலோகத்துப் பொண்ணு "கீஸ், பூஸ்" ண்ணு
எளைச்சுக்கிட்டு ஓடியாந்தா. 88. கௌவியெப்-
பாத்து, "பாட்டீ! எவனோ ஒருத்தென்
எங்சிலையெத் தூக்கிக்கிட்டு இங்கெ வந்து
நொளைஞ்சானே! 89. அவென் எங்கெ பாட்டீ? –"
–ண்ணு கேட்டா. 90. அதுக்குக் கௌவி, "ஐயோ,
பாவம்! இங்கெ ஒருத்தனும் வரலியேம்மா.
91. நீ, வேண்ணா, வீடெல்லாம் பாரேன். 92. ரெங்கிட்ட
ஒரு கைக்கொளந்தை மாத்தராந்தான் இருக்கு.
93. அதுவும் இந்தா தொட்டியிலெ தூங்குது" ண்ணு.
94. அதுக்கு அவ, "பாட்டீ! பொய் சொல்லாதெ
பாட்டீ! அவென் இங்கெதான் வந்து நொளைஞ்சான்.
95. நானே எங்கண்ணுலெ பாத்தென்." ண்ணு. 96. அப்ப
கௌவி, "சரியம்மா. நானு வேண்ணா அவனெ-
க் காமிக்கிறென். 97. நீ மாத்தரம் அவனெ ஒண்ணும்
செய்யாமெ, அவனெக்கட்டிக்கிறேன் ண்ணு
சத்தியம்பண்ணிக்குடுத்தியிண்ணா நான் காமிக்கிறென்" –
ண்ணு. 98. "நல்லது பாட்டீ" ண்ணு இவ சத்தியம்-
பண்ணிக்குடுத்துட்டா. 99. ஒடனே இவனுக்கு
கட்டிக்கிற ஒரு சிலையெக்குடுத்து, புள்ளெயெ
பெரிய ஆம்பளெயாக்கி விட்டுட்டா. 100. தெய்வ
லோகத்துப் பொண்ணு, சத்தியத்தெ மீறாமெ
இவனெக்கட்டிக்கிட்டா. 101. இதெப்பாத்து மத்த
மூணு பொண்ணுகளும் சேந்து இவனெயே
கட்டிக்கிட்டாளுக. 102. இப்ப ராசாமகென் இந்த நாலு
பொண்ணுகளோடெயும் ரொம்ப சந்தோசமாருந்தான்.

103. இவெஞ்சாங்கி இப்படியிருக்கையிலெ, இவென்
தாய்தகப்பென் ஊரிலெ வேறெ ஒரு ராசா படை
-யெடுத்து வந்து, ஊரைப்புடிச்சுக்கிட்டு, ராசா,
ராசாத்தி, புள்ளைக எல்லாத்தையும் கொல்லாமெ
தொரத்திவிட்டுட்டான். 104. இவுங்க எல்லாரும் ரொம்ப
ஏளெயாகி வெறகு வித்துப் பொளெச்சுக்கிட்டுருந்தா
-ங்க. 105. தெய்வலோகத்துப் பொண்ணுக, மந்தரத்துனாலெ,
காட்டுக்குள்ளெ ஒரு பெரிய அரமனெ உண்டாக்கி
சவுரி ஒரு ராசாவுக்கு என்னென்ன சவுரியம் வேணுமோ
அதெல்லாம் ஏற்பாடு செஞ்சு, இவென் முழிக்
-காலத்துலெ தகப்பெங்கிட்ட என்னு சொன்னுதோ
அப்படியே, ஒருத்தி காலமுக்கவும், ஒருத்தி கையமுக்
-கவும், ஒருத்தி வெஞ்சாமரெ வீசவும், ஒருத்தி
மத்த பணிவெடைக செய்யவும் இப்படி எல்லாம்
செஞ்சுக்கிட்டுருந்தாளுக. 105. இப்படியிருக்கையிலெ
ஒருநா, தாந்தாயிதகப்பென் அண்ணென்மாரு
எல்லாரும் வெறகு வேணுமா வெறகு......ன்னு
அரமனெக்கிக் கீளெ சத்தம் போட்டுக்கிட்டுருந்தாங்க.
106. இவென் நல்லாக் கண்டுக்கிட்டான். 107. ஒடனெ
பொஞ்சாதிகளெக் கூப்புட்டு, அந்த வெறகுக்கா
ரெக் கூப்புட்டு, அவுங்களுக்கு வேண்டிய எல்லா
உபசாரணையுஞ் செஞ்சு, இன்னெக்கி ராத்திரி நம்ம
நந்தவனத்துக்குள்ளெ, நல்ல நெலா வெளிச்சத்துலெ
மஞ்சனெ மெத்தையெப் போட்டு, என்னியெப் படுக்க
வச்சு, நீங்க எப்பவும் செய்யிற மரியாதெ செய்யணு
-ம். 108. அந்த நேரத்துலெ அவுங்களெயெல்லாத்தையும்
எனக்கி முன்னுக்குக் கொண்டாந்து நிக்க வைக்கணு
-ம்" ன்னு உத்தரவு குடுத்தான். 107. அவளுக புருசென்
உத்தரவுப்படி ஒண்ணுங் கொறெவில்லாமெ
செய்தாளுக. 108. ராத்திரியாச்சு. 109. நெலா வெளிச்சத்துலெ
எல்லாரும் இவனுக்கு முன்னுக்கு வந்தாங்க.
110. முன்னெ இவெஞ் சொன்னதையெல்லாம் கண்ணாலெ
கண்டாங்க. அப்பத்தான் இவென், தாந்தாயெக்-
-கட்டிப்புடிச்சு அளுது தன்னெ வெளியிட்டான்.
111. தாயிக்கு இருந்த சந்தோசம் சொல்லமுடியலெ.
112. அப்பமும் இவுங்க எல்லாரும், கோட்டெலெருந்த தொளவியும்
சந்தோசமா வாந்துக்கிட்டுருந்தாங்களாம்.

"இங்கைதான் வாறதோ" ன்ற கதை.

1. ஒரு ஊர்லை ஒரு கப்பல் யாவாரி இருந்தானாம். 2. அவனுக்கு ஒரே ஒரு மகனாம். 3. அவென் வந்து இவனை நல்லா படிக்க வச்சானாம். 4. சொத்துக்கு அளவே -யில்லியாம். 5. இப்பிடியிருக்கையிலை, தகப் -பென் வந்து மகனுக்கு ஒரு நல்ல பொண்ணை -ப் பாத்து கலியாணம் பண்ணி வைக்கணும் ன்னு நெனைச்சு, வேறெ ஒரு ஊருக்குப் போ -னானாம். 6. அந்த ஊர்லை இவனை விட பெரிய கப்பல் யாவாரி ஒருத்தென் இருந்தானாம் அவனுக்கு வந்து ஒரே ஒரு மகளாம்.

7. அவனுக்கு வந்து ஒரே ஒரு மகளாம்.
8. அவனும் மகளை நல்லாப் படிக்கவச்சானாம்.
9. அசலூரு யாவாரி வந்து பொண்ணுக்- கேட்ட வொடனை, இவென் வந்து, பொண்ணுக் குடுக்றேன் ன்னு சம்மதிச்சு -க்கிட்டானாம். 10. கோலா காலத்துலை கலியா -ணமும் முடிஞ்சிச்சாம். 11. பொண்ணு மாப்புளை -யை ஒருவிடு கூட்ரபோது, மாப்பிளை ஒண்ணு செஞ்சானாம், பொண்ணே பொண்ணே! இங்கெ பாரு. 12. ஒன்னியெ ஏச்சுப்புட்டேன்ல்லை- ன்னு சொல்லி தானு பொய்க்கண்ணை எடுத்து -ப்புட்டு குருட்டுக் கண்ணைக் காமிச்சு கைக்கை போட்டுச் சிரிச்சானாம்! 13. அதுக்கு பொண்ணு வந்து, "அப்பிடிங்களா? அப்பிடின்னு, இங்கைதான் வாறதோ? ன்னு சொல்லி சீலையைத் தூக்கிக்கிட்டு தானு மொண்டிக் கையை ஆட்டிக் காமிச்சு புருசனை கேலி பண்ணானாம்." 14. இவென் வந்து வெக்கப்பட்டுப் போயி ஒக்காந்துக்கிட்டுருந்தானாம்

ஒரு பிராமணன் நீச்சடிச்சு, ஒரு ஏளெட்டுப் பேரை காப்பாத்துனது.

1. கொடைக்கானது மலையிலெ ஒரு பிராமணன் இருந்தான். 2. அவன் ஒரு பெரிய புள்ளெகுட்டி-க்காரென். இவன்சொந்த ஊரு கொடைக்கா-னது இல்லெ. 3. மலையாளத்துலெருந்து இங்கெ பொளைக்க வந்தவென். 4. இவன் ஒரு பெரிய கஞ்சென். 5. அதுனாலெ இவன் மேலெ அங்கெ ஆருக்கும் பிரியமில்லெ. 6. இவன் வந்து, ஒரு தடவெ இவம் பொண்டாட்டியை, பேருகாலத்துக்கு ஊருக்கு அனுப்பிருந்தான். 7. அவகூட புள்ளைகளையும் தாந்தரயையும் அனுப்பிருந்தான். 8. இவ அங்கெ போயி, ஒரு பத்திருவது நாளைக்குள்ளெ புள்ளெ பெர-ந்துருச்சு. 9. ஒரு ரெண்டு மூணு மாசங்கழி-ச்சு, இவன், அல்லாத்தியும் கூட்டிக்கிட்டு-வாரதுக்கு, கொச்சிக்குப் போனான். 10. போயி, அவுங்களையெல்லாம் கூட்டிக்கிட்டு திருவனந்தபுரத்தைப் பாத்துப்புட்டு அப்பறம் கொடைக்கானலுக்குப் போகலாம்-ன்னு நெனைச்சு மோட்டார் போட்டுலெ ஏறி ஆலப்பளெ வளி வந்தான். 11. ஆலப்பளெ-க்கு அங்கிட்டு வேம்பநாட்டுக் காயலுன்னு ஒரு காயல் இருக்கு. 12. அதுலெ போட்டு வாரபோது எப்பிடியோ சாஞ்சிருச்சு. 13. அதுலெருந்து-அவுங்கள்ல்லாம் தண்ணிக்குள்ளெ விளு-ந்துட்டாங்க. 14. விளுந்தவுங்க அமாரு ஒரு எளுவது எம்பது பேருருக்கும். 15. சாதாரணமா பிராமணரு வந்து, ரொம்ப பாரியாருப்பாங்க. 16. இவன் வந்து

அவனுக்கி மிஞ்சி பாரியாருந்தான்.
17. அப்பொ ஒரு நாளைக்கு ராத்திரி இருப்பா
-ம்போலெருக்கி. 18. ஆளோடாளா. இவனும்
தண்ணிக்குள்ளெ விழுந்துட்டான்.
19. ஆனா இவனும் வேறெ ஒரு அஞ்சாறாளும்
நீச்சடிச்சு மேலெ வந்தாங்க. 20. வந்து
சட்டை கிட்டை யெல்லாம் களைஞ்சிப்போட்
-டுப்புட்டு திரும்பவும் முங்கி நீச்சடிச்சு
தண்ணிக்குள்ளெ கெடக்கிறவங்களை
தூக்கினாங்க. 21. இவென் மாத்தரம் வந்து,
ஏளெட்டுப் பேரைத் தூக்கினான். 22. என்னு
நெனைச்சுக்கிட்டு தூக்கினான் ன்னு,
ஒவ்வொரு தடவையும், தாம் பொஞ்சாதி
-யாருக்கும், புள்ளையாருக்கும், இல்லாட்டி
தாயாருக்கும் ன்னு நெனெச்சுக்கிட்டு
தூக்கினான். 23. ஆனா, பா...வம்! ஒவ்வொரு
தடவையும் வேறெ வேறெ ஆளாப் போயி
-ருச்சு. 24. இவனுக்குச் சலிச்சுப் போச்சு.
25. ரொம்ப களைப்பாவும் போச்சு. 26. பேசாமெ
கரைக்கி வந்து ஒக்காந்துட்டான்.
27. இவென் ஒரு ஏளெட்டுப் பேரை காப்பாத்துனா
-ன்னு அதுக்காக கேள்விப்பட்டு,
இவனுக்கு ஒரு தங்க மெடலு குடுத்தா
-ங்க. 28. இவென் பேசாமெ செவனேன்னு
கொடைக்கரேக்கி தான் மாத்தரம் தனி
-மெயா வந்துட்டான். 29. அங்கெருக்கிறவங்க
இதைக் கேள்விப்பட்டு என்னு சொன்னாங்கன்னு
30. "பாத்தியா? இவங்கஞ்சத்தனத்துக்கு, இவென்
சொத்தெத்தின்ன ஆளில்லாமெப் போச்சு.
31. நாரவாரயெஞ் சம்பாரிக்க — நல்லவாரயென்
தின்னுப்பிலெ ஆரு தின்னப் போறாண்டு" ன்னாங்க

1. சுமாரு நூத்தி அம்பது வருசத்துக்கு மிந்தி
வெள்ளைக்காரு வந்து யாவாரஞ் செய்யிறதுக்கு
இந்தியாவுக்கு வந்தாங்களாம். 2. மெட்றாசுலெ
அந்தக் காலத்லெ ஆரோ ஒரு ராசாருந்தானாம்.
3. இவுங்க இவெங்கிட்டப் போயி "ராசாவே, ராசாவே!
நாங்க யாவாரிங்க. 4. இந்தியாவுலெ எங்களுக்கு
இருக்கறதுக்கு எடமில்லெ. 5. தயவு செஞ்சு எங்களுக்கு
தர்மத்துக்கு கொஞ்சம் எடங்குடுங்க" ன்னு
கேட்டாங்களாம். 5. அதுக்கு வந்து அந்த ராசா,
"சரி. அப்பிடின்னு ஒங்களுக்கு எம்புட்டு
எடம் வேணும்" ன்னு கேட்டானாம். 6. அதுக்கு
இவுங்க, "ராசாவே! ஒரு மாட்டுத் தோலு அளவு
எடங் குடுத்தா போதும்" ன்னாங்களாம்.
7. நரிக்கி எடங்குடுத்தா கெடைக்கி ரெண்டாடு
வேணும்ன்றது இவனுக்குத் தெரியாமெ, முன்பின்
யோசனை ஒன்னும் இல்லாமெ "மாட்டுத்தோலு
எடந்தானே" ன்னு ரொம்ப லேசா நெனைச்சு
"சரி" ன்னுட்டானாம். 8. இவுங்க வந்து, "காத்துள்ள
போதே தூத்திக்கிரணும்" ன்னுட்டு என்னு செஞ்சா
-ங்களாம் :- ஒரு மாட்டுத்தோலை நால்நூலா
அறுத்து ஒரு எடத்லெ ஒரு நுனியைப் புடிச்சுக்கிட்டு
உன்னொரு நுனியை தூரமா இளுத்துக்கிட்டுப்
போயி, கடலோரத்லெ வட்டமா வந்து மத்த
நுனியை ஒட்ட வச்சு, ராசாகிட்டப் போயி
"ராசாவே! நீங்க சொன்னபடி ஒரு மாட்டுத்
தோலு அளவுலெ நாங்க எடம் பாத்துட்டோம்.
9. தயவு செஞ்சு அதை எங்களுக்கு எளுதிக்குடுத்து
-டுங்க" ன்னாங்களாம். ராசா பாத்தானாம்!
10. "அடே, இதென்னடா அநியாய மாயிருக்கு! இம்புட்
-டுண்டு எடம்ன்னு நம்ம நெனைச்சோம். 11. இவுங்க
ஒரே அடியா ஏளெட்டு மைலு தூரத்துக்கு வளைச்
-சுட்டானுகளே" ன்னு நெனைச்சு, எப்பிடின்னாலும்
நம்ம ராசவாருக்கிறோம். 12. வாயாலெ சொல்லியும்
-புட்டோம். 13. "இவனுகளுக்கு குடுத்துத்தான் தீரணும்"
ன்னு அப்பிடியே எளுதிக்குடுத்துட்டானாம்.

32. ~~க்க்~~ கன்மெதானி செனுசு வந்திருக்காங்க.

[illegible]

14. இப்ப வந்து, இந்த காங்கிரசுக்காரடு என்னு
சொல்றாங்கன்னு :- "கட்டுச்சோத்துக்குள்ளை
எலியை வச்சுக் கட்டின மாதிரி, முந்திக்காலத்லை
அந்த ராசா இவுங்களுக்கு எடங்குடுக்கப்போயி
இப்ப நம்ம இந்தியா பூராவும் அவுங்க கையிலை
-டுக்கு" ன்றாங்க. 15. இது "சரி"ன்னு வச்சுக்கிரலாம்.
16. மொதமொத இதுக்கு குத்தம்? 17. இங்கிலீசுக்காரடு
வந்து அந்த ராசாவை ஏச்சாங்களா? இல்லை.
18. அவுங்க ரொம்ப புத்திசாலிக. நாணம் உள்ளவங்க.
தந்தரசாலிக. கெட்டிக்காரடு. 19. எடங்குடுத்த
20. அந்த ராசாதானே தேணம்புடிச்சவென்.
இவென் மாத்திரம் இல்லை. 21. அந்தக்காலத்துலை
இருந்த ராசா அம்புட்டுப் பேரும் புத்தியில்லாதவ
-னுகன்னுதான் நம்ம சொல்லணும். 22. எப்பிடின்னு:
இவனுக ஏன் ஒருத்தனுக் கொடுத்தென் பொறாமை
-யாடுந்தான். 23. ஒருத்தனோட ஒருத்தென் ஏன்
அடிச்சுக்கிட்டான்? 24. ஒருத்தென் ராச்சியத்தை
ஏன் ஒருத்தென் புடுங்கப்பாத்தான்? 25. இவனுக
அடிச்சுக்கிட்டுக் கெடந்த சமயத்லை வெள்ளை
-க்காரடு வந்து மத்தியஸ்தராத்தான் இருந்தாங்க.
26. இந்தியாவை புடுங்கி "கரையான் மாதிரி அரிச்சு-
-றுழ்ண்ட்டு" இல்லை. 27. இந்தியாவுலை ராசாக்க,
காட்டுமாடுக ~~மாதிரி~~ ஒத்துமையில்லாமை இங்கத்
-தாலை ஒண்ணொன்னு அடிபட்ட மாதிரி இருந்தானுக,
28. அது ஆரு குத்தம்? 29. வெள்ளைக்காரடு குத்தமா?
நம்ம குத்தமா? 30. சரி! இப்ப இந்தியா வெள்ளை
-க்காரடு கையிலை இருக்கு. 31. அவுங்க நம்மளுக்கு
செஞ்ச தீமை யென்னு? 32. இந்த நூத்தி அம்பது
வருசமா நன்மைதான் செஞ்சு வந்திருக்றாங்க.
33. காடாக் கெடந்த இந்தியாவை பட்டணங்களாக்
-குனாங்க. 34. தற்குறியா கெடந்தவங்களை யம்மே
பியயே யாக்குனாங்க. 35. சீமையிலை என்னென்னு மாதிரி
தொழிலு இருக்கோ அதையெல்லாம் வஞ்சகமில்லாமை
நம்மளுக்கு படிச்சு வச்சாங்க. 36. எல்லா வசதியும்
நம்மளுக்கு செஞ்சு வச்சாங்க. 37. இதா தீமை?

59. கடந்த நாப்பது வருசத்துக்குள்ளை
எம்பட்டோ மாறுதல் நடந்திருக்கு.

38. நம்மள்ளெ அநேகம்பேரு என்னு சொல்ரோம்:-
விக்டோரியா மகாராணியம்மா, சாகுரதுக்கு மிந்தி
"இந்தியாவுக்கு நல்ல புத்தியும், ஒத்துமையும்
பெலமும் வந்தப் பெறகு சுயராச்சியம் குடுத்துரா
-னும் ன்னு செம்புப் பட்டாவுலெ எளுதி வச்சி
-ட்டு செத்துப் போனாங்க. 39. அப்பன்னு இப்ப
ஏன் வெள்ளைக்காரு வந்து நம்மளுக்கு சுய
-ராச்சியம் குடுக்கலெ" ன்ரோம். 40. இது ரொம்ப
நல்ல கேள்விதான். 41. சரி! இப்ப நம்மளுக்கு
நல்ல புத்தி வந்துருச்சா? 42. நல்ல ஒத்துமெருக்கா?
43. மத்த தேசங்களைப் போல பெலமிருக்கா?
44. ஏன் இல்லெ? 45. இந்தியாவுலெ முப்பத்து முக்கோடி
சாமிருக்கிர மாதிரி முப்பத்து முக்கோடி சாதியும்
இருக்கும் போலருக்கே! 46. வாத்தியாருக்கொரு சாதி.
கொல்லனுக்கொரு சாதி. 47. கொத்தனுக்கொரு சாதி.
வண்ணானுக்கொரு சாதி. 48. அம்பட்டனுக்கொரு
சாதி. 49. பணக்காரனுக்கொரு சாதி. கூலிக்காரனுக்-
கொரு சாதி. 50. வெள்ளை வேட்டிக்காரனுக்கொரு
சாதி. கிளிஞ்ச வேட்டிக்காரனுக்கொரு சாதி.
51 உன்னமும் என்னென்னமோ சாதிருக்கே.
52. பறெயென் வந்து பாப்பான் வீட்லெ சாப்பிட-
முடியுமா? 53. பொண்ணுக்கட்ட முடியுமா?
54. நான்தான் பெரியவென். நீதான் பெரியவென்
-ன்னு நம்ம சம்பிரதாயம் போட்ராதில்லியா?
55. இப்பிடியிருக்க நம்ம செம்புப்பட்டாவெ
எப்பிடி நெனைக்க முடியும்?
56. வெள்ளெக்காரு சுயராச்சியம் குடுக்க மாட்-
டேன் ன்ராங்களா? 57. குடுக்குறேன் ன்னு
சொல்ராங்க. 58. குடுக்கத்தான் போறாங்க.
59. கடந்த நாப்பது வருசத்துக்குள்ளெ எம்புட்டோ
மாறுதல் நடந்துருக்கு.
1907
:
:
60. ..கடேசியா காங்கிரசுக்காரு 2½ வருசமா இந்தியாவெ ஆளலியா?

71. Part: with இரு.

உண்ணம் எத்தினியோ அண்ணன்மாரும் தம்பிமாரும் வெள்ளைக்காரிகளை கலியாணம் பண்ணிருக்ராங்க.

81. வெள்ளைக்காரு வந்து இந்தியாவை கொள்ளையடிக்கிறாங்க.

82. பெரியபெரிய உத்தியோகமெல்லாம் வெள்ளைக்காருக்குத்தான் குடுக்குறாங்க.

61. "உப்பிட்டவரை உள்ளளவும் நெனை" "உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யலாமா?" ன்ர பழமொழி ஏன் நம்ம நெனைவுக்கு வரலை?

62. "வெள்ளைக்காரு வெள்ளைக்காரு" ன்னு அவங்களை நம்ம வித்தியாசப்படுத்தி பேசு-ரோம். 63. வெள்ளைக்காரு இந்தியாவுலெ இல்லியா? 64. நம்மளும் வெள்ளைக்காருதான். 65. இப்பிடிச் சொல்ர போது ஒங்களுக்கு சிரிப்பு வரும். 66. ஆனா நம்மளும் வெள்ளைக்காருன்றது உண்மை. 67. எப்பிடின்னா:- வட இந்தியாவுலெ ஆப்கானிஸ்தானம் காபூல் இருக்குது. 68. அங்கெஇருக்கிறவங்க எல்லாம் வெள்ளைக்காருக்கு — மேலெ வெள்ளை வெளேர்ன்னுஇருக்காங்க. 69. இவங்களை நம்ம அண்ணன்தம்பின்றோம். 70. இதுக்கு என்னா சொல்றீங்க? 71. உண்ணாம் எத்தினியோ அண்ணன்மாரும் தம்பிமாரும் வெள்ளைக்காரிகளை கலியாணம் பண்ணியிருக்காங்க. 72. இதுக்கு என்னா சொல்றீங்க? 73. வெள்ளைக்காரரை அறுத்துப் பாத்தாலும் செகப்பு ரத்தந்தானிருக்கு! 74. நம்மளை அறுத்துப்பாத்தாலும் செகப்பு ரத்தந்-தானிருக்கு 75. அவங்களுக்கு மாத்திரம் வெள்ளை ரத்தமிருக்கா? 76. அவங்க வந்து எல்லா விசயத்துலியும் நமக்கு மேலெ இருக்கிறதுனாலெ நம்ம ஏன் அவங்களை அண்ணன்மாருன்னு சொல்லக்கூடாது. 77. லெகத்துலெ ஆணு ஒரு சாதி, பொண்ணு ஒரு சாதி தானே! 78. அப்ப அவங்களும் நம்ம சாதிதானே? 79. பின்னை ஏன் நம்ம அவங்களை வித்தியாசப்படுத்தி பேசணும்?.

80. உண்ணாம் நம்ம என்னா சொல்ரோம்:—

81. "வெள்ளைக்காரு வந்து இந்தியாவை கொள்ளையடிக்கிறாங்க. 82. பெரிய பெரிய உத்தி-யோகமெல்லாம் வெள்ளைக்காருக்குத்தான் குடுக்குறாங்க" ன்ரோம். 83. இது சரியா?

86. நம்மள்லெ இருக்குறாங்க.

84. நாப்பது வருசத்துக்கு முன்னெ நம்ம இருந்த
நெலெமெயெயும் இன்னைக்கி நம்ம
இருக்கிற நெலெமெயெயும் ஒத்துப்பாருங்க.
85. எத்தினெ கவுணரு, எத்தினெ சர்ச்சில்!
எத்தினெ லெக்கிட்டரு! எத்தினெ டாக்டரு!
எத்தினெ இஞ்சினீரு! எத்தினெ மந்திரிகெ!
86 நம்மள்ளெ இருந்துருக்கிறாங்க. இது பொய்யா?
87. பட்டாளத்லெ வெள்ளெக்காரருக்கு ரொம்ப
சம்பளம். 88. நம்மளுக்கு கொஞ்சச் சம்பளம்-
ன்றொம். அது சரி. 89. நம்மள்ளியும் பட்டாளத்-
-லெ பெரிய பெரிய உத்தியோகஸ்தரு பெரிய
பெரிய சம்பளம் வாங்கிக்கிட்டு இல்லியா?
90. உண்மெயா வெள்ளெக்காரருக்கு சாஸ்தி
சம்பளந்தான். ஏன்? 91. அதுக்கும் ஒரு
காரணமுருக்கு. 92. நம்ம ஒரு தோட்டம்
வெட்ரோம்ன்னு வச்சுக்கிறலாம். 93. வெள்ளா-
-மெ எடுக்கிறதுக்கு மிந்தி ஆராவது அந்த
தோட்டத்தெ நம்மகிட்ட கேட்டா, நம்ம
மனசார குடுத்துருவமா? 94. அதே மாதிரி
இந்தியாவெக்காக இவங்க எம்புட்டோ
கஷ்டம் எடுத்திருப்பாங்க. 95. அப்பிடியிருக்க
இவங்களுக்கு சாஸ்தி குடுத்தா ஞாயமில்லியா?
96. இந்தியா பெலத்தை கொறெச்சுப்புட்டாங்கன்றம்.
97. சீமெ தேசத்துலெ எல்லாருமு துப்பாக்கி வச்சுக்-
-கிட்டிருக்காங்க. 98. நம்மளுக்கு துப்பாக்கி இல்லெ-
-ன்றொம். அது எப்பிடி? 99. நம்மளுக்கும்
நெலம் பொலம் இருந்து பணமிருந்தா
அதெக்காப்பாத்துறதுக்கு அவுங்க நம்மளுக்கு
துப்பாக்கி குடுக்கிறாங்க. 100. இல்லென்னு சொல்-
-றாங்களா? 101. அநேகமா நம்ம ஏழைகளாருக்கிற-
-துனாலெ நம்மளுக்கு துப்பாக்கி அவசியமில்லெ.
102. மத்தபடி அவுங்க குடுக்கமாட்டேன்னு
சொல்லலெ. 103. நம்ம யோக்கியமாருந்து, துப்பாக்கி
அவசியந்தான்னு கண்டா ஒடனே குடுப்பாங்க
104. அதுக்கு தடை ஒன்னும் இல்லெ.

121. நட்பு மேலே கண்ணு வச்சிருக்கானே!

105. போலந்து சுயராச்சியத்தெப்பத்தி வெள்ளைக்-
-காரரு கவலெப்படராங்க. 106. ஆனா இந்தியாவெப்
-பத்தி நெனைக்கலெண்றோம். 107. அது சரியில்லெ.
108. சுயராச்சியம் நமக்கு இப்ப ரொம்ப சமீபமாஇருக்கு.
109. முந்தி மாதிரி யில்லெ. 110. சண்டை முடியிரதுதான்
தாமசம். 111. நம்மளுக்கு கெடெச்சுப் போயிரும்.
112. இதுக்காக இந்த கஷ்ட நேரத்லெ "வெள்ளைக்-
-காரருக்கு ஒதவி செய்யமாட்டோம். 113. இந்த
சண்டையெப்பத்தி நம்மளுக்கென்ன" ன்னு
நம்ம சொல்லலாமா. 114. கடவுளு பக்தியிலியும்
தர்மத்துலியும் இந்தியா பேர் போனதாச்சே!
115. ஒதவி செய்ய மாட்டோம்ன்றது தர்மமா?
116. ஜெர்மன்காரென் ரொம்ப கெட்டிக்காரென்.
117. அவென் நம்மளெ ஆண்டா நல்லாருக்கும்
-ன்றோம். 118. ஜெர்மனியும் இத்தாலியும் ஜப்பானுங்கூ-
-டி வெள்ளைக்காரரெ தோக்கடிச்சுருவாங்கன்-
-றோம். 119. வெள்ளைக்காரரு உண்மையான பலம்
நம்மளுக்கு தெரியுமா? 120. தப்பித்தவறி ஜெர்மன்
-காரென் வந்துட்டான்ன்னு நம்ம கெதி என்ன?
121. "காத்திருந்தவென் பொண்டாட்டி மேலெ நேத்து
வந்தவென் கண்ணு வச்சான்" ன்றது மாதிரி
இப்ப அவென் நம்ம மேலெ கண்ணு வச்சிருக்கா-
-னே! 122. நம்மளுக்குத் தெரியாதா? 123. நார்வே, ஆலந்து
டென்மார்க், பெல்ஜியம், செக்கோஸ்லோவக்கியா
இதுக எல்லாம் பட்ர பாடு நம்மளுக்குத் தெரியாதா
124. இப்படியிருக்க, இந்த நேரத்லெ நம்ம வந்து
வெள்ளைக்காரருக்கு ஒதவி செய்ய வேண்டியிருக்கு
"தாடி பத்தி எரியயிலெ சுருட்டுக்கு நெருப்பு
-க் கேட்ட மாதிரி" ஒதவி செய்யாமெயும் இருந்து
-க்கிட்டு அவுங்களுக்கு விரோதமாவும் பேசலா-
-மா? 125. இது தர்மமா? உண்மை நம்ம என்ன
செய்யிறோம்? — 126. ஜெர்மன்காரென் சொல்ர
பொய்யெயெல்லாம் நம்புறோம்.

127. ஜெர்மனியிலியும், இத்தாலியிலியும், ஜப்பானிலியும் என்னமோ ஆம்பளை மோட்டாக்காரரும் பொம்பளை மோட்டாக் காரரும், ஆம்பளை டாங்க்கும் பொம்பளை டாங்க்கும், ஆம்பளை லாரியும் பொம்பளை லாரியும் ஆம்பளை ஆகாசக்கப்பலும் பொம்பளை ஆகாசக்கப்பலும், ஆம்பளைச் சண்டைக்கப்பலும் பொம்பளைச் சண்டைக்கப்பலும் இருக்காம்.

128. இதெல்லாம் ஒரு நாளைக்கி ஒரு குட்டி போடுதாம் ன்று ஆராவது நம்மகிட்ட சொன்னாலுங்கூட நம்ம இந்த உண்மை — யான வார்த்தெயெ நம்புவோம் போலிருக்கு.

129. "கேப்பெயிலெ ஒரு பெயொருதரம், கேப்பாரிக்கி மதி எங்கெ போச்சு" ன்ர மாதிரி, நம்ம இந்த மாதிரி கட்டுக்கதெகளை நம்புறது, எம்பூட்டு புத்தி சாலிகளாடுப் போச்சு!

130. "கொரங்குக்கி குடை வெட்டப் போட்டாப்லெ" நம்மளுக்கும் வெள்ளைக்காரருக்கும் சண்டை மூட்டுறதுக்கு எல்லா மாதிரி கோளாறும் ஜெர்மன்காரெனு செய்யிறான். 131. இதெல்லாம் நம்ம நம்பக்கூடாது. 132. "தர்மமே செயம்" ன்று நம்ம வெள்ளைக்காரரெ நம்பியிருந்து, அவங்களுக்கு இப்ப வேண்டிய எல்லா ஒதவியும் நம்ம செஞ்சா, இந்த சண்டை முடிஞ்ச ஒடனெ நம்மளுக்கு சுயராச்சியம் கெடைக்கிறதுக்கு சந்தேகமேயில்லை. 133. இப்ப சுயராச்சியம் குடுக்குறேன் குடுக்குறேன் ன்றுட்டு அப்புறம் அவங்க குடுக்காட்டா, அவங்க மனுசரா?

134. அந்த மாதிரி அசிங்கம் புடிச்ச வேலை அவங்க ஒருக்காலும் செய்யமாட்டாங்க.

135. இதெ நம்புங்க. நம்புங்க. நம்புங்க.

சின்னச் சின்னக் கதைகெ. 99

1. ஒரு ஊர்லெ ஒரு வக்கேலிருந்தாரு. 2. இவரு
வந்து ரொம்ப படிச்சவரு. 3. வேலையிலெ ரொம்ப
கெட்டிக்காரரு. 4. அந்த ஊர்லெ ஒரு ஏழைப்
-பையனிருந்தான். 5. இவனுக்கு, பள்ளிக்கொடத்
-லெ படிக்க காசில்லாமெ, பிச்சையுங் கிச்சையும்
எடுத்து எப்பிடியோ படிச்சு, பரிச்சையிலெ
தேறிட்டான். 6. இவனுக்கு வக்கேலு வேலெ செய்ய
பிரியமாருந்துச்சு. 7. அதுனாலெ அந்தப் பெரிய
வக்கேலுகிட்டப் போயி, தான் வந்த காரியத்தெ
சொன்னான். 8. அவரு இவனெப் பாத்து, "நான்
ஒனக்கு இந்த வேலையை நல்லாப் படிச்சு வச்சிர்
-றேன். 9. நீ நல்லாப் படிச்சு, ஒங்கச்சிக்காரரு
கேசுலெ மொத... கேசை ஜெயிச்சப் பெறகு,
எனக்கு பீசு ஆயிர ரூவா குடுத்திர்றியா" ன்னு
இவென் நெலைமெ தெரியாமெ, கேட்டாரு.
10. அதுக்கு இவென் "நல்லதுங்கையா. தாங்க
இஷ்டம்போலெ செய்யலாமுங்க" ன்னான்.
11. ரெண்டு பேரும் வேலையை ஆரம்பிச்சாங்க.
12. பையென் வந்து, சட்டங்களையெல்லாம்
(…களா) தண்ணிப்பாடமா படிச்சிட்டான். 13. வக்கேலு
இதை நல்லா கண்டுக்கிட்டாரு. 14. ஒருநா, அவரு
இவனெப் பாத்து, தம்பி! 15. நம்ம முன்னெ பேசுனபடி
நீயி ஒரு கேசு நடத்தணும் ன்னாரு. 16. அதுக்கு
இவென், ஐயா! எனக்குப் பிரியமில்லிங்க" ன்னான்.
17. வக்கேலுக்கு கோவம் வந்துருச்சு. 18. ஒடனே
இவென் மேலெ கேசு போட்டுட்டாரு.
19. வாய்தான்னைக்கி ரெண்டு பேரும் கச்சேரிக்கி
போனாங்க. 20. சாச்சி இதை விசாரிச்சாரு.
21. குறுக்குக் கேள்வி என்னமும் இருந்தா கேக்குறதுக்கு
சாச்சி வந்து பையனுக்கு உத்தரவு குடுத்தாரு.
22. பையென் வக்கேலெப் பாத்து, "ஐயா, நீங்க ஏன்
என்னெ இப்பிடி கச்சேரிக்கி இழுத்தீங்க?
23. இப்பிடிச் செய்யிறதுலெ ஒங்களுக்கு என்ன லாவம்?
ன்னான்.

24. அதுக்கு வக்கேலு, "ஏன், நம்ம பேசுன அந்த
ஆயிர ரூவா தான்" ன்னாரு. 25. அதுக்கு பையென்
"ஐயா, அது சாத்தானுங்க. 26. ஆனா, நான் வந்து
இப்ப, வேறெ கச்சிக்காரருக்காக பேசலீங்க.
27. எனக்காகவே நாம் பேசுறென். 28. அதுனாலெ,
நான் ஜெயிச்சிட்டாலும் ஒங்களுக்கு ஒண்ணுமி
-ல்லெ. 29. நீங்க ஜெயிச்சிட்டாலும் ஒங்களுக்கு
ஒண்ணுங் கெடைக்காது நம்ம பேச்சுப்படி.
30. என்னா, மொத...க் கேசு கச்சிக்காரருதெ நானு
எடுத்துப் பேசலை. 31. நீங்களே நல்லா யோசிச்சுப்-
-பாருங்க" ன்னான். 32. பெரிய வக்கேலு கேசிலெ
தோத்துப் போயி வெக்கப்பட்டுப் போயிட்டாரு.
33. சாச்சியும், பையென் சொன்னது நெசந்தான்
ன்னு கேசை ரத்துப்பண்ணிட்டாரு.

உன்னொரு வக்கேலு கதை.

1. ஒரு பெரிய பணக்காரென் கடம்பட்டுப் போய்ட்டான்.
2. கடங்காரென் இவென் மேலெ கேசு போட்டுட்டான்.
3. இவென் ஒரு வக்கேலுகிட்டப் போயி சங்கதியெச்-
-சொன்னான். 4. வக்கேலு இவனெப்பாத்து, அப்பா!
நான் கேசை ஜெயிச்சர்றென். 5. ஆயிர ரூவா பீசு
நீ குடுப்பியா" ன்னாரு. 6. அவென், "சரி" ன்னான்.
7. வக்கேலு இவனெப்பாத்து, சாச்சி ஒன்னியெ, என்ன
கேள்வி கேட்டாலுஞ்சரி. 8. நிய்யி, "பெப்பே" ன்னு
மாத்தரம் சொல்லு" ன்னாரு. 9. அவென், "சரி" ன்ட்டான்.
10. கேசு நடந்துச்சு. 11. சாச்சி கேட்ட கேள்விக்கெல்லாம்
இவென் "பெப்பே" ன்னான். 12. அப்ப வக்கேலு எந்திரிச்சு
சாச்சியெப்பாத்து "தொரைகளே! இவென் பெறந்தது
-லெருந்து ஊமை. 13. இவனெ நம்பி ஆரு கடென்
குடுப்பா? ன்னாரு. 14. அது நாயந்தான் ன்னு நெனைச்சு
சாச்சியும், கேசை தள்ளுபடி செஞ்சுட்டாரு.
15. கச்சேரிக்கி வெளியெ வந்து, ரொம்ப சந்தோசமா
வக்கேலு அவனெப்பாத்து, "என்னப்பா! சந்தோசந்தானே
எங்கெ, என் ரூவாயெக்குடு" ன்னாரு. 16. அதுக்கு அவென்
"பெப்பே" ன்னான். 17. வக்கேலு மெரண்டு போயி,
18. "என்னப்பா! கேலியா பண்றெ? நான் ஒனக்குச்செஞ்ச
ஒதவிக்கி எனக்குமா பெப்பேன்னு சொல்றெ" ன்னாரு.
19. அதுக்கு அவென், "ஒனக்கும் பெப்பே, நொப்பனுக்கும்
பெப்பே" ன்னுட்டு அவெம்பாட்லெ போய்ட்டான்.

2. Order of words.

அவுங்களுக்கு ரொம்பக்காலமா புள்ளையில்லாமெருந்துச்சு.

1. Indirect object – Pronoun.
2. Adverbial phrase of time.

Pronouns.

அவுங்க 2, இவுங்க, 3.

// 3. [illegible]

[illegible]

[illegible], 7 to allot.

18. புள்ளெகிட்டெயெ இருக்கது வழக்கம்.

<u>used</u> } to be near the child
<u>was</u> wont }

‡ Signifies, entered in note books.

Gratitude of a Mongoose, and foolishness of a woman.

[6]

1.‡ ஒரு ஊருலெ ஒரு புருசனும் பொஞ்சாதியும் இருந்தாங்க.
2.‡ அவங்களுக்கு ரொம்பக் காலமா புள்ளெயில்லாமெ இருந்துச்சு.
3. இவங்க என்னென்ன சாமிகளையோ கும்பிட்டாங்க.
4. கடேசியிலெ இவங்களுக்கு ஒரு ஆம்பளெப் புள்ளெ பொறந்துச்சு.
5. இந்தப் புள்ளெயெ ரெண்டுபேரும் ரொம்ப ஆசெயா வளத்தாங்க.
வெதம் வெதமா 6. இந்தப் புள்ளெக்கு வெதம் வெதமா சட்டெ போட்டாங்க.
7. புள்ளெக்குப் பேரு வைக்கிற அன்னைக்கு பெரிய விருந்து வச்சாங்க.
8. அதுக்கு ஊரு இந்தர அன்னைக்கு உண்ணுங் விருந்து வச்சாங்க.
9. தாய் புள்ளெக எல்லாம் இந்தப் புள்ளெக்கு ரொம்ப எதுங்கிருந்தாங்க.
புள்ளெஆசெக்காக - for desire of a child. 10.‡ இவங்க வந்து ஒரு கீரிப்புள்ளெ வளத்துக்கிட்டிருந்தாங்க.
11. புள்ளெ பொறக்கறதுக்கு முன்னெயே, புள்ளெ ஆசெக்காக, இவங்க இதெ வளத்துக்கிட்டிருந்தாங்க.
போஷ்டு வளத்து = etc. 12. இதுக்கும் இவங்க வந்து, வேண்டிய சாப்பாடு போட்டு வருந்து இருந்து ரொம்ப பிரியமா வளத்துக்கிட்டிருந்தாங்க.
13. புள்ளெ பொறந்தப் பொறகும் இவங்களுக்கு இது மேலெ இருந்த பிரியம் போகலெ. 14. ஜாஸ்திதான் இருந்துச்சு.
நன்றியறிதல் 15. அதுனாலெ இதுவும் அவங்களுக்கு ரொம்ப நன்றியாயிருந்துச்சு.
16. இப்படியிருக்கையிலெ ஒருநா தகப்பன் எங்கெயோ போயிட்டான். 17. தாயும் தண்ணிக்குப் போயிட்டா.
18. வீட்டுலெ ஒருத்தரும் இல்லாத நேரத்துலெ, எப்பவும் இந்தக் கீரிப்புள்ளெ புள்ளெகிட்டயே இருக்கிறது வழக்கம்.
19. புள்ளெ நல்லா, பாயிமேலெ தூங்கிச்சு.
எங்கிட்டோருந்து 20. எங்கிட்டோருந்து ஒரு பாம்பு வந்து, புள்ளெ
தலைமாட்டு by the head side. தலைமாட்டுக்கிட்ட நின்னு படமெடுத்துச்சு.
21. புள்ளெயெ, பாம்பு கொத்திடுமோ என்னமோண்ணு நெனைச்சு, கீரிப்புள்ளெ வந்து, ஒரே பாச்சலாப் பாஞ்சு பாம்பெக் கடிச்சுக் கொன்னுடுச்சு.
22. இது வாயெல்லாம் ரத்தமாயிருந்துச்சு.
23. பாம்பெக் கொன்னதுனாலெ தாயி வந்து இது மேலெ சந்தோஷப்படுவாண்ணு நெனைச்சு உக்காந்திருந்துச்சு.
24. இப்படியிருக்க, தாயி வந்து, கீரிப்புள்ளெ வாயிலெ ரத்தத்தைப் பாத்து, புள்ளெயெத்தான் கொன்னுடுச்சுண்ணு நெனைச்சு, கொடத்தெ அதுமேலெ போட்டு கொன்னுட்டா.
25. உள்ளெ போயிப் பாத்தா. புள்ளெ சொகமா தூங்கிச்சு.
26. இந்தத் தடிக்களுதை புத்தியெ பாத்திங்களா?

Judas betraying Jesus.

யூதாஸ் வந்து ஏசுவானவரை காட்டிக் குடுத்தது.

to give away?

1. ஒருநாள் ஏசுவானவரு என்ன செஞ்சாராம்:—
2. தான் சீசருவளெ மூணு பேத்தை மாத்திரம் கூட்டிக்கிட்டு ஒரு மலைமேலை ஏறுனாராம். 3. அங்கெ போயி மௌனங்காலலை நின்னு‡ ஜெபம்பண்ணிக்கிட்டிருந்-தாராம். 4. அதொரு வெயாளக்கெளமெயாம்.
5. இவரும் சீசரும் மலைமேலையிருக்ற நேரத்துலெ அந்த யூதாசு என்ன பண்ணுனானாம்:—
6. ஏசுவானவரு விரோதிககிட்டப் போயி, "சாமிகளே! நீங்கமொ~~[illegible]~~த்தாம் எனக்கு முப்பது ரூவா குடுத்திட்டீங்கன்னா, நான் வந்து, அந்த ஏசுவானவரை காட்டிக்குடுத்துர்றென்"ன்னானாம். 7. அதுக்கு அவனுக எல்லாம் சம்மதிச்சுக்கிட்-டானுகளாம். 8. அப்ப இவென் என்ன சொன்னானாம்:— "அப்ப சித்தாறுங்க சாமிகளே! எல்லாம் எங்கூட வாங்க. 9. நான் ஆருக்கு முத்தங்குடு-க்குறெனோ அந்த ஆளெப்புடிச்சுக்கங்க.‡
10. அதுதான் ஏசுவானவரு"ன்னு சொல்லி எல்லாத்தையும் அந்..த இருட்டுக்குள்ளை கூட்டிக்கிட்டுப் போனானாம். 11. இவனுகள்லாம் என்ன செஞ்சானுகளாம்:— 12. ஆளுக்கொரு தீவெட்டியையும், ஒரு கம்பையும், ஒரு வெட்-ரவாளையும் எடுத்துக்கிட்டு இவென்கூட போனானுகளாம். 13. ஏசுவானவரு வந்து, ஜெபம் இபம் எல்லாம் முடிச்சிட்டு‡ ஒக்காந்துக்கிட்-டிருந்தாராம். 14. யூதாசு வந்து, எல்லாத்துக்கும் முன்னுக்குப் போயி ஏசுவானவருக்கு முத்தங்குடுத்தானாம். 15. ஒடனே அவனுக என்ன செஞ்சானுகளாம்:— 16. அவரைப்புடிச்சு-க்கிட்டானுகளாம். 17. அப்ப இவரு வந்து, அவனுகளைப்பாத்து, "என்னப்பா! என்னியெ திருடென்னு நெனைச்சா இந்தமாதிரி வந்திங்க?‡ 18. என்னமோ, இதுவும் ஒங்க காலந்தான்"ன்னு சொல்லி அவனுககூட போனாராம்.

4. For the wood was so thick.

[illegible], [illegible] [illegible],

[illegible] [illegible] [illegible]

திமிர் வாதக்காரென் சொஸ்தமானது.

103

‡ Doubtful entered in notebook.

1. ஒரு நாள் ஏசுவானவரு ஒரு வீட்டுக்குள்ளெ
பெரசங்கம் பண்ணிக்கிட்டிருந்தாராம்.

(1) A man who ... that.

2. அப்ப வந்து, ஒரு நாலஞ்சு பேரு, கைகால்
மொடங்கினவென் ஒருத்தனெ, தூக்கிட்டு

(2) Some carrying ...

வந்தாங்களாம். ‡ 3. வந்தா... உள்ளுக்குப் -
போறதுக்கு எடமேயில்லியாம். 4. என்னு,
சனக்கூட்டம் வந்து, அம்புட்டு சாஸ்தி

(3) Why pursuit

-யாருந்துருக்கு. ‡ 5. அதுனாலெ இந்த நாலுபேரும்

(4) Memorise

என்னு செஞ்சாங்களாம் :- 6. கூரைமேலெ
ஏறி, ஓட்டைப் பிரிச்சு, சீக்குக்காரனெ
படுக்கையிலெ வச்சு வாக்குலெ, ஏசுவானவ
-ருக்கு முன்னுக்கு எறக்குனாங்களாம்.
7. ஏசுவானவரு வந்து, அவுங்க விசுவாசத்தை
கண்டுக்கிட்டாராம். 8. ஒடனே என்னு செஞ்
-சாராம்....:- 9. சீக்குக்காரனைப்பாத்து,

(5) Note Verse.

"மகனே! ஒம்பாவத்தை மன்னிச்சுட்டேன்" ‡
ன்னாராம். 10. இவரு இப்பிடிச் சொல்லி, வாயி
-மூடுமுன்னெ, அங்கிருந்தவுங்கெல்லாம்
"பாவத்தை மன்னிக்கிறதுக்கு இவென் யாரு"
ன்னு சொல்லி முணுமுணுத்தாங்களாம்! 11. இது
இவருக்கு தெரிஞ்சுக்கிருச்சு. 12. அவரு என்னு
சொன்னாராம் :- "அண்ணெமாரே! தம்பிமாரே!
நீங்க ஏன் இப்பிடி முணுமுணுக்கிறீங்க? 13. நானு
வந்து, கடவுளுக்கு மகென் ன்னு ஒங்களுக்கு
காமிக்கிறதுக்குத்தான் இப்பிடிச் சொன்னேன்"
ன்னு சொல்லி, சீக்குக்காரனைப்பாத்து,
14. "அப்பா! நீய்யி எந்திரிச்சு, ஒந்துணிமணி
யெல்லாம் எடுத்துக்கிட்டு வீட்டுக்குப்போன்"
-னாராம். 15. இவரு சொன்னதுதான் தாம்ஸம்.
16. அவென் டபாடான்னு எந்திரிச்சு, அவரு
காலுலெ விழுந்து கும்புட்டுட்டு, ரொம்ப
சந்தோசமா, ஓட்ட ஓட்டமா, வீட்டுக்கு
ஓடிட்டானாம். 17. இதைப்பாத்தவங்கெல்லாம்
ஆச்சரியப்பட்டாங்களாம்.

Paralytic healed 104

Luke V, 18.

One day, Jesus was preaching into a certain house. At that time, four or five people came carrying a man whose hands and legs were useless. As they came, there was no room to get inside at all. For, the crowd of people was so thick. Therefore, what these four people did is as follows:— They climbed up the roof, separated the tiles, and lowered down the sick person as he was in the bed in front of Jesus. Jesus found their faith. What He did immediately is as follows:— Addressing the sick person, He said, "O, Son! I forgave your sin."
Before He could shut his mouth, having said thus, all the people that were there murmured saying "Who is he to forgive sins?" He understood this. What He said is as follows:— "O, elder brothers! O, younger brothers! Why are you murmuring like this? I said like that, just to show you (prove) that I am the Son of God." Having said thus, He told the sick person, "O, boy! get up, take all your clothes and go home". No sooner He said this than he got up very quickly, fell at His feet, worshipped Him and ran to his house very fast with happiness. All the people who witnessed this wondered.

3. குடியிருக்கிறோம் - Note Present tense.

‡ Denotes entered in note book.

பேய்புடிச்சவென் சொகமானது

Gadarene Demoniac

1. ஒருநா ஏசுவானவரு ஒரு மலைப்பக்கம் போனாராம்.‡ 2. அங்கெ ஒரு பேய்புடிச்சவென் இருந்தானாம். 3. இவென் வந்து, எப்பவும் கல்றெயிலெ தான் இருயிருக்கிறதாம்.‡ (1)
4. இவனுக்குச் சோறுங் கெடையாதாம்.
5. தண்ணியுங் கெடையாதாம். 6. இவென் எப்பிடித்தான் உசிரோடிருந்தாண்ணு தெரியலை. 7. ஆனாக்க இவனை என்னு பண்ணுவாங்களாம் (3)‡ :- 8. இவனைச் சங்கிலியிலெ புடிச்சு கட்டிப் போட்டுவாங்களாம் (4)‡
9. இவென் என்னு பண்ணுவானாம்:— அந்த சங்கிலியெல்லாம் அறுத்தெறிஞ்சிட்டு கல்றெக்கி ஓடிடுவானாம்.
10. இப்பிடியிருக்கையிலெ இவென் ஏசுவானவரைப் பாத்தானாம் என்னு சொன்னானாம்!—
11. சாமி சாமி! நீங்க ஆருண்ணு எனக்கு தெரியும் (5)‡ 12. எங்கிட்ட என்னத்துக்கு வந்தீங்க, 13. என்னியெ கஸ்டப்படுத்தவா வந்தீங்க" ண்ணு சத்தம் போ...ட்டுச் சொன்னானாம்.‡
14. அப்ப ஏசுவானவரு அவனைப் பாத்து, "ஒன் பேரென்ன"ண்ணாராம்.
15. அதுக்கு அவென் "சாமி சாமி! ஆயிரக் கணக்கான (6) பேயி என்னியெ புடிச்சிருக்கிறதுனால எம் பேரு "லேகியோன்" ண்ணுனாம். 16. அப்ப இவரு என்னு பண்ணுனாராம்:— அந்தப் பேயெயெல்லாம் வெரட்டிவிட்டாராம். 17. பேயெல்லாம் போயி ஒரு பன்னிக் கூட்டத்துக்குள்ளெ நொளைஞ்சு அம்புட்டு பன்னியெயும் கடலுக்குள்ளெ (7) கொண்டு தள்ளிருச்சாம். 18. பன்னியெல்லாம் செத்துப் போயிருச்சாம்.
19. பேய் புடிச்சவென் சொகமாயிட்டானாம்.
20. சனங்களெல்லாம் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டாங்களாம்.

I

ஒரு மனுசனுக்கு ரெண்டு மகனுக இருந்தானுக.
அவனுகள்லெ எளையவென் தகப்பனெப்பாத்து "ஐயா எ அப்பா
சொத்துலெ எனக்கு வர்ற பங்கெ எனக்குத் தரணும்"ன்னான்.
அப்பிடியே அவென் அவனுகளுக்கு தான்சொத்தெப் பங்கிட்டுக்
குடுத்தான். கொஞ்ச நாளைக்குப்பெறகு, எளைய மகென்
எல்லாத்தியும் சேத்துக்கிட்டு தூர தேசத்துக்குப் பெறப்பட்டு
போயி அக்கிரமமா பொளெச்சு தான்சொத்தெ அளிச்சுப்
புட்டான். எல்லாத்தியும் அவென் செலவளிச்ச பெறகு
அந்த தேசத்லெ பெரிய பஞ்சம் வந்துச்சு. அப்ப அவென்
கஷ்டப்படத் தொவங்கி அந்த நாட்டுக்குடியானவன்கள்லெ
ஒருத்தன்கிட்டப் போயி ஒட்டிக்கிட்டான். அந்த
குடியானவென் அவனெ தான் வயலுகள்லெ பண்ணி
மேய்க்க அனுப்புனான். அப்ப பண்ணி தின்ற தவிட்டுலெ
தான் வயித்தெ ரொப்ப ஆசெயாருந்தான். ஒருத்தனும்
அதை அவனுக்குக் குடுக்கலெ. அவனுக்குப் புத்தி தெளிஞ்சபோது
அவென் "எந்தகப்பெங்கிட்டருக்கிற கூலிக்காரு எத்தினி
யோ பேருக்கு வேண்டிய (திருப்தியா) சாப்பாடு இருக்கு.
ஆனா நான் வந்து பசியாலெ சாகுறென். நான் எந்திரிச்சு
எந்தகப்பெங்கிட்டப் போயி "அப்பா, நான் சாமிக்கு
விரோதமாவும் ஒங்க முன்னுக்கும் பாவஞ்செஞ்சென்.
இனிமேலு ஒங்க மகென்னு சொல்றதுக்கு நான் பாத்தி
ரென்லெ. ஒங்க கூலிக்காரர்லெ ஒருத்தனா என்னெ
வச்சுக்கங்க."ன்னுவேன்னு சொல்லி, எந்திரிச்சு, பெறப்
பிட்டு, தந்தகப்பெங்கிட்ட வந்தான். அவென் தூரத்லெ
வர்றபோதே அவென்தகப்பென் அவனெக்கண்டு மனம் எளகி
ஓடியாந்து அவென் கழுத்தெக் கட்டிக்கிட்டு அவனுக்கு
முத்தங்குடுத்தான். மகென் தகப்பனெப்பாத்து "அப்பா!
சாமிக்கு விரோதமாகவும் ஒங்க முன்னுக்கும் பாவஞ்செஞ்சென்.
இனிமேலு ஒங்க மகென்னு சொல்றதுக்கு நான் பாத்திரென்லெ
ன்னு சொன்னான். அப்ப தகப்பென் தான் வேலைக்காரரெப்பாத்து
"நீங்க வெலெ ஒசந்த உடுப்பெக்கொண்டாந்து இவனுக்கு
உடுத்தி, இவென்கைக்கு மோதரத்தெயும் காலுக்கு செருப்பெ
யும் போடுங்க. கொளுத்த கண்ணுக்குட்டியெக் கொண்டாந்து
அடிங்க. நம்ம சாப்பிட்டு சந்தோசமாருக்கலாம்.
என் மகனுன இவென் செத்தான். திரும்பவும் உயிரானான்.
காணாமெப்போனான். திரும்பவும் காணப்பட்டான்"ன்னு
சொன்னான். அப்பிடியே அவுங்க சந்தோசப்படத்
தொ(வ)டங்குனாங்க. அவென் மூத்த மகென் வயல்லெருந்தா
அவென் திரும்பி வீட்டுக்கிட்ட வர்றபோது மேளவாத்தியத்தெ
யும்

II

ஆடல் பாடலையும் கேட்டு வேலைக்காரர்லெ
ஒருத்தனைக் கூப்புட்டு, "இதென்னண்ணு" விசாரிச்சான்.
அதுக்கு அவென் "ஒங்க தம்பி வந்தாரு, அவரு மறுபடியும்
சொகத்தோடெ ஒங்கய்யாகிட்ட வந்து சேந்ததுனாலெ
அவருக்காக கொழுத்த கண்ணுக்குட்டியெ அடிக்க
வச்சாரு" ண்ணான். அப்ப அவென் கோவப்பட்டு
உள்ளெ போக மனசில்லாமெ இருந்தான். ஆனா
தகப்பென் வெளியெ வந்து அவனெக் கெஞ்சிக் கூப்
புட்டான். அதுக்கு அவென், தகப்பனெப்பாத்து, "இதோ
இத்தினை வருஷமா நான் ஒங்களுக்கு வேலை செஞ்சு,
எப்பவும் ஒங்க உத்தரவெ மீறாமெ இருந்தும், என் சிநேகித
ரோடெ நான் சந்தோசமா இருக்க ஒரு நாளும் எனக்கு
ஒரு ஆட்டுக்குட்டிகூட குடுக்கலெ. வேசிககிட்ட
ஒங்க சொத்தை அழிச்சுப் போட்ட ஒங்க மகனா இவென்
வந்தவொடனெ கொழுத்த கண்ணுக்குட்டியெ இவனுக்கு
அடிக்க வச்சிங்களே" ண்ணான். அதுக்கு தகப்பென்
"மகனே, நீ எப்பவும் எங்கூட இருக்கெ. எங்கிட்ட
இருக்கதெல்லாம் ஒன்னதா இருக்கு. ஆனா ஒந்தம்பியான
இவென் செத்தான். திரும்பவும் உயிரானான். காணாமெப்
போனான். திரும்பவும் காணப்பட்டான். அதுனாலெ
நம்ம சந்தோசங் கொண்டாடணுமே" ண்ணான்

9. 1 min.
இவெஞ்செத்தா நமக்கென்னடான்னு நெனெச்ச

நல்ல சமாரியனென் கதை.

1. நல்ல உண்மையான சிநேகிதென் ஆருன்னு
வெவரிச்சுக்காட்றதுக்கு உதாரணமா, ஏசுவானவ
-ரு அந்தக்காலத்துலெ என்னு சொன்னுருன்னு,
ஒருநா ஒரு மனுசென் வழிப்பெரயாணமா
போனானாம். 2. அவென்கிட்ட ரொம்ப காசிருந்துச்சாம்.
3. இவென் போறான்னு ஒரு அஞ்சாறு கள்ளப்
-பெயலுக்கு தெவகல் கெடைச்சுச்சாம். 4. இவனுக
என்னு பண்ணுனாம் :- 5. வழிமறிச்சு பதிங்கி
-க்கிட்டிருந்தானுகளாம். 6. வழிப்போக்கனை கண்டதும்
அவென்மேலெ பாஞ்சு, அடியடின்னு அடிச்சு,
காசு கீசு துணி கிணி அம்புட்டையும் புடுங்கிக்கிட்டு,
அவனை இத்துயிரா விட்டுப்புட்டு ஓடீட்டா
-னுகளாம். 7. அவென் பா...வம், அரெ உசுரா
கெடந்தானாம். 8. இப்பிடியிருக்கையிலெ, ஒரு
ஒசந்த சாதிக்காரென் அதே வழியா வந்தானாம்.
9. அவென் தூரத்லெ நின்னு, இவனைப்பாத்து,
இவென் செத்தா நமக்கென்னடான்னு நெனைச்சு,
ஒதவி கிதவி ஒண்ணுஞ்செய்யாமெ அவெம்பாட்டுலெ
போயிட்டானாம் 10. கொஞ்ச நேரங்களிச்சு, உண்
-ணொருத்தென் அங்கிட்டு வந்தானாம். 11. இவென்
ஒரு போதகராம். 12. இவனும் அவனைப்பாத்து,
மொதல்லெ வந்தவென் எப்பிடி நெனைச்சுக்கிட்டு
போனானோ, அப்பிடியே போயிட்டானாம்.
13. கடேசியிலெ ஒரு தாந்த சாதிக்காரென்,
குருதைமேலெ ஏறிக்கிட்டு வந்தானாம். 14. இவென்
அவனைப்பாத்ததும் குருதையைவிட்டு கீளெ எரங்கி
-னானாம். 15. அவென் காயத்தையெல்லாம் கழுவுனானாம்
16. அதுமேலெ எண்ணையெ ஊத்துனானாம்.
17. தாந்துணியெத்தானு கிளிச்சு, காயத்தை கட்டுனானாம்.
18. எல்லாஞ்செஞ்சுட்டு ரொம்ப மன எரக்கமா
குருதைமேலெ அவனை தூக்கி வச்சு, ஒரு சத்த-
-ரத்துக்குக் கொண்டு போனானாம். 19. அங்கெ போயி
அவனை கீளெ எரக்கினானாம்.

P.T.O

20. அப்பரம் வந்து, அவென், சத்தரக்காரனைப்பாத்து,
“ அப்பா ! இந்தா ரெண்டு ரூவா. 21. இவென்—
செலவுக்காக கிய்யி இதை வச்சுக்க.
22. இவனுக்காக கிய்யி, உண்ணம் என்னமாவது
ஜாஸ்தி செலவளிச்சிருந்தியன்னு, நானு
திரும்பி வர்றபோது ஒனக்கு குடுத்துர்றென்.
23. கிய்யி ஒண்ணும் பயப்புடாதெ” ன்னுனும்—
ன்று ~~சொன்னுரு~~ சொல்லி,
குத்துயிராக் கெடந்தவனுக்கு ஒதவி செஞ்ச—
வென்தான், அவனுக்கு உண்மையான சிநேகிதென்—
ன்னு டு.

Good Samaritan

To describe who is a good and true friend, what Jesus said those days for an example, is as follows:—

